# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 31 செவ்வாய்க்கிழமை (16.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 263




09 இலங்கைக்கு எதிராக உலகில் சிலர்



14 கிடைக்கும் வரை ஓயாது தமிழகம்



25 முதலிடம் என்பது முக்கியமல்ல

**கல்விச்சுடர்**

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் படிமுறைப் பரீட்சை இல.14 இன்விளாத்தன்-II இன்றைய உதயனின் 16, 17 ஆம் பக்கங்களில் வெளியாகி உள்ளது.

கிறீஸ்பூத விவகாரத்தால் அதிருகிறது கிழக்கு

# கடற்படையினர் - மக்கள் கிண்ணியாவில் மோதல்

## துப்பாக்கிச்சூட்டில் 3 இளைஞர்கள் காயம்

### கைதானோரை விடுவிக்கக் கோரி அரச அதிபர் தடுத்து வைப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 16

கடந்த சில நாள்களாகக் கிழக்கைக் கலக்கி வரும் 'கிறீஸ் பூத' விவகாரம் அங்கு பெரும் வன்முறைகளுக்கு வழிவகுத்துள்ளது. 'கிறீஸ் பூத' அச்சத்தைக் கிளப்பும் நபர்களைப் பொது மக்கள் துரத்திச் செல்லும்போது அவர்கள் இராணுவ, கடற்படை முகாம்களுக்குள் அல்லது பொலிஸ் நிலையங்களுக்குள் புகுந்து விடுவதால் பொதுமக்கள் ஆத்திரம் கொண்டு முகாம்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர்.



கிண்ணியா கடற்படை முகாம் முன்பாக டயர்களை எரித்தும் மறிப்புகளை ஏற்படுத்தியும் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் மக்கள்.

கிண்ணியாவில் நேற்றுக் காலை கடற்படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே இவ்வாறான மோதல் ஏற்பட்டுள்ளது. பொது மக்கள் கற்களைவீசிக் கடற்படை முகாமைத் தாக்கினர். இதன்போது கடற்படையினர் சுட்டதில் 3 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. பொலிஸாரின் வாகனம் ஒன்று பொதுமக்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

கடற்படையினருக்கு எதிராக மக்கள் வீதிகளில் டயர்களைக் கொளுத்தியும் கற்களால் தடைகளை அமைத்தும் ஆர்ப்பாட்

பக் 27

## நகரில் இன்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 16

உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் தாக்குதலை நடத்திய குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தும்படி கேட்டும் யாழ். நகரில் மத்திய பஸ் நிலையம் முன்பாக இன்று நண்பகல் 11 மணியளவில் பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ள இந்தப் போராட்டத்தில் நாட்டில் உள்ள 5 முக்கிய ஊடக இயக்கங்களும் ஆதரவு வழங்கிப் பங்கேற்கின்றன.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பதற்காக சிங்கள, தமிழ்ப் பத்திரிகையாளர்கள் டசின் கணக்கானவர்கள் நேற்றிரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

ஊடக சுதந்திரத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காக நடத்தப்படும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்துத் தரப்பினருக்கும் சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் அமைப்பாளர் சுனில் ஜயசேகர அழைப்பு விடுத்துள்ளார். (உ)

## சந்தேக நபர் கைதாம்

யாழ்ப்பாணம், ஓக. 16

உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் தாக்குதலை நடத்திய குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தும்படி கேட்டும் யாழ். நகரில் இன்று ஆர்ப்பாட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்றுக் காலையில் தாக்குதலின் பிரதான சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் திடீரென அறிவித்தனர்.

பக் 27

## கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அரசிடமிருந்து பதில் இல்லை

கொழும்பு, ஓக. 16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கியுள்ள கால அவகாசத்துக்குள் இலங்கை அரசு தனது பதிலை உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவேண்டும். இல்லையேல், அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க நேரிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

அத்துடன், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அரசு தனது பதிலை தெரிவிக்காமல் இருக்குமானால், அரசுக்கு பேச்சு நடத்த விருப்பமில்லை என்பதையே அது எடுத்துக்காட்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டி உள்ளது.

அரசுக்குப் பதில் அளிக்க மேலும் கால அவகாசம் தேவைப்படும் பட்சத்தில் அதனை தமிழ் கூட்டமைப்புடன் பேசிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அது அழைப்பு விடுத்துள்ளது.

பக் 27

## கிழக்கு மாகாண சபையில் கிறீஸ் பூதம்

கிழக்கை உலுப்பும் 'கிறீஸ் பூத' விவகாரம் இன்று கிழக்கு மாகாண சபையில் விவாதத்துக்கு வருகிறது.

## கச்சதீவில் கொடியேற்ற வந்த 43 பேர் தமிழகத்தில் கைது

கொழும்பு, ஓக. 16

கச்சதீவில் இந்தியக் கொடியை ஏற்றும் நோக்கத்துடன் வந்தார்கள் என்று கூறப்படும் இந்து மக்கள் கட்சியைச் சேர்ந்த 43 பேரைக் கைது செய்துள்ளதாக தமிழகத்தின் தெற்குமாவட்டமான ராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்திய சுதந்திர தினமான நேற்று, படகுகளில் கச்சதீவுக்குச் சென்று இந்தியக் கொடியை ஏற்றப் போவதாக இந்து மக்கள் கட்சியினர் அறிவித்திருந்தனர். கச்சதீவை இந்தியாவிடம் திருப்பி ஒப்படைக்க

பக் 27

## நேர்மையான அரசியல் தீர்வுக்கு இந்தியா முழு ஆதரவு வழங்கும்

### சுதந்திர தின உரையில் தூதர் காந்தா தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 16

"ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்த இலங்கை அரசின் தூர நோக்கமும், தலைமைத்துவமும் நேர்மையான அரசியல் தீர்வொன்றை அடைவதற்கு வழிவகுக்கும். அவ்வாறான அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்கு இலங்கை அரசு முன்வரவேண்டும். அந்தச் செயற்பாட்டுக்கு இந்தியா முழு ஆதரவையும் வழங்கும்."

- இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா தெரிவித்தார்.

இந்தியாவின் 65ஆவது சுதந்திர தினத்தை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் நேற்று வெகு விமர்சையாகக் கொண்டாடியது. தூதுவர் அசோக் கே.காந்தா தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்திய ஜனாதிபதி பிரதிபா பட்டீலின் சுதந்திர தினச் செய்தியின் சாராம்சத்தை

பக் 27

## சட்டத்தால் இணைக்கப்பட்டுள்ள இலங்கை மனித இதயங்களில் பிளந்து கிடக்கிறது

**தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பற்றி சிங்களவர்கள் சிந்திக்கும் நேரம் வந்துவிட்டது என்கிறார் கர்தினால் மல்கம் ரஞ்சித்**

மடு, ஓக. 16

சர்வதேசத்தின் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் இலங்கை அரசு எழுந்தமானமாக நிராகரித்து வந்தால், அனைத்துலக அரங்கில் இலங்கை தனிமைப் படுத்தப் படும் ஆபத்து இருப்பதாக எச்சரித்துள்ளார்

பக் 27




காணாமல்போன உறவுகளின் படங்களுடன் மடுத் தேவாலயத்தில் மன்றாட்டத்தில் உறவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழைக்கான கூடுதல் சாத்தியம் உள்ளது.

COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
ஆவணி 15, 2011

பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,836.53↑
மிலங்கா(MPI) 6,199.59↑

உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,518.98Mn
பங்குகளின் அளவு(No.) 60.38Mn
வியாபாரம்(No.) 18,769

விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
கொமஷ்சல் வங்கி(R1) 10.10
கென்பி(f)பி(f) ஹொட்டல் 279.00
குருவிற்ற 32.00
கொலனியல் மோட் 347.00
றேடியன்ற் ஜெம்ஸ் 105.00

குறைவு(Top 5 losers) - விலை Rs.
சொப்லாயிக் பைனான்ஸ்(R) 2.00
றோயல் பாம் 67.00
சோலவலன்ஸ் 305.00
கொமஷ்சல் வங்கி(R) 30.20
என்வயர்மென்ரல் றிசோசஸ்(W6) 30.50
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# காணி பிணக்கில் தாக்குதலுக்கு இலக்கான கோப்பாய் பெண் யாழ். ஆஸ்பத்திரியில்

## விசாரணைக்கு வந்த பொலிஸ்காரர் அடித்தார் என முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 16

காணிப் பிணக்குத் தொடர்பில் விசாரணை என்ற காரணத்துடன் வீடு தேடிவந்த கோப்பாய் பொலிஸார் தன்னைக் கடுமையாகத் தாக்கி விட்டுச் சென்றதாக பெண்ணொருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த பெண்ணின் தலையில் உட்காயம் அல்லது வேறு விதமான பாதிப்பு ஏதும் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ். ஆஸ்பத்திரியில் அவருக்குப் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன.

கோப்பாய் மத்தி, காளிகோயிலடியைச் சேர்ந்த குகானந்தன் ரஞ்சினி (வயது 40) என்பவரே பொலிஸாருக்கு எதிராகக் குறித்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாங்கள் நெடுங்காலமாக இந்தக் காணியில்தான் வசித்து வருகிறோம். இந்தக் காணியில் எம்மவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்துள்ளனர். எங்கள் பெயரில் தான் காணி உள்ளது.

இந்த நிலையில் நல்லூர், முடமாவடிப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் இந்தக் காணியைத் தங்களது காணியென கடந்த சில வருடங்களாகவே கூறிவருகிறார்.

பரம்பரையாக வாழ்ந்து வரும் எம்மை அங்கிருந்து வெளியேறுமாறு அச்சுறுத்தி வருகிறார். நாங்கள் அந்தக்காணி எமக்குரியது என்பதை உறுதிப்படுத்தி விட்டு, அமைதியான முறையில் வாழ்ந்து வருகிறோம்.

ஆனால் பிரஸ்தாப பெண் விடுவதாக இல்லை. மாதத்துக்கு இருதடவை பொலிஸாருடன் எமது வீட்டுக்கு வந்து இங்கிருந்து வெளியேறுமாறு மிரட்டி வருகிறார்.

இதற்கிடையில் எமக்கு வீட்டுத்திட்டம் கிடைத்தபோது வீடுகட்டும் பணியில் இறங்கிய போது அதனை நிறுத்துமாறு கோரி பல வழிகளிலும் தொந்தரவு கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து காணி உறுதிப்பத்திரங்களை பிரதேச செயலகத்துக்குக் கொண்டு சென்று காட்டி அது தொடர்பாக தமது கிராம சேவகருக்கும் தெரிவித்தோம். அவர்கள் அதனை உறுதிப்படுத்திவிட்டு வீடும் கட்ட முடியும் எனவும் காணி உங்களுடையது தான் எனவும் தெரிவித்ததை அடுத்து வீடும் கட்டி முடிக்கப்பட்டது.

அந்தப் பெண் இன்னும் விடுவதாயில்லை. கடந்த ஞாயிற்றுக் கிழமை தனது வீட்டில் கணவன் இல்லாதவேளை கோப்பாய் பொலிஸாருடன் பொலிஸ் வாகனத்தில் வீட்டுக்கு வந்தார். ''உமது கணவன் எங்கே?'' எனக்கேட்டனர். அவர் வெளியே சென்று விட்டதாகப் பதிலளித்தேன். அந்தச் சமயம்வந்த பொலிஸார் ஒருவர் எனது தலையில் பலமாக அடித்தார். எனக்குத் தலை சுற்றியது. உடனே எனது வீட்டுக்காரரை வரவழைக்குமாறு அவர்கள் வற்புறுத்தினர்.

கணவனும் வந்த பின்னர் அங்கிருந்து வெளியேறும் படியும் இது தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் எனவும் கூறி காணி உறுதிப்பத்திரங்களைத் தருமாறு கேட்டனர். நான் மறுத்துவிட்டேன். மறுநாள் உறுதியுடன் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு கூறி விட்டு பெண்ணும் பொலிஸாரும் வெளியேறிச் சென்றனர்.

அன்று மாலை எனக்குத் தலையில் நோவு அதிகரித்து வேதனையாக இருந்தது. தலையில் உட்காயம் ஏதும் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் கோப்பாய் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். அங்கு வார்ட்டில் தங்க வேண்டும் என்று மறித்து விட்டார்கள். பின் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றினார்கள்.

தற்போது இங்கு சிகிச்சை பெற்று வருகிறேன். வைத்திய சாலைப் பொலிஸார் விசாரணை நடத்தினர்-என்றார். (ஒ-4)

# ஒடியல் கூழை ரசித்து, ருசித்து குடித்த உலக வங்கி அதிகாரிகள்

தென்மராட்சி, ஒக. 16

ஒடியல் கூழை உலக வங்கி அதிகாரிகள் ரசித்து, ருசித்துக் குடித்தனர்.

உலக வங்கியினால் தென்மராட்சி பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்களைப் பார்வையிட வருகை தந்த உயர் அதிகாரிகளுக்கு மறவன்புலோவில் மதிய உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

யாழ். அரச அதிபரின் ஏற்பாட்டில் மீன் மற்றும் தேவையான பொருள்கள் போட்டுத் தயாரித்த கூழ் இந்த அதிகாரிகளுக்கு மதிய உணவுக்கு முன்னர் பரிமாறப்பட்டது. அதன் ருசியினால் கவரப் பட்ட அதிகாரிகள் தயார் செய்யப்பட்ட கூழ் முழுவதையும் குடித்துத் தீர்த்தனர்.

அதன்பின்னர் அவர்கள் மதிய உணவை உட்கொண்டுவிட்டு வெகு திருப்தியுடன் விடைபெற்றனர்.

(ஒ-207)

# எண்கோண வடிவில் தீர்த்தக்கேணி



பிரான்பற்று, பண்டத்தரிப்பு பெரியவளவு முருகமூர்த்தி ஆலயத்தில் புதிதாக எண்கோண வடிவிலான தீர்த்தக்கேணி புனரமைக்கப்படுவதைப் படத்தில் காண்கிறீர்கள்.

ஆறுமுக சுவாமி வாசலில் ஆலயத்தின் தெற்குப் பக்கமாக இந்தத் தீர்த்தக்கேணி அமைந்துள்ளது.

அமரர் சு.சின்னராசா ஞாபகார்த்தமாக அவரின் மகளால் (அவுஸ்திரேலியா) கேணி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கேணிக்குள் அடுத்த வருடத்தில் சுவாமி தீர்த்தமாடக் கூடியவாறு திருத்தப் பணிகளை விரைவுபடுத்தியுள்ளனர் என உபயகாரர் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-130)

# 'கொலைக்களம்' ஒளிபரப்ப இருந்த சி.தமிழ் சேவை நேற்று ரத்தானது

யாழ்ப்பாணம், ஒக. 16

இலங்கையின் 'கொலைக்களம்' வீடியோவை நேற்று இரவு 10.30 மணிக்கு ஒளிபரப்பப் போவதாக அறிவித்த இந்தியத் தொலைக்காட்சியான 'சி' தமிழ் தொலைக்காட்சி அலைவரிசையை நேற்றுப் பார்வையிட முடியாது போயுள்ளதால் பார்வையாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இந்த அலைவரிசை தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒளிபரப்பவில்லை என நேற்று கேபிள் ரிவி வழங்குநர்கள் ஊடாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் கொலைக்கள காட்சியை ஒளிபரப்பப் போவதாக அறிவித்த நிலையில் குறித்த தொலைக்காட்சி அலைவரிசையை கேபிள் ரி.வி வழங்குநர்கள் நிறுத்தியிருக்கலாம் என மக்கள் தெரிவித்தனர்.

(எ-10)

# உவர்நீர் தடுப்பணை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பம்

கோப்பாய், கைதடி உவர்நீர் தடுப்பணை அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கனரக வாகனங்கள் மூலம் அணை அமைக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுகின்றன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 70 லட்ச ரூபா நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் மூலம் உவர்நீர் நன்செய் நிலங்களுள் நுளைவது தடுக்கப்படும்.

உப்பாறு என அழைக்கப்படும் கடநீரேரி இந்தப் பகுதியில் காணப்படுகின்றது. முன்னர் காணப்பட்ட உவர்நீர்த் தடுப்பணைகள் உடைந்து போயுள்ளமையால் மாரிகாலங்களில் உப்புநீர் வயல் நிலங்களுள் புகுந்து நிலங்கள் உவரடைந்தமையால் நெற்செய்கை மேற்கொள்ள முடியாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-38)

# நிகழ்வுகள்

## ஓய்வூதியர்களுக்கான சந்திப்பு

வரணி, ஒக.16

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தென்மராட்சிப் பிரதேச செயலக சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் மு.காசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மைவிருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலனும் சிறப்பு விருந்தினர்களாக மாகாண உதவிப் பிரதேச செயலர் கில்பேட்குணம், யாழ். மாவட்டப் பகிரங்க சேவை ஓய்வூதியத்தின் நலன்புரிசங்கத் தலைவர் வி.ஸ்ரீ சக்திவேல் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் ஓய்வூதிய அங்கத்தவர்களையும் புதிதாக சேர விரும்புபவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ற)

## கிராம அபிவிருத்திக் கூட்டம்

வடமராட்சி, ஒக.16

நெல்லியடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நாளை புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி கோயிலில் நடைபெறவுள்ளன. (ம-236)

## அறிவுறுத்தல் கூட்டம்

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மேற்பார்வையாளர், இணைப்பு நிலைய உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வலிகாமம், கோப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சகல மேற்பார்வையாளர்களையும், இணைப்பு நிலைய உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம் கேட்டுள்ளது.

(ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கிறீஸ் பூதம்' விவகாரம் ஓயவில்லை

# பொலிஸ் நிலையம், முகாம்களுக்குள் ஒளித்துக் கொள்ளும் மர்ம மனிதர் குறித்துப் பொது மக்களுக்குச் சந்தேகம்

## எல்லோரும் கூறுவதால் எப்படிப் பொய் என்று சொல்வது என்கிறார் யோகேஸ்வரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஓக.16

கிறீஸ் பூதம் எனப்படும் மர்ம மனிதர்கள் இராணுவ முகாம்களுக்குள்ளோ அல்லது பொலிஸ் நிலையங்களுக்குள்ளோ சென்று தப்பித்துக் கொள்வதாக மக்கள் கூறுவதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். ஏனெனில் ஒரு பகுதி மக்கள் மட்டும் அவ்வாறு கூறவில்லை. நாங்கள் செல்லுகின்ற கிராமங்கள்தோறும் மக்கள் இவ்வாறுதான் கூறுகின்றார்கள். எனவே மக்கள் சொல்வதைப் பொய்யென்று தட்டிக் கழிக்கமுடியாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஒரு கிராமத்தில் பிரச்சினை ஏற்பட்டால் அதனைத் தீர்த்தால் அடுத்தநாள் இன்னொரு கிராமத்தில் பிரச்சினை ஏற்படுகின்றது. இது தொடர்கதையாகச் சென்றுகொண்டிருக்கின்றது. மக்கள் திடீரென வீதிகளில் ரயர்களைப் போட்டு எரிக்கின்றனர். இவர்கள் மீது இராணுவம் தாக்க முயலும்போது பிரச்சினை பூதாகாரமாகிறது.

நேற்றுமுன்தினம் இரவு துறைநீலாவணை கிராமத்தில் இருவர் சென்றுள்ளனர். அவர்களை மக்கள் விரட்டியடித்தபோது பொலிஸ் காவலரணுக்குள் புகுந்துள்ளனர். பொலிஸாரிடம் கேட்டால் வரவில்லை என்கின்றனர். இதனால் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

### கல்முனையில் இருந்து மேலதிக பொலிஸார்

ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க கல்முனையில் இருந்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இதில் பொலிஸாரின் தாக்குதலினால் காயமடைந்த பொதுமக்கள் மூவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பொலிஸார் விரட்டியடித்துவிட்டுச் சென்ற பின்னர் மீண்டும் வந்து இளைஞர்களைக் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

பெரியபோரதீவில் பெண் ஒருவரின் மார்ப்பைக் கடித்ததாக தெரிவிக்கப்பட்டது. பின்னர் இந்தப் பெண்ணை வைத்தியசாலையில் அனுமதித்தபோது வைத்தியசாலை அறிக்கையில் மனநிலை பாதிக்கப்பட்டவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாண இராணுவத் தளபதிக்கு இங்குள்ள நிலைமைகள் தெரிந்தும் அதைக் காட்டிக் கொள்ளாமல் நடக்க முற்படுகின்றார். மக்கள் தொடர்ந்தும் சொல்கின்றனர் பொலிஸாரும் இராணுவத்தினரும் வேண்டாம் என்று. இவர்களை சமாதானப்படுத்துவதற்காகவே நேற்றுப் பொலிஸாருடன் இரண்டு கலந்துரையாடல்களில் பங்குபற்றினேன்.

மக்களைப் பொய்யர்கள், பைத்தியக்காரர்கள் என்று சொல்ல முடியாது. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட மக்கள் மட்டும் கிறீஸ் மனிதன் தொடர்பில் சொல்லவில்லை. எல்லோருமே சொல்கின்றனர். இந்தச் சம்பவங்கள் அனைத்தும் பின்னணி இல்லாமல் நடக்கவில்லை என்றார் யோகேஸ்வரன்.

(ஒ-15)

# பாதிக்கப்பட்ட கிராமங்களை பார்வையிட்டார் மாவை

அம்பாறை, ஓக.16

அம்பாறை மாவட்டத்தில் மர்மமனிதன் - கிறீஸ் மனிதன் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள பல கிராமங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்தக் கிராமங்களில் மர்ம மனிதர்களின் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களையும், பெரும் பீதியுடன் வாழும் மக்களையும் நேரில் சந்தித்துத் தகவல்களைப் பெற்றுக் கொண்ட அவர், மக்களுக்கு ஆறுதலும் கூறினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு பல கிராமங்களுக்கு நேரில் சென்ற மாவையு டன், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா இராசையா, முன்னாள் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் ஆகியோரும் உடன் சென்றனர்.

குறிப்பாகப் பாதிப்பு, பீதிக்குள்ளாகியுள்ள மக்களைக் கொண்ட தம்பிலுவில், திருக்கோயில், ஊறணி கனகர் கிராமம், குண்டுமடு உட்பட மேலும் சில கிராமங்களுக்கும் சேனாதிராசா சென்று மக்கள் அனுபவித்து வரும் திகில் அனுபவங்களைக் கேட்டறிந்ததுடன், பாதிப்புகள் தொடர்பான தகவல்களையும் பெற்றுக்கொண்டனர்.

சம்பவங்கள் தொடர்பில் அதிர்ச்சியும், கவலையும் வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தாம் சில தினங்களில் இது விடயமாக அறிக்கை ஒன்றை வெளியிட இருப்பதுடன் அரசினதும், சர்வதேச சமூகங்களினதும் கவனத்துக்குக் கொண்டு வரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஒ-30)

# பள்ளிவாசலுக்குள்ளும் கிறீஸ் மனிதர்கள் தாக்குதல் ஏழு பேர் காயம்; அமைச்சர் றிசாத் கடும் கண்டனம்

## மக்களைப் பொறுமை காக்குமாறும் கோரிக்கை

கிண்ணியா, ஓக.16

கிண்ணியா மத்திய பள்ளிவாசலுக்குள் நேற்று அதிகாலை நுழைந்த கிறீஸ் மர்ம மனிதர்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவத்தில் ஏழு பேர் காயமடைந்து கிண்ணியா தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சுமார் பத்துப்பேர் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில் கிண்ணியாவில் இடம்பெற்ற தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் கண்டிக்கப்படவேண்டியவை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும், கைத்தொழில் வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் மத வழிபாட்டுத்தலங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் புகுந்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதானது, மிகவும் கவலைக்குரிய சம்பவமாகும். சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் பாதுகாப்புத் தரப்பினரின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

பொதுமக்கள் பாதுகாப்புத் தரப்பு மீது வைத்துள்ள நம்பிக்கையை இழக்கும் செயல்கள் இடம்பெற்றுள்ளமையானது வேதனை தரும் செயல் என்றும் தெரிவித்துள்ளார் அமைச்சர் றிசாத் பதியுதீன்.

இந்தப் புனிதமிகு ரமழான் மாதத்தில் நாம் பொறுமை காத்து, இறை பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறும் அவர் அப்பிரதேச மக்களைக் கேட்டுள்ளார். (து)

# கொள்ளையர்களும், சதிகாரர்களுமே கிறீஸ் பூதங்களாக நடமாடுகின்றனர்

## அமைச்சர் வாசுதேவவின் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஓக.16

கொள்ளையர்களும், சதிகாரர்களுமே கிறீஸ் பூதங்களாக நடமாடுகின்றனர். எனவே, கிறீஸ் பூதங்கள் விவகாரத்தின் பின்னணியில் அரசு உள்ளது எனக் கூறப்படுவது கேலிக்கூத்தான விடயமாகும்.

-இவ்வாறு தெரிவிக்கின்றார் தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் அண்மைக்காலமாக கிறீஸ் மனிதன் அல்லது கிறீஸ் பூதங்கள் விவகாரம் தாண்டவம் விரித்து ஆடுகின்றது.

இதன் பின்னணியில் அரசே செயற்படுகின்றது எனக் குற்றம் சாட்டும் பிரதான எதிர்க்கட்சிகள், கிறீஸ் மனிதன் விவகாரத்தில் அரசு ஏன் மௌனம் காக்கின்றது என்று கேள்வியெழுப்பியுள்ளன.

இந்நிலையில் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும், கிறீஸ் பூதங்கள் விவகாரம் தொடர்பாகவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் 'உதயனுக்குத்' தெரிவித்தவை வருமாறு:-

கிறீஸ் பூதங்கள் என எதுவும் நாட்டில் இல்லை. இது விஞ்ஞான உலகம் என்பதை மக்கள் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயற்பட வேண்டும். கொள்ளையர்களும், சதிகாரர்களும், காடையர்களுமே கிறீஸ் பூதங்களாகச் செயற்பட்டு தங்களின் கள்ளத் தொழிலுக்கு ஏற்ற வகையில் நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

கிறீஸ் பூதங்கள் விவகாரத்தின் பின்னணியில் அரசு செயற்படுகின்றது எனக் கூறப்படுவது கேலிக்கூத்தான விடயம். அரசு ஏன் இதனைச் செய்ய வேண்டும் என சிந்திக்காமல் சிலர் கருத்துகளை வெளியிடுகின்றனர். கிறீஸ் பூதங்கள் விவகாரத்தால் எனக்குக் கூட இரவு வேளைகளில் பயணங்களை மேற்கொள்ளப் பயமாகவுள்ளது- என்றார் வாசுதேவ.

# உண்மை நிலையை அறிய கிழக்குக்கு முஸ்லிம்கள் குழு

கொழும்பு, ஓக.16

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கிறீஸ் மனிதர்களின் அட்டகாசம் பற்றிய உண்மை நிலைமையை ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்ட முஸ்லிம் குழுவொன்று கிழக்கு மாகாணத்துக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை விஜயம் செய்யவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கபீர் ஹாசிம், ஏ.எச்.எம்.ஹலீம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், மாகாண சபை உறுப்பினர்கள் ஏ.ஜே.எம். முஸம்மில், முஜிபுர் ரஹ்மான், ஜே.ஜெய்னுலாப்தீன் மற்றும் ஐ.தே.கவின் சம்மாந்துறை அமைப்பாளர் எம்.ஏ. ஹஸன் அலி ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் கிறீஸ் பூத விவகாரம் அதிகரித்து வரும் நிலையில் இந்தக் குழு அங்கு பயணம் மேற்கொண்டுள்ளது.

இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் நாளுக்கு நாள் கிறீஸ் பூத விவகாரம் எல்லை தாண்டி அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனால் மக்கள் குறிப்பாக பெண்கள் வெளியில் நடமாட முடியாமல் வீடுகளுக்குள் முடங்கிப்போயுள்ளனர்.

இந்தக் குழு உண்மை நிலையை ஆராய்ந்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நாடாளுமன்றத்திற்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.

# கிண்ணியாவில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் ஐந்து மாணவர்கள் உட்பட 24 பேர் பிணையில்

கொழும்பு, ஓக. 16

மக்களின் பலத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அடுத்து கிண்ணியா பிரதேசத்தில் கிறீஸ் மர்ம மனிதர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவர்கள் ஐவர் உட்பட 24 பேரும் நேற்றுப் பகல் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அமைச்சர்கள் குழு ஒன்றும், அதிகாரிகளும் கிண்ணியாவுக்கு நேற்று விஜயம் செய்து, மக்களுடனும், அதிகாரிகளுடனும் பேச்சு நடத்திய பின்னர் குறித்த 24 பேரையும் பொலிஸ் பிணையில் செல்ல பொலிஸார் அனுமதி வழங்கினர்.

கிறீஸ் மனிதர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கிண்ணியா பிரதேசத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவர்கள் ஐவரை பொலிஸார் நேற்று கைதுசெய்ததை அடுத்து, கிண்ணியா பிரதேச செயலகத்தை முற்றுகையிட்ட பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிண்ணியா பிரதேசத்தில் கிறீஸ் மனிதர்களின் அட்டாவடித்தனங்களால் சந்தேகத்தின்பேரில் நேற்றுக் காலை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவர்கள் ஐவர் உட்பட 24 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறும், உண்மையான கிறீஸ் மர்ம மனிதர்களை உடன் கைதுசெய்யுமாறும் வலியுறுத்தி மேற்படி பிரதேச மக்கள் கிண்ணியா பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதன் காரணமாக பிரதேச செயலகத்திலிருந்த அரச அதிபர், மேஜர் ஜெனரல் வீ.ஆர்.டி. சில்வா, கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபால் பெரேரா ஆகியோர் உட்பட அதிகாரிகள் வெளியேற முடியாது தவித்தனர்.

இந்த நிலையில், நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், வணிகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியூதீன், சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரும், சில அரச உயர் அதிகாரிகளும் அங்கு விஜயம் செய்து கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் சர்வதேச செயற்பாட்டை முடக்க மூன்று நாடுகள் பரிசீலனை நடவடிக்கை

கொழும்பு, ஓக.16

விடுதலைப் புலிகள் அமைப்பின் சர்வதேச செயற்பாட்டை முடக்கிவிடுவது தொடர்பாக மூன்று நாடுகள் தமது பரிசீலனை நடவடிக்கைகளைச் செயற்படுத்தியுள்ளதாகப் பாதுகாப்புப் பிரிவுகளின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து, ஜேர்மனி மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய இந்த மூன்று நாடுகளின் பாதுகாப்புப் பிரிவுகள் மூலம் இது சம்பந்தமான பரிசீலனை விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான இலங்கை அரசினது பாதுகாப்புப் பிரிவுகளினதும் ஒத்துழைப்பு அந்த நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாத காலத்தில் நெதர்லாந்தின் விசேட பாதுகாப்புப் பிரிவுகளின் அதிகாரிகள் மூன்று தடவைகளில் இலங்கை வந்துள்ளனர்.

தடுப்பிலுள்ள விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கியஉறுப்பினர்களை அவர்கள் சந்தித்து தகவல்களைப் பெற்றுச் சென்றிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய இரு நாடுகளான ஜேர்மனி மற்றும் சுவிற்சர்லாந்தின் பாதுகாப்புப் பிரிவுகளின் அதிகாரிகளும் கூட பல சந்தர்ப்பங்களில் இலங்கை பாதுகாப்புப் பிரிவுகளுடன் இணைந்து செயற்பட்டிருந்ததாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (ம-22)



காரைநகர் கார்த்திகேயப் புலவர் இயற்றிய திண்ணபுரம் அந்தாதி நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் இடம்பெற்றது. நூலின் முதற் பிரதியை பேராசிரியர் இ. குமாரவடிவேல் வெளியிட்டு வைக்க தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரட்ணம் பெற்றுக் கொள்கிறார். (ம-250)

# வடக்கில் நிலவிவரும் காணிப்பிரச்சினை இரண்டாண்டுகளில் தீர்த்துவைக்கப்படும்

## காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார

கொழும்பு, ஓக.16

வடக்குக் கிழக்கில் நிலவும் காணிப் பிரச்சினைகள் இன்னும் இரண்டு ஆண்டுகளில் தீர்த்து வைக்கப்படும் என்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் மக்கள் முகங்கொடுத்துள்ள காணிப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாக புதிய செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இன்னும் இரண்டு ஆண்டுகளில் காணி தொடர்பான பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார். வடக்கு, கிழக்கில் மீள்குடியமர்ந்துள்ள மக்களின் காணிகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் அழிந்தோ தொலைந்தோ போயுள்ளன. பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்தோரின் காணிகள் வேறு நபர்களால் அபகரிக்கப்படுகின்றன. சில காணிகளை ஒன்றுக்கு மேற்பட்டோர் உரிமை கோருகின்றனர். இது குறித்த பிரச்சினைகளைத் தீர்க்க விசேட குழு ஒன்று செயற்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-22)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.16

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணிக்கு சமய சொற்பொழிவுகளும், கலை நிகழ்வுகளும் இடம் பெற்றுவருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை 13 ஆம் திருவிழாவில் "சமயவாழ்வின் அவசியம்" எனும் தலைப்பில் சைவப்புலவர் நித்திய தசீதரன் சிறப்பு சொற்பொழிவை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து காரைநகர் புகழி சிவசுப்பிரமணிய அறநெறிப்பாட சாலை, கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமி அறநெறிப் பாடசாலை, மாதகல் சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை ஆகியன பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஓக.16

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் சொற்பொழிவுகளில் இன்று செவ்வாய்க் கிழமை 'முருகனும் தமிழும்' எனும் தலைப்பில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ம-311)


* * *

யாழ்ப்பாணம், ஓக.16

இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தினமும் மாலை 6.30 மணிக்கு தெய்வீக இசையரங்கு இடம் பெற்றுவருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை 13 ஆம் திருவிழாவில் எஸ். நாகராசா, எ. ஜெயராமன், என். சதீஸ்குமார், ஆர். சிவராமன், ஆகியோர் நிகழ்த்தும் இசையரங்கு இடம் பெறவுள்ளது. (ம-313)

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் வைத்திலிங்கம் இலட்சுமணன்

(பனங்கட்டி)

**தோற்றம்** 1939.07.28 — **மறைவு** 2011.07.17

ஓடி மறைந்ததையா ஒரு மாதம்
வாடி வதங்குதையா எங்கள் மனம்
தேடி அலைகின்றோம் ஐயாவே
காணவில்லையே ஐயாவை எம் கண்களுக்கு
தந்தையே உங்கள் காலடி எமது கோயில்.

கடந்த 17.07.2011 இல் காலமான எங்கள் குடும்பத்தின் அணையாவிளக்கு, அன்புத்தெய்வம் இறையடி சேர்ந்ததையறிந்து அகம் தேடி ஓடோடி வந்து ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும், பத்திரிகையில் அஞ்சலி தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், உறவுக்கப்பால் வந்து உதவி புரிந்தோருக்கும், வெளிநாடுகளிலிருந்து உடன் எமது கவலையில் பங்குகொள்ள தொடர்பு கொண்டோருக்கும், அஞ்சல் மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், உணவு பரிமாறி எம் அகம்தனில் இருந்து உறவு காத்தோருக்கும், எமது தந்தையார் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவேளை இன்முகம் காட்டி சிகிச்சையளித்த வைத்தியர்கள், பணியாளர்கள், நலன்புரி சங்கத்தினர், ஊழியர்கள் (விடுதி இல. 26) யாபேருக்கும், மலர்மாலை மரியாதை செய்தவருக்கும், இறுதி நிகழ்வில் கலந்து பஞ்சபுராணம், சிவபுராணம் ஓதியவருக்கும், இறுதிக் கிரிகைக்காக எம் தந்தையை எடுத்துச் செல்ல மலர் தண்டிகை அமைத்தோருக்கும், இறுதி ஊர்வலத்தின்போது தொழில் ஸ்தாபனங்களை மூடி அனுதாபம் தெரிவித்தோருக்கும், தாகசாந்தி அளித்தவருக்கும், சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் இறுதிக் கிரியைகளிலும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (16.08.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கோயில் வீதி,*
*மல்லாகம்.*

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சர்வதேச சமூகத்தை எதிர்கொள்வதற்கு!

''கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல்'' வடக்கு கிழக்கில் 30 வருடகாலம் நாட்டை உலுக்கிவந்த ஆயுதப் போராட்டத்தை வெளி நாட்டு ஆயுத மற்றும் ஆலோசனை யுக்திகளுடன் எதிர்கொண்டு முறியடித்துவிட்டு வெற்றி முரசம் கொட்டிக்கொண்டிருக்கும் அரசுக்கு ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையும் சனல் - 4 காணொளிக் காட்சிகளும் பேரிடியாக வந்து வாய்த்திருப்பது புதிய விவகாரம் அல்ல.

அடுத்த மாதம் 12 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகப் போகும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இந்த இரு விடயங்களும் கிளப் பப்படவிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இலங்கை அரசு நியமித்துள்ள கற்ற பாடங்கள் மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை, வரப்போகும் பேரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படமாட்டாது என்றாலும், பின்னர் ஒரு சமயம் அதனை பேரவையில் விவாதிப்பதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு சில நாடுகள் முயற்சி எடுக்கலாம் என்று கூறப்படுகின்றது.

நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதற்கு ஏற்றாற்போல், இலங்கை அரசு சர்வதேசதரங்களுக்கு அமைவாகப் போரின் இறுதி கட்டத்தில் நிகழ்த்தப்பட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ள மனித உரிமை சட்ட மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக தன்முனைப்பான விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அமெரிக்கா தொடர்ச் சியாக வலியுறுத்தி வருகிறது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் விக்டோரியா நூலன்ட் கடந்தவாரம் இது தொடர்பாக வெளியிட்ட கருத்தில், இலங்கையில் இடம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பாக முழுமையான, நம்பகத் தன்மையுடனான சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று நாம் நீண்ட காலமாக வலியுறுத்திவருகின்றோம். இலங்கை அரசு இதனைச் சுயமாக சர்வதேசத்தரத்துக்கு அமைவாகச் செய்யும் என்று எதிர்பார்க்கின்றோம் என்று ஒரு நுள்ளுப் போட்டிருக்கிறார். ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் அத்துடன் நிறுத்திவிடவில்லை.

இந்த விசாரணைகளை இலங்கை அரசு மிக விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியதோடு, அவ்வாறு செய்யாவிடில் சர்வதேச சமூகத்திடமிருந்து அழுத்தங்கள் அதிகரிக்கும், இலங்கை அரசுக்கு விரும்பமில்லாத நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டிய நிலைமை ஏற்படலாம் என்றும் எச்சரிகை செய்திருந்தார்.

இதேபோன்றதொரு எச்சரிக்கையை, பிரித்தானிய அமைச்சர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் விடுத்திருந்தது நினைவு கூரத்தக்கது. இப்போதுள்ள நிலையில், அடுத்த மாதம் நடை பெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிபுணர் குழு அறிக்கை மற்றும் சனல் - 4 காணொளிக் காட்சிகள் தொடர்பாக பல நாடுகள் பிரச்சினை கிளப்ப இருப்பது தெளிவாகி வருகிறது.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் நம்பகமான சர்வதேச விசாரணைக்கு வற்புறுத்தி வரும் நிலையில், இலங்கை அரசும் சில பல காரியங்களை மேற்கொண்டு சர்வதேச நம்பகத் தன்மையை உருவாக்கிக் கொள்ள முயற்சி செய்துவருவது தெரிகின்றது. நிபுணர் குழு அறிக் கைக்குப் பதில் தரும் வகையில் பாதுகாப்பு அமைச்சு தயாரித்த அறிக்கை பல நாடுகளுக்கும் வெளிநாட்டு தூதரகங்கள், துணைத்தூதரகங்கள் மற்றும் ஸ்தானிகரகங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த அறிக்கையில் பல குறைபாடுகள் இருப்பதாக விஷயமறிந்தவர்கள் சுட்டி காட்டியுள்ளார்கள். குறிப்பாக வன்னிப் போரை முன்னின்று நடத்திய முன் னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா பற்றிய விவரங்கள் முறையாக தொகுக்கப்பட வில்லையென்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சில மாதங்களுக்கு முன் ரஷ்யாவுக்கும் இம்மாதம் சீனாவுக்கும் சென்று இலங்கையின் நிலைப்பாடுகள் குறித்து விளக்கிவிட்டு வந்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவர்கள், பிரதானிகள் மூலமாகவும் வெளி நாட்டமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேரடியாக சில நாடு களுக்கு விஜயம் செய்தும் நிலைமைகளை விளக்கியுள்ளனர். போருக்குப் பின்னர், நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள், முகாம்களிலும், தற்காலிக கூடாரங்களிலும் அடைக்கப்பட் டிருந்த மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கு வாழ்வாதார வசதி கள் செய்து கொடுக்கப்பட்டுள்ளமை, புதிய வீட்டுத் திட்டங்கள், குளங்கள், வாய்க்கால்கள், பாதைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றமை. இவ்வாறாக அரசு மேற்கொண்டுள்ள பணிகள் யாவும் வெளிநாடு களுக்கு விலாவாரியாக எடுத்து விளக்கப்படுவதாக அரசு தரப்பில் தெரி விக்கப்படுகின்றது.

போரை நடத்தி முடித்த அரசு அந்தப் போரினால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு செய்ய வேண்டிய பணிகளே இவை. சொல்லப் போனால் இந்தப் பணிகள் எல்லாம் இன்னும் அசுர வேகத்தில் நடைபெற வேண்டும். போரை நடத்திய வேகத்துக்கு ஈடுகொடுப்பதாக அபிவிருத்திப் பணிகள் நடை பெறவேண்டும். அது அரசாங்கத்தின் கடமை, பொறுப்பும் கூட. இவை அரசியல் நோக்கத்துக்கும், தேர்தல் இலாபத்துக்குமாக நடை பெறலாகாது.

போரின் இறுதிக்கட்டத்தில் என்ன நடந்தது? மனித உரிமைகள் மீறப்பட்டனவா? போர்க்குற்றம் இடம் பெற்றதா? ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டார்களா?

அப்படியாயின் இவைகளுக்கு பொறுப்புக்கூறவேண்டியவர்கள் யார்?

இதைத்தான் சர்வதேச நாடுகள் ஆராயுமாறு, விசாரணை நடத்துமாறு கேட்கின்றன. உலக தரத்துக்கு ஏற்ற வகையில் நம்பகமான முறையில் இது பற்றி விசாரியுங்கள் என்றே அவை வலியுறுத்துகின்றன.

ஆரம்பத்திலிருந்தே அரசின் கைகள் மாசுமறுவற்றவை எனக் கூறப் பட்டுவருவது உண்மையெனில், எவர் கூறுவதையும் பொருட்படுத் தாமல் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடிய விசாரணை ஒன் றுக்கு அரசு உடன்படவேண்டும். அவ்வாறு செய்ய உடன்படாமல் கீச்சு மாச்சுத் தம்பளம் விளையாட முயன்றால், முயல்வது நாட்டையும் மக்க ளையும் படு குழியில் வீழ்த்தும் என்பது சர்வ நிச்சயம். இனியும் வீறாப் புப் பேசி, சர்வதேசத்தை ஏய்க்காட்ட இயலாது!

# நாடாளுமன்ற உறுப்பினர் குறைப்பு அவசரப்பட்டு எடுக்கப்பட்டுள்ள முடிவு

## முன்னாள் நீதியரசர் தெரிவித்துள்ள கருத்து

யாழ்ப்பாணம், ஓக.16

யாழ்ப்பாண மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை 9 இல் இருந்து 6 ஆக குறைப்பது என்ற தீர்மானம் பெரும் எண் ணிக்கையில் இடம்பெற்றுள்ள மக்களின் வாக்குரிமையை இல்லாமல் செய்யும் நடவடிக்கையாகும் என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரி வித்துள்ளார்.

இவ்வாறு அரசமைப்பின் 98(9) விதியின் கீழ் ஒருநடவடிக்கை எடுப்ப தாயின் தேர்தல் ஒன்று நிலுவையில் இருக்கும் சமயத்திலேயே செய்யப்பட வேண்டும் ஆனால் இந்த விடயத்தில் இன்னும் ஐந்து வருடங்களுக்கு பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறும் சாத்திய மில்லை என்றார் முன்னாள் பிரதம நீதிய ரசர் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் இதில் அவசரப்பட்டு செயல்பட்டுள் ளார்கள். அதன் மூலம் மிக பாரதூரமான தவறு இழைத்துள்ளார்கள் இது நீண்ட கால எதிர்விளைவுகளை ஏற்படுத்து வதாக இருக்கும் என்று கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த தீர்மானமானது இனப்பிரச்சினைக்கு மேலும் எண்ணெய் வார்ப்பதாக இருக்கப்போகின்றது. தமிழருக்கெதிரான பாரபட்ச நடவடிக் கைகளில் ஒன்றாக மேற்குநாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இது எடுத்துக் காட் டப்படுவதாக இருக்கப்போகிறது. பெரும் அளவில் இடப்பெயர்வுகள் இடம்பெற் றுள்ளன. ஏராளமான வாக்காளர்கள் வெளி நாடுகளில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதைத் தேர்தல் ஆணையாளர் எண்ணி பார்த்திருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

### த.தே.கூட்டமைப்பு வழக்குத் தொடரும்

யாழ்ப்பாணம் நாடாளுமன்ற உறுப் பினர்களின் எண்ணிக்கையைக் குறைப் பதற்கு தேர்தல் ஆணையாளர் முடிவு செய்திருப்பது தொடர்பாக வழக்கு தொடர் வது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆலோசித்து வருகின்றது. நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் இந்தத் தகவலை தெரி வித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் தமது இந்தத் தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகளும் பொது நிறுவனங்களும் கருத்து வெளியிட்டுள் ளன.

ஐ.தே.க, ஜே.வி.பி, ரி.என்.ஏ மற்றும் ரி.யு.எல்.எப் ஆகிய கட்சிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் குறைக்கும் தீர்மானம் நியாயமற்றது என்று தெரிவித்துள்ளன.

ஆணையாளரின் முறை அரசமைப்புக்கு மாறான செயல் என்று பல சமூக அமைப்பு கள் தெரிவித்துள்ளன. (ப)

# பரீட்சை மண்டபம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக 16

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலையில் நடைபெறவிருந்த தரம்-05 புல மைப்பரிசில் பரீட்சை விக்னேஸ்வராக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இதில் கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலை, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி யாலயம், கரவெட்டி சரஸ்வதி மகாவித்தியாலயம், ஸ்ரீ நாரதா வித்தியாலயம், விக் னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கான பரீட்சைகள் விக்னேஸ் வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-313)

## தென்மராட்சியில் மழை; வெப்பம் ஓரளவு தணிந்தது

தென்மராட்சி, ஓக.16

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரண்டுமணி நேரம் மழை ஒரு பிடி பிடித்தது. இதனால் நீண்ட நாள்கள் நிலவிய வெப்பம் ஓரளவு தணிந்து காணப்பட்டது.

மழையை அடுத்து காலபோக நெற் செய்கைக்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள நெற் செய்கையாளர்கள் தயாராகி வருகின்றனர்.

இதேவேளை தென்மராட்சி தெற்கு மறவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளிலும் கட்டாக்காலி மாடுகள் நடமாடுவதால் வரப்பு கட்ட முடியாத நிலையில் உள்ளதாக அப்பகுதி நெற் செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ஒ-207)

# ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் வராது; அஞ்சத் தேவையில்லை

## அமைச்சர் ராஜித சேனாரட்ன கூறுகிறார்

கொழும்பு, ஓக. 16

ஜெனிவாவில் அடுத்த மாதம் நடை பெறவுள்ள ஐ.நா. சபையின் மனித உரிமை பேரவையின் வருடாந்த பொதுக் கூட்டத் தில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் எது வும் கொண்டு வரப்படமாட்டாது. இது தொடர் பாக எவரும் அஞ்சத் தேவையில்லை.

- இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ன நேற்று 'உதயன்'க்குத் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா வில் மனித உரிமைப் பேரவை பொதுக் கூட் டத்தில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளது என்றும், அதனை சமாளிக்கவே அவசரகாலச் சட்டத்தை நீக்கு வதிலும், தெரிவுக்குழு விடயத்திலும் அரசு மும்முரமாகச் செயற்படுகிறது என்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறி யவை வருமாறு:-

ஐ.நா. சபையின் மனித உரிமைப் பேர வையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெற வுள்ளது. இந்த நிலையில், அந்தப் பொதுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகத் தீர் மானம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளது என்ற பொய்யான பிரசாரம் ஒன்றை ஜே.வி.பி. போன்ற சிலர் மேற்கொண்டு வருகின்றனர். அரசியல் பிழைப்பு நடத்துவதற்கு இந்தப் பிரிவினர் இவ்வாறான பிரசாரங்களைச் செய்து நாட்டு மக்களின் மனங்களைத் திசைதிருப்பப் பார்க்கின்றனர்.

எனினும், இவ்வாறு இலங்கைக்கு எதி ராக எந்தவித தீர்மானமும் கொண்டு வரப் படும் என இதுவரை அறிவிக்கப்படவில்லை. அப்படி கொண்டுவரப்பட்டாலும், அரசை எதிர்கொள்ளக்கூடிய ஆளுமை அரசிடம் உள்ளது.

இவ்வாறான சவால்களை எதிர்கொள் ளவே அவசரகாலச் சட்டத்தை நீக்க அரசு தயாராகி வருகின்றது என்பது தவறான கூற்றாகும். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தற்கு அமைய, அவசரகாலச் சட்டத்தி லிருந்து சில ஷரத்துக்கள் நீக்கப்பட்டன. அதேபோன்று எதிர்வரும் காலங்களில் முழுமையாக நீக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது .- என்றார் ராஜித. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் 82 சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவு

## முதல் ஐந்து மாதங்களிலும் இடம்பெற்றுள்ளன

யாழ்ப்பாணம், ஒக.16

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடத்தின் முதல் 5 மாதங்களில் 82 சிறுவர் துஷ்பிர யோகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 174 சிறுவர்களுக்கு மருத்துவ உதவிகள் தேவைப் படுவதாகவும் யாழ். மாவட்ட அரச அதிபரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலகத்தின் கீழும் 2 லட்சத்து 4 ஆயிரத்து 388 சிறுவர்கள் உள்ளனர். இதில் தந்தையை இழந்த சிறுவர்கள் 6 ஆயிரத்து 118 பேர். தாயை இழந்த சிறுவர்கள் ஆயிரத்து 625 பேர். தாய் தந்தையர் இருவ்ரையும் இழந்த சிறுவர்கள் 417 பேர் யாழ்.குடாநாட்டில் உள்ளனர்.

சிறுவர் இல்லங்களில் ஆயிரத்து 413 சிறுவர்கள் தங்கியுள்ளனர். 114 சிறுவர்கள் தமது பிறப்புச் சான்றிதழின்றி உள்ளனர். இதில் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையிலேயே அதிகளவான சிறுவர்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இன்றி உள்ளனர்.

மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் என்று 221 சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவற்றைவிட யாழ்.மாவட்டத்தில் 174 சிறுவர்களுக்கு மருத்துவ உதவிகள் தேவைப் படுகின்றன. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகளவான சிறுவர்களுக்கு மருத்துவ உதவிகள் தேவைப்படுகின்றன.

இந்த வருடத்தின் முதல் 5 மாத காலப் பகுதியில் 82 சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகளவான சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-15)

# அதிவேக வாகனம் செலுத்துவோரால் வீதிகளில் பயணிப்பதில் நெருக்கடி

யாழ்ப்பாணம், ஒக 16

யாழ்.குடாநாட்டில் பெரும்பாலான வீதிகளுக்கு காப்பெற் போடப்பட்டுள்ள நிலையில் அதிவேகமாக வாகனங்கள் செலுத்தப்படுகின்றன என்று போக்குவரத்துச் செய்வோர் பெரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் வீதிகளில் பயணிக்கும் ஏனைய பயணிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதிவேக போக்குவரத்துப் பாதைகளில் பயணிப்பது போன்று குறித்த வீதிகளில் சிலர் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஹயஸ், ஓட்டோ போன்றவற்றைச் செலுத்திச் செல்கின்றனர்.

இதனால் சைக்கிள்களில் பயணிப்போரும் வீதிகளைக் கடக்க முற்படுவோரும் பெரும் சிரமம் அடைகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளால் வீதிகளில் விபத்துகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

இளஞர்களே இவ்வாறு வாகனங்களை அதிகரித்த வேகத்தில் செலுத்து வதை அவதானிக்க முடிகிறது. எனவே இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதற்கான நடவடிக்கைகள் எடுக்காத பட்சத்தில் விபத்துகள் அதிகரிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும். (ம)

## நெடுந்தீவு வைத்தியசாலையின்

# ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக. 16

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையின் ஆளணிப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வைத்திய அதிகாரி ஒருவர் இல்லாத நிலையில் நெடுந்தீவு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அமைச்சர், மாகாண ஆளுநர் ஆகியோருக்கு இந்த விடயம் தொடர்பாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து வைத்திய அதிகாரி ஒருவரையும், இரண்டு தாதிய உத்தியோகத்தர்களையும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

அத்துடன் அம்புலன்ஸ் ஒன்றை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ம-7)

## பண்பாடு...



கௌரவிப்பு: அச்சுவேலி பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத் தில் அண்மையில் சுற்றாடல் முகாம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினரா கலந்துகொண்ட யாழ்ப்பாணக் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கே.சோதிநாதனுக்கு கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியை திருமதி ஜெயந்தி மயில்வாகனம் மாலையணிவித்து வரவேற்கின்றார். கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாலய அதிபர் த.உதயநாதன், பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய அதிபர் திரு சு.மோகனராஜன் ஆகியோர் அருகில் உள்ளனர். (ம)

# மாதகலில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக.16

கனடா - மாதகல் அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் வலி.தென்மேற்கு பிரதேச செயலகம் நடத்தும் நடமாடும் சேவை நாளை மறு தினம் வியாழக்கிழமை மாதகல் சென். யோசப் மகாவித்தியால மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இறப்பு, பிறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை புதிதாகப் பெறுபவர்களும், தொலைத்தவர்களும் இதில் கலந்து கொண்டு உரியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். (ம-313)

# நெடுந்தீவுச் சங்கத்துக்கு லொறி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 16

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பாவனைக்கென புதிய பாரஊர்தி ஒன்று நேற்று திங்கட்கிழமை பரந்தனில் வைத்து வழங்கப்பட்டது.

நெடுந்தீவுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வருகை தந்த பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர், மாகாண ஆளுநர் ஆகியோரின் நடவடிக்கையை அடுத்து இது வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 30 லட்சம் ரூபாவும் கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்துக்கு 2 மில்லியன் ரூபாவும் வழங்கபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது (ம-7)

# வலி.வடக்கில் தொடரும் திருட்டு; நடவடிக்கை எடுக்கக் கோரும் மக்கள்

வலி.வடக்கு, ஒக. 16

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் திருட்டு விறகு தறிப்பவர்களால் பல்வேறு திருட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

வலி.வடக்கில் கடந்த சில மாதங்களாக மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுடன் மக்களாகச் செல்லும் திருடர்கள் அங்கு நடமாடி ஆள்கள் அற்ற வீடுகளை அடையாளம் கண்டு வைக்கின்றார்கள்.

மாலை வேளைகளில் சகாக்களுடன் சென்று ஆள்கள் அற்ற வீடுகளில் ஓடுகள், கதவுகள், நிலைகள், யன்னல்களைத் திருடி விறகுடன் மறைத்துக் கொண்டு செல்கின்றனர்.

விறகு கொண்டு வருவதற்கு கிராம அலுவலர்களின் அனுமதிக் கடிதம் தேவையில்லை என்ற நிலையில் அவற்றுடன் இந்தத் திருட்டுப் பொருள்களும் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து எத்தகைய பொருள்களைக் கொண்டு வருவதாக இருந்தாலும் கிராம அலுவர்களின் அனுமதிக் கடிதம் பெறவேண்டும் என்ற நிலைமை காணப்படுமாக இருந்தால் இவ்வாறான திருட்டுகளைத் தடுக்கமுடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.(ம-86)

# கொங்கிறீட் வீதியாகவுள்ள நெடுந்தீவு பிரதான வீதி

யாழ்ப்பாணம்,ஒக. 16

நெடுந்தீவு பிரதான வீதி கொங்கிறீட் வீதியாக மாற்றப் படவுள்ளது.

அடுத்த ஆண்டில் இதற்கான வேலைகள் பூர்த்தியடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெல்லை வீதியும் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் அனுமதிக்கப்படவுள்ளதாக நெடுந்தீவுக்கு நேற்று முன்தினம் சென்ற ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார். (ம-7)

# சோனக தெருவில் அபிவிருத்திப் பணிகள் முஸ்லிம் அமைப்பு மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம், ஒக.16

கலாசாரத்துக்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் அமைப்பால் யாழ். சோனகதொருவில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்வதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலகம் தகவல் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் அனுமதியுடன் மேற்கொள்ளப் படும் இந்த அபிவிருத்தித் திட்டங்களில் 10 நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதுடன், சேதமடைந்த 10 வீடுகளையும் திருத்தி அமைத்துக் கொடுக்கவுள்ளன.

அத்துடன் 20 கிணறுகளைத் திருத்திக் கொடுப்பதுடன் தெரிவு செய்யப்பட்ட 28 பயனாளிகளுக்கு சுயதொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கவும் உள்ளன.

பயனாளிகள் மீள்குடியேற்றத்தின் பின் எது வித அடிப்படை வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படாதவர்களும், சோனக தெருவில் தற்போது மீள்குடியேறியவர்களும் உள் வாங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் மக்கள் மீள்குடியமர்ந்து வருகின்றனர். இந்த நிலையில் சோனக தெருப் பகுதிகளில் முஸ்லிம் மக்கள் மீள்குடியமர்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-313)

# வரணி - குடத்தனை வீதியை முழுமையாகத் திருத்தக் கோரிக்கை

வரணி, ஒக.16

வரணி, குடத்தனை பிரதான வீதியில் இதுவரை புனரமைக்கப்படாத மிகுதிப் பகுதியையும் புனரமைத்து மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் பிரதேச நலன் விரும்பிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் இந்த வீதியின் ஒரு பகுதி புனரமைக்கப் பட்டுள்ளது.

இதற்கு நடவடிக்கை எடுத்துச் செயல்பட்டவர்களுக்கு அந்தப் பகுதி மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் புனரமைக்கப்படாத மிகுதி வீதியையும் முழுமையாக புனரமைக்க நடவடிக்கை எடுத்து மக்களுக்கு உதவும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் சுதந்திர தின நிகழ்வுகள் யாழ். துணைத் தூதரக அலுவலகத்தில்


யாழ்ப்பாணம், ஓக.16

இந்தியாவின் 65 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள இந்தியத் துணைத் தூதரக அலுவகத்தில் இடம் பெற்றது.

பதில் துணைத் தூதரக அதிகாரி கே.ரகுராம் தலைமையில் நேற்று காலை 9 மணிக்கு இந்த நிகழ்வு ஆரம்பமானது .

இந்த நிகழ்வின் போது இந்திய தேசியக்கொடி ஏற்றல், இந்திய சம்பிரதாய பூர்வமாக இடம்பெற்றது. பதில் துணைத் தூதரக அதிகாரி கே.ரகுராம் இந்தியத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடரந்து அவரது உரை இடம்பெற்றது.



இந்திய ஜனாதிபதி பிரதீப டேவிசிங் பட்டிலின் நேற்று முன்தினம் புதுடில்லியில் ஆற்றிய சுதந்திர தின உரையையே பதில் துணைத்தூதரக அதிகாரி கே.ரகுராம் நேற்று இங்கு சமர்ப்பித்தார்.

இந்த நிகழ்வுகளில் யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய பாகங்களில் உள்ள இந்தியர்கள் பங்கு பற்றினர். (ம-14)

# சேவாலங்கா நிறுவனத்தால் சுயதொழில் கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், ஓக.16

சேவாலங்கா நிறுவனம் புங்குடுதீவு மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், பெருங்காடு கிராம அபிவிருத்திச் சங்கம், தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த பயனாளிகளுக்கு சுய உதவிக் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளது.

ஒரு சங்கத்துக்கு இரண்டு லட்சம் ரூபா வீதம் ஒவ்வொரு சங்கத்திலும் தலா 20 பயனாளிகளுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே புங்குடுதீவில் உள்ள நான்கு சங்கங்களுக்கும் இதுபோன்று சுயஉதவிக் கொடுப்பனவுகளை சேவாலங்கா வழங்கியுள்ளதாக வேலணை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். செல்வச்சந்திரன் தெரிவித்தார். (ம-7)

# வடக்கின் வசந்தத்தின் கீழ் மின்சாரம் வழங்க ஏற்பாடு

வரணி, ஓக.16

வரணி, மாசேரி அமெரிக்கன் மிஷன் பாடசாலை வீதிக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் கட்டமாக மின் கம்பங்கள் தற்சமயம் நடப்பட்டுள்ளன.

விரைவில் மின்வயர்கள் பொருத்தப்பட்டு மின்வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. (ம-122)

# சிக்கன கடன் வழங்கு சமாசத்தின் 89 ஆவது கூட்டுறவு தின விழா

யாழ்ப்பாணம், ஓக.16

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் சங்கானைப் பிராந்திய சபையின் 89ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மூளாய் வீதி, ஸ்ரீ கணேச வாசிகசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கானைப் பிராந்திய சபையின் தலைவர் வி.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக சங்காணைப் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலர் செல்வி என்.றஞ்சனா, சுழிபுரம் - வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி, யாழ். மாவட்ட சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன், யாழ். மாவட்ட சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மாவட்டச் செயலாளர் சு.நகுலேஸ்வரன், பதில் மாவட்டச் செயலாளர் திருமதி ச.பரமானந்தம், உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் அங்கத்துவ சங்கங்களின் கலை நிகழ்வுகளுடன், பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ம-313)

# நினைவுப் பரிசில்கள் வழங்கல்

கொடிகாமம், ஓக.16

கொடிகாமம் கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பாண்ட் வாத்திய குழு மாணவிகளுக்கு அண்மையில் நிகழ்ந்த நிகழ்வு ஒன்றில் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கடந்த முதலாம் திகதி கொடிகாமம் இலங்கை வங்கியின் 72 ஆவது நிறைவு தினத்தை முன்னிட்டு மேற்படி வங்கியின் விரிவாக்கல் சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்ட சமயம் மேற்படி பாடசாலை மாணவியரின் பாண்ட் வாத்திய இசை நிகழ்வு இடம் பெற்றது.

இதன் பொருட்டே வடவலய வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் கே.சீ.டி சுமணசிறி இந்த நினைவுப் பரிசை நிகழ்வின் போது வழங்கினார்.

இந்த நினைவுப் பரிசில்களை மாணவியர் சார்பில் பாடசாலை அதிபரும், ஆசிரியை ஒருவரும் பெற்றுக் கொண்டனர். (ம-122)

# வலி.தெற்குப் பிரதேச சபையின் உறுப்பினர் ஞாயிறு பதவியேற்பு

சண்டிலிப்பாய், ஓக.16

வலி.தெற்குப் பிரதேச சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்ட தியாகராஜா பிரகாஷ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அரசியல் வாதிகள், கல்விமான்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலில் இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து உறுப்பினர் அனைவரும் மலர் மாலை அணிவித்து மங்கல வாத்தியங்களுடன் சபை மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவர்.

வலி.தெற்கு பிரதேச சபைக்கான தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 13 உறுப்பினர்களும் மக்கள் ஐக்கிய முன்னியைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள 22 உள்ளூராட்சிச் சபைகளில் கிளிநொச்சியில் 3 சபைகளையும், யாழ். மாவட்டத்தில் 16 சபைகளுமாக எல்லாமாக 19 உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் வெற்றியீட்டிய உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாணம் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

# வீதி விளக்குகள் இன்றி இருளில் மூழ்கும் வீதி

யாழ்ப்பாணம், ஓக. 16

சுன்னாகம் பிரதேச சபைக்குட்பட்ட சண்டிலிப்பாய் டச்சு வீதி, வீதி விளக்குகள் இன்மையால் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது.

அந்திரான் - டச்சு வீதிக்கு வீதி விளக்குகள் பொருத்துமாறு இது வரை 3 மகஜர்கள் பிரதேச செயலர் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டும் இதுவரை மின் விளக்கு பொருத்தப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

இதனால் சுமார் 2.5 கிலோ மீற்றர் வரையான வீதி இரவு நேரங்களில் இருளில் மூழ்கியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-302)

# யாழ்.ஆஸ்பத்திரிக்குச் சென்ற இளைஞன் கழிவு வாய்க்காலில் வீழ்ந்து தலையில் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும் ஒருவரை பார்வையிடச் சென்ற இளைஞர் ஒருவர் வைத்தியசாலையினுள் கயிறு தடுக்கி கழிவு வாய்க்காலில் விழுந்ததனால் தலையிலும் காலிலும் காயமடைந்து அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

வாய்க்கால் சிமெந்துக் கட்டுடன் வீழந்து மோதுண்டதனாலேயே இவருக்குக் காயமேற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் பாஷையூரைச் சேர்ந்த ஜே.நிறோஜன் (வயது-20) என்ற இளைஞனே காயமடைந்தார்.

இதேவேளை, வீட்டுக் கிணற்றைக் கலக்கி இறைத்துக் கொண்டிருந்த போது கிணற்றுக் கப்பி கட்டப்பட்டிருந்த கயிறு அறுந்ததால் அதனைப் பிடித்திருந்தவர் தவறி கிணற்றுக்குள் வீழ்ந்து கடும் உடற் காயங்களுக்கு உள்ளானார்.

காரைநகரில் நேற்று இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மா.புலேந்திரன் (வயது- 56 ) என்பவரே காயமடைந்து காரைநகர் வலந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிசிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ம-[illegible])

## கல்விக்காக...



**ஊக்குவிப்பு:** காரைநகர் அபிவிருத்திச் சபையால் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் நிதியத்துக்கு ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. காரைநகர் கிட்ஸ் பார்க் முன்பள்ளி விளையாட்டு நிகழ்வில் வைத்து இது வழங்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரெட்ணத்திடம் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் க.சோமசேகரம் ஒரு லட்சம் ரூபாவுக்கான காசோலையை கையளிக்கின்றார். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் [illegible] செயற்பாட்டுக்காகவே காரைநகர் அபிவிருத்திச் சபையால் இந்த நிதி [illegible] (ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவமன்னிப்புக் கோரி வந்த இளைஞனை துஷ்பிரயோகம் செய்த சிங்களப் பாதிரியார்

## அமெரிக்காவில் சம்பவம்

பாவமன்னிப்பு கோரி வந்த இளைஞன் மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக அமெரிக்காவில் உள்ள இலங்கையைச் சேர்ந்த சிங்களப் பாதிரியார் மீது பாலியல் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எட்வேர்ட் வர்ணகுலசூரிய என்னும் சிங்களப் பாதிரியாரிடம் பாவ மன்னிப்புக் கோரி வாசஸ்தலத்துக்குச் சென்ற 18 வயது இளைஞன் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளார்.

மிகப் பெரியளவிலான மூன்று குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இவர் தலைமறைவாகி இருந்த நிலையில் நீதிமன்றம் இவரைக் கைது செய்வதற்கு பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில் இவர் கடந்த வெள்ளிக்கிழமை உயர்நிலை நீதிமன்றம் சரண் அடைந்தார். இவரது கடவுச்சீட்டை நீதிமன்றம் பறிமுதல் செய்துள்ளது.

அடுத்த-தவணைக்காக எதிர்வரும் 26 ஆம் திகதி ஆஜராக வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (வ)

# ஆஸியில் வங்கி அட்டை மோசடி; இலங்கையர் உட்பட 5 பேர் கைது

ஆஸ்திரேலியாவில் வங்கி அட்டை மோசடிகளில் பல மாதங்களாக ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட மலேசியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த ஐந்து பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோசடிக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளை ஆஸ்திரேலியா, ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகிய நாடுகளில் இணைப்புச் செய்ததாக சந்தேகிக்கப்பட்ட இந்த நபர்களை பல மாதங்களாகக் கண்காணித்ததைத் தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக நியூசௌத் வேல்ஸ் மாநில மோசடிக் குழுவின் புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடிக் குழுவானது பண கொடுக்கல், வாங்கல் செய்ய இயந்திரங்களை மக்கள் பயன்படுத்தும் போது கடன் அல்லது முற்கொடுப்பனவு அட்டைகளின் காந்தக் கீலத்திலிருந்து கணக்கின் விவரங்களைக் களவாகப் பிரதி செய்யும் அதிமுன்னேறிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தியதாகக் கூறப் படுகிறது.

வங்கிக் கொடுப்பனவுகளை செய்யும் இயந்திரங்கள், மடிக் கணினிகள், பணம், போலி பயண ஆவணங்கள் மற்றும் கனேடிய கடன் அட்டைகள் என்பவற்றை இவர்களிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (வ)



மக்கள் வங்கியின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி வல்வெட்டித்துறைக் கிளையில் இடம்பெற்ற நிகழ்வில் வங்கியின் வாடிக்கையாளரான டாக்டர் எஸ்.சுப்பிரமணிய சர்மாவுக்கு வங்கி முகாமையாளர் எஸ்.கிருஷ்ணானந்தன் நினை வுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கின்றார். (252)

## பாலியல் தொழிலில் ஈடுபட்டு வந்த

# தாய்லாந்து பெண்கள் ஐவர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்

பாலியல் தொழிலில் ஈடுபட்ட தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த ஐந்து பெண்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் குறித்த பெண்கள் நாடு கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண்களின் பெயர்களைக் கறுப்புப் பட்டியலில் இடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கிருலப்பனைப் பிரதேசத்தில் தங்கியிருந்த குறித்த பெண்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை வெளிநாட்டு பெண்கள் இலங்கையில் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது. அந்தவகையில் கொழும்பு மற்றும் முக்கிய நகரங்களில் வெளிநாடுகளைச் சேர்ந்த பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (வ)

# பாம்பு தீண்டியது

நவாலி,ஒக.16

பாம்புக்கடிக்கு இலக்கான நவாலியைச் சேர்ந்த நபர் ஒருவர் மயக்கமுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நவாலி கிழக்கு ஞானவைரவர் கோயிலடியைச் சேர்ந்த வைத்திலிங்கம் (வயது-45) என்பவர் வீழ்ந்து கிடந்த தகரத்தை தூக்கிய போது அதன் கீழிருந்த புடையன் பாம்பு கடித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-100)

**வீடு விற்பனைக்கு**

மாவடிச் சந்தி வட்டுத்தெற்கு, வட்டுக்கோட்டையில் 5 பரப்புடன் கூடிய வீடு உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0771040881, 0779218633

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஒக.16

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட நாவாந்துறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கெனடி வீதியிலும் முற்பகல் 10 மணிக்கு சென்.மேரிஸ் குறுக்கு வீதிகளிலும் முற்பகல் 11 மணிக்கு சென்.மேரிஸ் மண்பிட்டியிலும் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு இடம்பெறும். (ம-313)

**ஜனஜய லொத்தர்** — உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 253 — சீட்டிழுப்புத் திகதி 14.08.2011

வெற்றி இலக்கங்கள்: 13 14 42 44 — சுப்பர் இலக்கம்: 11

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 8,579,630/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 1 இலக்கத்துக்கும் | 114990 | ரூ. 20/= | ரூ. 2,299,800 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 1 இலக்கத்துக்கும் | 10422 | ரூ. 40/= | ரூ. 416,880 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 2 இலக்கங்களுக்கும் | 8906 | ரூ. 100/= | ரூ. 890,600 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 2 இலக்கங்களுக்கும் | 850 | ரூ. 200/= | ரூ. 170,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 3 இலக்கங்களுக்கும் | 210 | ரூ. 1,500/= | ரூ. 315,000 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 3 இலக்கங்களுக்கும் | 15 | ரூ. 3,000/= | ரூ. 45,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 8,579,630/= | |
| மொத்த எண்ணிக்கை | 135394 | | ரூ. 5,137,280/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ 8,928,920/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356 கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02

தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545

Website: www.dlb.lk

**பிறந்தநாள் வாழ்த்து**



நீர்வேலி மத்தியைச் சேர்ந்த குமார சதாசிவசர்மா கமலாதேவி தம்பதியரின் பௌத்திரனும் பாலரூபன் - நித்தியகல்யாணி தம்பதியரின் புத்திரனுமாகிய

**அபிநயன்**

இன்று(16.08.2011) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் முதலாவது பிறந்த நாளைக் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

அவரை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவோர்.

தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, சித்தப்பா (நீர்வேலி).

# உள ஆற்றுப்படுத்தல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக.16

துளிர்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படும் ''உள ஆற்றுப்படுத்தல்'' வாண்மைத்துவச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கை நெறி ஆறு மாத காலம் சனி, ஞாயிறு மற்றும் போயாதினங்களில் ஆறு மாதகாலம் இடம் பெறவுள்ளதால் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக சுய விவரங்களை இல.30, கம்பஸ் லேன், திருநெல்வேலி எனும் முகவரிக்கு அனுப்பி அனுமதிகளைபெற்றுக்கொள்ளலாம்.

இந்தப் பயிற்சி நெறி அடுத்தமாதம் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-313)

உ



**தெல்லிப்பழை- பன்னாலை திருவருள்மிகு வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் கரவருஷம்- 2011**

ஆரம்பம் 17.08.2011 புதன்கிழமை நிறைவு: 28.08.2011 ஞாயிற்றுக்கிழமை

**விஷேட உற்சவ தினங்கள்**

17.08.2011 புதன்கிழமை முற்பகல் 10.30 மணி - கொடியேற்றம்
24.08.2011 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி - வேட்டைத்திருவிழா
26.08.2011 வெள்ளிக்கிழமை இரவு 8.00 மணி - சப்பரம்
27.08.2011 சனிக்கிழமை காலை 8.45 மணி - தேர்
28.08.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி - தீர்த்தம்

விஷேடஉற்சவம் தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும் காலை 8.30 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் உற்சவம் தொடர்பான கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவம் நடைபெறும்.

குறிப்பு: ஆலயத்தில் இராஜகோபுரத் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அன்பர்கள் இயன்றளவு நிதி உதவியையோ அல்லது பொருள் உதவியையோ வழங்கிப் பெருமானின் திருவருளுக்கு மேன்மேலும் பாத்திரமாகும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

வங்கிக் க/கு இலக்கம்: 810 700 6672
ம.மகேந்திரசர்மா,
வர்த்தக வங்கி, சுன்னாகம்.

பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மா
தேவஸ்தானம்.

(6936) (19-21)



**220 இற்கு மேற்பட்ட உலக நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

DHL

உங்களுக்குத் தேவையான அனைத்து பொருள்களையும் உலக நாடுகளுக்கு அனுப்பி DHL மூலம் பெற்றுக்கொள்ள சிறந்த சேவையை வழங்குகிறது

**திருமுருகன் கொம் நெற்**

வெளிநாட்டு கடவுச்சீட்டு உடைய ஒருவருக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

வட மாகாணத்திற்கான உங்கள் DHL முகவர்

**திருமுருகன் கொம் நெற் மட்டுமே...!**

★ போலி முகவர்களிடம் ஏமாறவேண்டாம்
★ விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது

Hot line: 021 222 7835

| | |
|---|---|
| இல.259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி. |
| இல.18, பிரதான வீதி, நெல்லியடி. | இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. |

TCN Express 2 B. Nelsan Place, Colombo - 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை இராணுவமயப்படுத்தும் முயற்சியில் ஜனாதிபதி மஹிந்த

## குற்றஞ்சாட்டுகிறார் ஜயலத் எம்.பி.

கொழும்பு,ஒக.16
நாட்டை இராணுவமயப்படுத்தும் முயற்சியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார் எனக் குற்றஞ்சாட்டுகிறார் ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன.

நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டமுப் படையினருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அத்துடன், அவர் சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி தான் தோன்றித்தனமாகச் செயற்படுகின்றார். அரசு நாட்டை முற்றும் முழுதாக இராணுவ மயமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது. இது நாட்டுமக்களை மேலும் கஷ்டத்துக்கு உள்ளாக்கும் செயல். அது மட்டுமின்றி, சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனநாயகத்துக்கு விரோதமான செயல்களில் நாட்டின் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார்.

அவசரகாலச் சட்டத்தைப் படிப்படியாக நீக்குவோம் எனக் கூறும் அரசு திட்டமிட்டபடி அரசு தீவிரவாதத்தை கட்டவிழ்த்து விடுகின்றது. எனவே அரசு இதுவிடயம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்- என்றார்.

# மருத்துவக் காப்புறுதித் திட்டம் விரைவில் ஆரம்பிக்க யோசனை

## ஓய்வூதியத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக 16
ஓய்வுபெற்றவர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டமொன்றை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை செயற்படுத்தவுள்ளதாக ஓய்வூதிய ஆணையாளர் நாயகம் கே. ஏ.திலகரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தக் காப்புறுதி திட்டத்துக்காக ஓய்வு பெற்றோரிடமிருந்து சிறு தொகைக் கட்டணமே அறவிடப்படவுள்ளதாகவும் இந்தக் காப்புறுதித் திட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டவர்கள் நோய்வாய்படும் சந்தர்ப்பங்களில் தேவையான நிதி உதவிகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஓய்வுபெற்றவர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ற)

# மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப் பெண்ணுக்கு விடுதலை

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த இலங்கைப் பெண் ஒருவர் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அப்துல் கரீம் கன்சல் முஹாரியானஇலங்கைப்பெண்ணே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.


தொழில்புரியும் இடத்தில் பெண் ஒருவரைப் படுகொலை செய்த குற்றத்துக்காக இந்தப் பெண்ணுக்குமரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டின் காரணமாக 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்தப் பெண் சவூதி அரேபிய சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக டுபாய் நாட்டுக்கான இலங்கைத் தூதர் சரத் விஜேசிங்க தெரிவித்துள்ளார். (ச)

# ஹற்றனில் விசேட பொலிஸ் பாதுகாப்பு

ஹற்றன் பிரதேசத்துக்குட்பட்ட தோட்டப்பகுதிகளில் மர்ம மனிதர்கள் நடமாடுகின்றார்கள் என்ற தகவல்களால் அச்சத்தில் உறைந்திருந்த மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு தோட்டப்பகுதிகளில் நேற்று முதல் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக பெண்தொழிலாளர்கள் பணிபுரிகின்ற இடங்களிலேயே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



இந்தியாவின் 65ஆவது சுதந்திர தினம் நேற்று திங்கட்கிழமை கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்த நிகழ்வில், இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே.காந்தா தேசியக் கொடியை ஏற்றி வைக்கின்றார்.

# உலகில் சில தரப்பினர் இலங்கைக்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபட முயற்சி

## அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு



கொழும்பு,ஒக.16
உலகில் சில தரப்பினர் இலங்கைக்கு எதிராக, யுத்தத்தின் போது நிறைவேற்ற முடியாத விடயங்களை வேறு வழிகளில் மேற்கொள்ள முயற்சிக்கின்றனர் என வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மல்வத்தை அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை கடந்த சனிக்கிழமை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சனல் - 4 காணொலிகள் ஒளிபரப்பட்டமை இது போன்றதொரு முயற்சியாகும். சர்வதேச ரீதியாகஎழத் தரப்பினரும் மேற்கொள்ளும் அழுத்தங்களுக்கு அரசு என்ற வகையில் ஒரே பதிலையே வழங்குகிறது.

எவ்வாறாயினும் எதிர்க்கட்சி நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. எதிர்க்கட்சி என்பது நாட்டுக்கு எதிரான கட்சி அல்ல எனவும், இடம் பெறும் முறைகேடுகளைச் சுட்டிக் காட் டும் கட்சியாகவே செயற்படவேண் டும்- என்றார்.

# பட்டதாரிகளின் தொழில்நிலை பற்றி தகவல் ஆராய புதிய செயற்றிட்டம்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,ஒக.16
பட்டங்களை வழங்குவதற்கு முன்னதாக பட்டதாரிகள் தொழில் நிலை பற்றி தகவல்களை ஆராய்வதற்கென திட்டமொன்று இந்த வருடம் முதல் செயற்படுத்தப் படவுள்ளது என உயர்கல்வி அமைச்சு தெரிவிக்கிறது.

உயர்கல்வி அமைச்சரின் ஆலோசனையின்பேரில் இந்தப் புதிய செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பட்டம் பெறும் தினத்தில் தமது தொழில், சம்பள விவரம், சேவை நிறுவனம் பற்றிய தகவல்களை பட்டதாரிகள் சமர்ப்பிக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பிலான படிவமொன்று பல்கலைக்கழகங்களின் ஊடாக விநியோகிக்கப்படுகின்றன எனவும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# தியாகங்களுக்கு நிலையான தீர்வு கிடைக்கவே தேர்தலில் வாக்களித்து மக்கள் நிரூபித்தனர்

## மாவை. சேனாதிராசா எம்.பி.கூறுகிறார்

அம்பாறை, ஒக.16
எமது தியாகங்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும், எமது மண்ணிலிருந்து இராணுவம் நீக்கப்பட வேண்டும், என்பவற்றை வலியுறுத்தும் விதமாகவே நடந்து முடிந்த தேர்தல்களில் மக்கள் வாக்களித்து நிரூபித்துள்ளனர். அடுத்து மூன்றாவது கட்ட உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவிருக்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா.

கல்முனைக்கு நேற்றுமுன்தினம் சென்ற அவர் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

நாம் பேச்சு மூலமாக் ஜனநாயக வழிகளில், எம்மக்களுக்கு விடிவையும், விடுதலையையும் பெற்றுக்கொடுத்து தங்களுடைய நிலத்தில், தம்மை ஆட்சி செய்யக்கூடிய அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்கப் பேச்சு நடத்துவதற்கு நாம் இப்பொழுதும் ஆயத்தமாக வேயுள்ளோம். தமிழ்மக்களின் அறுபது ஆண்டுகால, இன்று வரையான கொள்கை, இலட்சியத்துக்காக வாக்களித்து, இதன் மூலம் தமது அரசியல் தீர்வை வலியுறுத்தி நிற்கும் மக்கள் கோரிக்கையை ஜனாதிபதி ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்தவராகவிருந்தால் மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும். இதன்மூலம் ஜனநாயகரீதியாக தெரிவுசெய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி ஓர் அரசியல் தீர்வை எட்ட வேண்டுமென்பதுதான் இன்றைய செய்தியாகும். இதையேநான் வரும் தேர்தலிலும் முன்வைத்துப் பேசவுள்ளேன். அரசு தொடர்ந்தும் எம்மை ஏமாற்ற இடமளிக்க முடியாது. இத்தேர்தல்கள் மூலம் நாம் இதற்காக மக்களை அணிதிரட்டி வருகின்றோம்.

தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள், வேட்பாளர்களாக நிற்பவர்கள் இந்தக்கருத்துக்களை மக்கள் மத்தியில் முன்வைத்து, வரும் தேர்தலிலும் அமோகவெற்றி பெற உழைக்கவேண்டும்.

இடையிலே அரசு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்க வேண்டுமென முயற்சி எடுக்கின்றது. இந்த விடயம் தமிழ்மக்களுக்கு வழங்க வேண்டிய அரசியல் தீர்வை மீண்டும், இழுத்தடிக்கவும், ஏமாற்றுவதற்கும், காலத்தைக் கடத்துவதற்குமாக அமைந்துவிடுமென்ற ஒரு நம்பிக்கையீனம் எம்மிடமும், எம் மக்களிடத்திலுமுள்ளது.

எனவே தெரிவுக்குழுவில் நாம் பங்குபற்றுவோமா, இல்லையா என்பதை இப்பொழுது திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தித் தீர்வை எட்டுவதற்குப் பதிலாக, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவென காலம் கடத்தி ஏமாற்றப்படுவதற்கு நாம் இடமளிக்க முடியாது என்பதுதான் இதுவரையும் எம் நிலைப்பாடாகும். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் தனியார் பஸ் உரிமையாளர் நாலு மணிநேர பணிப்புறக்கணிப்பு

மன்னார், ஒக.16

மன்னாரில் தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்று முன்தினம் நான்கு மணி நேரம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: தற்போது மடுத்தேவாலயத் துக்கு பெருந்தொகையான பக்தர்கள் சென்று வருகின்றனர். மன்னாரிலிருந்தும் பெருந்தொகையான பயணிகள் செல்கின்றனர்.

இவர்களை ஏற்றிச் செல்வதில் தனியார் பஸ்களுக்கும் அரச பஸ்களுக்கு மிடையில் முறுகல் நிலையொன்று ஏற்பட்டது. இதனையடுத்து இந்த விடயம் தொடர்பாக அரச பஸ் சேவையின் மன்னார் சாலை முகாமையாளரிடம் முறைப் பாடு செய்யப்பட்டது. அவர் பொலிஸாருக்கு இந்த விடயம் தொடர்பாக அறிவித்ததையடுத்து போக்குவரத்துப் பொலிசார் வீதிகளில் நின்று பதிவுகளை மேற்கொண்டனர்.

அதேவேளை, மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தனியார் பஸ் சாரதிகளையும், நடத்துநர்களையும் மிகக் கேவலமாக ஏசியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து தனியார் பஸ் உரிமையாளர்கள் இந்த விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் பாருக்கின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அவர் உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார்.

இந்த நிலையில் மு.ப. 10 மணியளவில் தனியார் பஸ்கள் வீதிகளில் ஓடாது நிறுத்திவைக்கப்பட்டன. இதனால் மடு செல்ல விருந்த பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதையடுத்து பி.ப. 2 மணியளவில் விசேட பொலிஸ் குழுவொன்று மன்னாருக்கு வந்தது டன் தனியார் பஸ் உரிமையாளர் சங்கச் செயலாளர் அன்ரனுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. இதனையடுத்து பி.ப. 2.20 மணியளவில் தனியார் பஸ்கள் தமது வழமையான சேவைகளில் ஈடுபட ஆரம்பித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-601)

## சிறந்த வேடங்கள்...



மழலைப் பட்டாளம்: கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரம் கானகன் மழலைகள் முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வின் போது சிறார்கள் விநோத உடைப் போட்டி நிகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். (426)

# தொடர்ந்து கசிப்பு விற்பனையிலீடுபடுவோருக்கு அபராதத்துடன் கட்டாயச் சிறைத்தண்டனை விதிப்பு

கிளிநொச்சி இராமநாதபுரம் மற்றும் ஆனந்த நகர் ஆகிய பகுதிகளில் கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்டு ஏற்கனவே தண்டிக்கப்பட்ட போதும் மீளவும் குற்றமிழைத்து நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டவர்களுக்குக் கட்டாயச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் 750 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த ஒருவர் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். குறித்த நபர் ஏற்கனவே நீதிமன்றினால் தண்டிக்கப்பட்ட போதும் மீளவும் இவ்வாறான குற்றச் செயலில் ஈடுபட்டமையால் பத்தாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் இருமாத சாதாரண சிறைத் தண்டனையும் ஒருமாதகால கட்டாய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி ஆனந்தநகர்ப் பகுதியில் ஐந்து போத்தல் கோடா வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது இவருக்கு15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் கட்டத் தவறின் மூன்று மாத சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன் மேலும் மூன்றுமாத கட்டாயச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. (க-6)

# குன்றும் குழியுமான வீதிகள்

வவுனியா, ஒக. 16

வவுனியா நகரிலுள்ள வீதிகள் பலவும் குன்றும் குழியுமாகச் சேதமடைந்து காணப்படுவதால் மக்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாகக் கந்தசாமி கோயில் வீதி, மில்வீதி, இறம்பைக் குளம் மகளிர் பாடசாலை வீதி என்பன மோசமான நிலையில் காணப்படுகின்றன.

அத்துடன் முதலாம், இரண்டாம் குறுக்குத் தெருக்களில் தனியார் பேருந்துகள் தரித்து நிற்கின்றன. மேலும் தங்குமிடங்களும், உணவகங்களும் இங்கேதான் உள்ளன. தேர்தல் காலங்களில் அரசியல் வாதிகள் இந்தத் தெருக்களிலுள்ள விடுதிகளில் தங்கிச் செல்வது வழக்கமாகும். ஆனால் இங்குள்ள வீதிகளின் மோசமான நிலை இவர்களின் கண்களுக்கு ஏனோ தெரிவதில்லை.

உரிய அதிகாரிகள் சிரத்தையெடுத்து இந்த வீதிகளைச் சீர் செய்ய வேண்டுமென்பதே அனைவரதும் வேண்டுகோளாக வுள்ளது. (க-431)

# வைத்தியசாலை வாயிலில் வாகனங்களை நிறுத்துவதால் பலருக்கும் இடையூறு

வவுனியா, ஒக.16

வவுனியா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் தமது மோட்டார் சைக்கிள், சைக்கிள் என்பவற்றை வைத்தியசாலையின் பிரதான வாசலிலுள்ள வீதியில் விட்டுச் செல்வதால் பெரும் இடையூறு தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா வைத்தியசாலைக்குப் பல்வேறு இடங்களிலிருந்தும் மக்கள் வருவது வழக்கமாகும். இவர்களின் சைக்கிள், மோட்டார் சைக்கிள், தலைக் கவசங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு வைத்தியசாலையின் நலன்புரி நிலையத்தினால் பாதுகாப்பு நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் வைத்தியசாலைக்கு வரும் பலரும் பாதுகாப்பு நிலையத்தைப் பயன்படுத்தாது வைத்தியசாலையின் பிரதான வாயிலுக்கு முன்பாகவுள்ள வீதிகளில் தமது இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் வண்டிகளை நிறுத்தி விட்டுச் செல்கின்றனர்.

இதனால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். சில வேளைகளில் சிறு விபத்துக்களும் ஏற்படுகின்றன.

மேலும் வைத்தியசாலையிலிருந்து வெளியே செல்லும் அம்புலன்ஸ்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றன. இவ்வாறே வேறு இடங்களிலிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு வரும் அம்புலன்ஸ்களும் இடையூறுகளை எதிர் கொள்கின்றன. இதனால் அவசர நோயாளர்களை வைத்தியசாலைகளில் சேர்ப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன.

எனவே வைத்தியசாலைக்கு வருவோர் தமது இருசக்கர வண்டிகள், வாகனங்களை பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்குமாறு வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-431)

# பல்வேறு நெருக்கடிக்குள் கிளிநொச்சி கல்வி வலயம்

இலங்கைத் தீவிலே நடந்து முடிந்த போர், இடம்பெயர்வுகள் காரணமாக ஏராளமான பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். பலர் உயிரிழந்தனர். அதிகளவில் பாடசாலைகள் அழிக்கப்பட்டன மற்றும் சேதமடைந்தன. கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளும் கடந்தகாலப் போர் மற்றும் இடப்பெயர்வுகளைத்தாங்கி மீள்குடியமர்வின் பின்னர் இயங்கி வருகின்றன.

கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள 104 பாடசாலைகளில் தற்போது 90 பாடசாலைகள் இயங்கிவருகின்றன. 29,031 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 11,531 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.

பளை கல்விக் கோட்டத்தில் அல்லிப்பளை, புலோப்பளை, முகமாலை, வேம்பொடுகேணி ஆகிய நான்கு கிராமங்களிலும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இந்தப் பாடசாலைகள் உள்ள கிராமங்களில் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை. இதன் காரணமாக இந்தப் பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் உள்ளன.

பூநகரி கல்விக் கோட்டத்தில் எட்டுப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. பல்லவராயன் கட்டு அ.த.க.பாடசாலை, பொன்னாவெளி அ.த.க. பாடசாலை, அத்தாய் முத்துக்குமாரசாமி வித்தி

> **இலங்கைத் தீவில் நடந்து முடிந்த போர், இடப்பெயர்வுகள் காரணமாக ஏராளமான பாடசாலைகள் மூடப்பட்டதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். இதனால் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது.**

யாலயம், செட்டிய குறிஞ்சி அ.த.க. பாடசாலை, மட்டுவில் நாடு அ.த.க. பாடசாலை, கௌதாரி முனை தம்பிராய் அ.த.க. பாடசாலை, பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய எட்டுப் பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

கரைச்சிக் கல்விக்கோட்ட மட்டத்தில் இரு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன, அவையாவன:

குஞ்சுக்குளம் அ.த.க. பாடசாலை குஞ்சுக்குளம் கிராமம் உவரடைந்து மக்கள் இடம் பெயர்ந்ததன் காரணமாக மூடப்பட்டுள்ளது.

சிங்கள மகாவித்தியாலயத்தில் தற்போது கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை இயங்கி வருகிறது.

இலங்கையிலுள்ள கல்வி வலயங்களில் அதிக பாடசாலைகளைக் கொண்ட கல்வி வலயமாகக் கிளிநொச்சி கல்வி வலயம் உள்ள போதிலும் நிரந்தரக் கட்டடமின்றி இயங்கி வருகின்றது. 2006 ஆம் ஆண்டில் பரந்தனில் வலயக் கல்விப் பணிமனைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு காணி இனங்காணப்பட்ட போதிலும் போர்ச் சூழல், இடப்பெயர்வுகள் காரணமாக கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெறவில்லை. கிளிநொச்சி கல்வி வலயத்தை இரண்டாகப் பிரித்து புதிய கல்வி வலயம் அக்கராயனில் அமைய வேண்டும் என்ற சிந்தனை கல்வித்துறை சார்ந்தோரிடம் இருக்கின்ற போதிலும் எப்போது கை கூடும் என்பது தெரியவில்லை.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு அதிகளவில் தட்டுப்பாடு நிலவுகின்றது. கிராமப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் நகரப் பாடசாலைகளை நாடும் அவலம் தொடர்கின்றது.

கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள நான்கு கல்விக் கோட்டங்களான பளை, பூநகரி, கரைச்சி, கண்டாவளை ஆகியவற்றில் கண்டாவளைக் கல்விக் கோட்டத்தில் பாடசாலைகள் எவையும் மூடப்படாத நிலையுள்ள போதிலும் கல்லாறு, பிரமந்தனாறு பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு மகாவித்தியாலயத்துக்கு அதிகளவில் மாணவர்கள் செல்கின்றனர்.

கிளிநொச்சி நகரத்திலும், பளை மற்றும் பூநகரிப் பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிராமப் புறப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகளவில் நிலவுகின்றது.

கடந்த காலப் போரின்போது சேதமடைந்த கிளிநொச்சி வலயப் பாடசாலைகளை மீளமைக்க ஆயிரம் மில்லியனுக்கும் மேலான நிதிதேவைப்பட்ட போதிலும் தற்போது முன்னூறு மில்லியன் வரையான வேலைகளே நிறைவடைந்துள்ளன.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கான புதிய கட்டடம் அமைத்தல், ஆசிரியர்கள் பற்றாக்குறை, பாடசாலைகள் புனரமைப்பு, மூடப்பட்டுள்ள பாடசாலைகளை இயங்கவைத்தல் போன்ற

-கி.பிருந்திவி-

பல்வேறு நெருக்கடிகளுடன் கிளிநொச்சி கல்வி வலயம் இயங்கி வருகின்றது.

இந்த நெருக்கடிகளில் இருந்து மீண்டெழக் கிளிநொச்சிக் கல்வி வலயப் பாடசாலைகள் காத்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை அவயவங்கள் பொருத்தும் இலவச நடமாடும் சேவை பூநகரியில்

மன்னார், ஓக. 16

மன்னார் வைத்தியசாலையில் அமைந்துள்ள 'மெத்தா' நிறுவனம் செயற்கைக் கால்கள், கைகள், போலியோ சப்பாத்துக்கள் பொருத்தும் இலவச நடமாடும் சேவையொன்றை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்த பொது மக்களுக்கும், பிறப்பினால் போலியோத் தாக்குதலுக்கு ஆளாகிய ஊனமுற்றோருக்கும் இலவச சேவையை வழங்கு முகமாகவே இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவை நாளைய தினம் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பூநகரி புனித மரியாள் கத்தோலிக்க தேவாலய முன்றிலிலுள்ள நிலையத்தில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் வைத்தியர்கள், அதிகாரிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

மேலும் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் துரித வளர்ச்சி அடைவதனால் ஒவ்வொரு வருடமும் தமது மாற்று உறுப்புக்களை மாற்ற வேண்டிய தேவையுள்ளது.

தம்மிடம் உதவி பெற்றுப் பொய்க்கால், கைகள், போலியோ சப்பாத்துக்கள், நடமாடும் கருவிகள் பெற்றவர்களும், ஏனைய கை, கால் ஊனமுற்றோர்கள் மட்டும் இந்த நடமாடும் சேவையில் பங்குபற்ற முடியுமெனவும் இந்த நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (க)

# இதுவரை புனரமைப்பு ஏதுமின்றி பரந்தன் ஆசிரிய மத்திய நிலையம்

கிளிநொச்சி, ஓக.16

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பரந்தன் ஆசிரிய மத்திய நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் இது வரை ஆரம்பிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்த நிலையிலும் இந்த ஆசிரியர் மத்திய நிலைய அபிவிருத்திப் பணிகள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

யுத்தத்தின் போது சேதமடைந்த இந்த நிலையம் புனரமைக்கப்படாததால் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் பொருத்தமற்ற பல இடங்களில் பலத்த இடர்பாடுகளுக்கு மத்தியில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையத்தின் புனரமைப்புப் பணிக்கான கேள்வி கோரப்பட்டு ஒப்பந்தகாரருக்கு வேலைகள் வழங்கப்பட்டு மூன்று மாதம் ஆகியுள்ள போதிலும் இந்தப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே உரிய தரப்பினர் விரைந்து செயற்பட்டு இந்த ஆசிரியர் மத்திய நிலையத்தைப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென ஆசிரியர்கள் கோருகின்றனர். (க-405)

# சமாதானப் பேரவை மன்னாரில் செயற்பாடு

மன்னார், ஓக.16

மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவையின் உறுப்பினர்களை வலுப்படுத்தும் நோக்கில் தேசிய சமாதானப் பேரவையானது பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

அதன் தொடர்ச்சியாகக் கடந்த வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் மன்னாரில் இரண்டு நாள் செயலமர்வு இடம்பெற்றது.

சர்வமத ஒன்றிணைவின் ஊடாக முரண்பாட்டைக் களைந்து சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்ற தலைப்பின் கீழ் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.

இரண்டு நாள்கள் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவையின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். தேசிய சமாதானப் பேரவையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் திரு.மணிமாறன் மற்றும் சில அதிகாரிகள் இந்தச் செயலமர்வை நடத்தினர்.

கடந்த 10 மாதங்களுக்கு முன்னர் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகான்பெரேரா மற்றும் சமாதானப் பேரவையின் உறுப்பினர்கள் பலர் மன்னாருக்கு வருகை தந்தனர். மன்னார் ஆயர் மன்னாரின் ஏனைய மதத்தலைவர்கள் மற்றும் சிவில் சமுதாய உறுப்பினர்கள் போன்றோர் முன்னிலையில் மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவையை ஆரம்பித்து வைத்தனர்.

12 மாவட்டங்களில் இத்தகைய சர்வமதப் பேரவைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்ட மட்ட சர்வமதப் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினர்களை ஒன்றிணைத்து 'தேசிய சமாதானப் பேரவை' என்ற அமைப்பு கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் சர்வமதப் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவராகிய அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் மன்னார் மாவட்டப் பிரதிநிதியாக தேசிய சர்வமத பேரவையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-601)

நாடகமே உலகம்...



பொருத்தமான ஒப்பனை: அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியின் போது நாடகப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் நாடகக் குழுவினர் காணப்படுகின்றனர். (க)

# கடற்கரை வீதிகள் புனரமைப்பு

மன்னார், ஓக.16

மன்னாரில் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நிதியில் பல கடற்கரை வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இவற்றுக்கான கேள்விப் பத்திரங்களை இந்த மாதம் 24 ஆம் திகதி வரையும் சமர்ப்பிக்க முடியுமென அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

பண்டாரவெளி - அரிப்பு உள்ளக வீதி, சிலாவத்துறை உள்ளக வீதி, சவுத்பார் கடற்கரை வீதி, தாழ்வுபாடு கடற்கரை வீதி, பன்னங்கட்டிக் கொட்டு கடற்கரை வீதி என்பவையே புனரமைக்கப்படவுள்ளன. (க-121)

# சமூக சேவை அதிகாரிகள் இடமாற்றம்

முல்லைத்தீவு, துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் சமூக சேவைகள் அதிகாரியாகக் கடமையாற்றிய எஸ். கணேசராஜா பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

வவுனியா மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் கடமைபுரிந்த சமூக சேவை நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் செல்வி அபிராமிதேவி ஐயாத்துரை கரவெட்டி பிரதேச செயலகத்துக்கும், கரவெட்டி பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய சமூக சேவைகள் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் செல்வி பா.கயல்விழி, யாழ். மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்துக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர். (க-121)

# திறக்கப்படும் தினத்தை எதிர்நோக்கும் மக்கள்

மல்லாவி, ஓக.16

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காயில் அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையம் மற்றும் கடைத் தொகுதிகள் திறந்து வைக்கப்படாமையால் இந்தப் பிரதேச மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் கொடுமையால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் துணுக்காயில் பஸ் நிலையம் மற்றும் கடைத் தொகுதிகள் அமைக்கப்பட்டன.

ஆனால் என்ன காரணத்துக்காகவோ இவை இன்னமும் திறந்து வைக்கப்படாத நிலையிலேயே உள்ளன. மக்கள் தினமும் இவற்றைப் பார்வையிடுவதோடு இவை எப்போது திறந்து வைக்கப்படுமெனக் கேள்வியும் எழுப்புகின்றனர்.

எனவே உரியவர்கள் இதில் கூடிய கவனம் செலுத்தி பஸ் நிலையத்தையாவது திறந்து வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமெனப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-425)

# இரணைமடுவின் நீர்க் கொள்ளளவை அதிகரித்த பின்னரே யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர்

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைப்பு இன்றி அழிவடைந்துள்ள இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டுக்களும்- உடைந்த - அழிந்த நிலையிலுள்ள வாய்க்கால்களும் முழுமையாக மீள்புனரமைப்பு செய்யப்படவேண்டிய நிலையிலுள்ளன.

மற்றும் குளத்தின் நீர்தாங்கும் கொள்ளளவை அதிகரிக்கக் கூடிய அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்று அதனூடாகவே கிளிநொச்சியில் இருந்து யாழ். மாவட்டத்துக்கான குடிதண்ணீர் கொண்டு செல்வதற்கு நாம் அனுமதித்துள்ளோம்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட விவசாய சமாசத் தலைவர் எஸ். மனோகரன் தெரிவித்தார்.

கொழும்பு - தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் தேசிய துரித - இயக்கு நிலைக் கூட்டம் அமைச்சுச் செயலாளர் ஏ.அபயகுணசேகர தலைமையில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட விவசாய சமாசக் குழுத்தலைவர் எஸ்.மனோகரன் தொடர்ந்து கூறுகையில்:

கடந்த 10 வருடங்களாக இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் பற்றிப் பேசப்படுகின்றது.

இத்திட்டம் இன்று முக்கிய பரிமாணத்தை அடைந்துள்ளது. எமது கிளிநொச்சி மாவட்ட மக்களினதும் - விவசாயிகளினதும் ஏகோபித்த கோரிக்கை யாதெனில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதுபோன்று தினமும் 27 ஆயிரம் கனஅடி அளவுதண்ணீர் மட்டுமே அனுமதிக்கப்படும். அதற்கு மேலான தண்ணீர் அனுமதிக்கப்படமாட்டாது.

இரணைமடுக்குளத்தின் அபிவிருத்தியின் பின்னர் ஒரு லட்சத்து 21 ஆயிரம் ஏக்கர் அடியில் நீர் கொள்ளளவு அதிகரிக்கப்படும்.

எனவே இரணைமடு உட்கட்டுமான அபிவிருத்திக்கான 'இபாட்' நிதியை விரைவாகப் பெற்று உதவவேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார் தலைவர் எஸ்.மனோகரன்.

இங்கு உரையாற்றிய யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவிக்கையில்:

குடிதண்ணீர்ப் பிரச்சினை என்பது வடக்குக்குப் பெரிய பிரச்சினையாகி விட்டது.

நிலத்தடி நீர் மாசு அடைந்து செல்கின்றது. மேலும் இரணைமடு உட்கட்டுமான வேலைகள் இடம் பெறுவதனை முதலில் வரவேற்று அதன் பின்னர் குடிதண்ணீர் கிளிநொச்சி யாழ். மக்களுக்குக் கிடைப்பது என்பது வரவேற்கத்தக்க விடயம் - என்றார்.

யாழ்.- கிளிநொச்சித் திட்டப் பணிப்பாளர் எந்திரி தி. பாரதிதாசன் கூறுகையில் இந்தத் திட்டத்தை முழுமையடையச் செய்வதற்கான ஆள்சேர்ப்பு பூரணமடைந்துள்ளது.

164.04 மில்லியன் அமெரிக்கன் டொலர் கடன் உதவி மூலம் இந்தத் திட்டம் நிறைவு பெறும்.

இதில் ஒரு மாநகர சபை, மூன்று நகரசபை, 13 பிரதேச சபைப் பிரதேசங்களைச் சேர்ந்த 3 லட்சம் மக்கள் பயன் அடைவர் எனவும் தெரிவித்தார். (க-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் சிறுவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்படுகின்றனர். (ம—60)

# பொதுமக்களின் வாழ்வாதார தேவைகளில் பங்களிப்பு வழங்கிவரும் வங்கிகள்

## இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர்

யாழ்ப்பாணம், ஓக.16

பொதுமக்களின் வாழ்வாதாரத் தேவைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு வங்கிகள் தமது சேவையை வழங்கி வருகின்றன.

இதன் மூலம் சிறந்த பயனைப் பெற வேண்டிய பொறுப்பும் உண்மைத் தன்மையும் வாடிக்கையாளர்களிடம் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண இலங்கை வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் கே.சீ.டி சுமணசிறி.

கொடிகாமம் பிரதேசத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட இலங்கை வங்கியின் விரிவாக்கல் கிளையின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

இலங்கை வங்கி தரமான சேவையால் கடந்த 72 ஆண்டுகளாக அதிகளவான வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது. ஏனெனில் பொது மக்களின் தேவை உணர்ந்து வங்கி தனது சேவையை வழங்கி வருகின்றது.

அத்துடன் அண்மைக் காலங்களாக வாடிக்கையாளர்களின் வங்கிச் சேவையை இலகுபடுத்தும் நோக்கில் பல விரிவாக்கல் கிளைகளை பிரதேசங்கள் தோறும் அமைத்து வருகின்றது.

இது இலங்கை வங்கியின் புதிய தொழில்நுட்ப மயமான சேவைகளில் ஒன்றாகும்.

இலங்கை வங்கி விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி பொது மக்களுக்கு கடனுதவிகளை வழங்கி வருகின்றது.

பொதுமக்களின் ஒத்துழைப்புகள் இன்னும் சற்று அதிகமாக இருந்தால் பின்தங்கிய கிராமங்களிலும் வங்கிச் சேவையை மக்கள் பெற்றுக் கொள்ள இலங்கை வங்கி புதிய வங்கிக் கிளைகளையும் அமைத்துக் கொடுக்க முன்வரும்.- என்றார். (ம-122)

# கிராமங்களின் புனிதத் தன்மையைப் பேண ஆலயங்கள் அமைய வேண்டியது அவசியம்

## பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய

யாழ்ப்பாணம், ஓக.16

கிராமங்களின் புனிதத் தன்மையைப் பேணுவதற்கும், கிராமப் பண்பாடுகளைப் பாதுகாப்பதற்கும் கிராமங்கள் தோறும் ஆலயங்கள் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். இது மக்களின் மனதில் அமைதியும் சுபீட்சத்தையும் உண்டு பண்ணும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். சின்மயா மிஷனைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய.

கிளிநொச்சி முரசுமோட்டை ஈழத்து காசி சிவலிங்கப் பெருமாள் ஆலயத்தின் கும்பாபிஷேகம் அண்மையில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பதற்கு இணங்க கிராமத்தில் உள்ள மக்களுக்கு அதிக பயன்களைத் தருவது ஆலயங்கள் தான்.

ஆலயங்கள் அமைக்கும் போது கும்பாபிஷேகம் நடத்தி பிரபஞ்சத்தில் இருக்கும் ஒரு வித சக்தியை அந்தணர்கள் தமது மந்திரங்கள் மூலமாக வரவழைப்பார்கள்.

அத்துடன் ஆலயத்தின் கோபுரமும் கிராமத்தின் பாதுகாப்புக்கு அதிகளவு சக்தியைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தொலைக்காட்சியின் ஏரியல் போன்றது ஆலயத்தின் கோபுரம். இவ்வாறு பல தார்ப்பரியங்களைத் தன்னகத்தே கொண்டவை ஆலயங்கள். உளரீதியாகவும் மருத்துவ ரீதியாகவும் அதிகளவு பயனைப் பெற்றுத் தரும்.

இதில் ஆலய வழிபாடும் முக்கியமானது. கிராமத்தின் பண்பாட்டு விழுமியங்களை எடுத்துக் காட்ட வருடந்தோறும் இடம்பெறும் திருவிழாக்கள் களம் அமைத்துக் கொடுக்கின்றன.

இதனைச் சமயப் பெரியார்களும் பெரியோரும் உணர்ந்து கிராம முன்னேற்றத்துக்கு ஆன்மீக ரீதியாக வழிகாட்ட வேண்டும்.- என்றார். (ம-313)

# வலிகாமம் வடக்கு இலக்கியப்போட்டி முடிவுகள்

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரிவுகளில் நடத்தப்பட்ட தேசிய இலக்கியப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற போட்டியாளர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

**கட்டுரை**

கனிஸ்ட பிரிவு- தேவதர்சினி தர்மகுலராஜா - துர்க்காபுரம் மகளிர் இல்லம், கலையரசி கணேசலிங்கம்- துர்க்காபுரம் மகளிர் இல்லம், விஜிதா சுரேஸ்குமார் - மகாஜனக் கல்லூரி.

சிரேஸ்ட பிரிவு- சிவரூபி நாயகி கனகசூரியர் - யூனியன் கல்லூரி, சோபிதா சுப்பிரமணியம் - கணேசா அறநெறி பாடசாலை.

**கவிதை**

கனிஸ்ட பிரிவு- நடராசா கபிலன்-யூனியன் கல்லூரி, ஜெனார்த்தனி- இராசகுலேந்திரன்-யூனியன் கல்லூரி, கைலாயநாதன் லோகிதாஸ்- கணேசா அறநெறிப்பாடசாலை.

சிரேஸ்ட பிரிவு- கஜவதனி பொன்ராசா - மகாஜனக் கல்லூரி, சங்கீதா கோபாலசுந்தரம் -யூனியன் கல்லூரி.

**திறந்த பிரிவு**

மாலாதேவி மதிவதனன்- அளவெட்டி மத்தி, நடராசா சிறிஸ்கந்தராசா-கணேஸ்வரம் அளவெட்டி, இந்திராணி ஈஸ்வரானந்தம் - பன்னாலை.

**சிறுகதை**

திறந்த பிரிவு- லக்சனா உதயகுமார் - அளவெட்டி வடக்கு, நடராசா சிறிஸ்கந்தராசா -அளவெட்டி மத்தி, பசுபதி உதயகுமார்- அளவெட்டி வடக்கு.

**இலக்கிய விமர்சனம்**

திறந்த பிரிவு- மாலாதேவி மதிவதனன் -அளவெட்டி மத்தி, சாரங்கபாணி தணிகாசலபதி - மாரிசிட்டி, அளவெட்டி, இந்திராணி ஈஸ்வரானந்தம் - பன்னாலை.

**பாடலாக்கம்**

திறந்த பிரிவு - மாலாதேவி மதிவதனன் - அளவெட்டி மத்தி, சாரங்கபாணி தணிகாசலபதி-மாரிசிட்டி, அளவெட்டி, குலசேகரம் கமலேஸ்வரன் -துர்க்காபுரம், தெல்லிப்பழை,

திறந்த பிரிவு - ஆங்கிலம் வெற்றிவேல் சக்திவேல்.

**இலக்கிய விமர்சனம்**

திறந்த பிரிவு-ஆங்கிலம் வெற்றிவேல் சக்திவேல். (ம)

# நியமனங்கள்

வடமராட்சி, ஓக.16

யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளராக கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றிய எஸ்.சிவஸ்ரீ நியமிக்கப்பட்டுள்ளார்.

சமுர்த்தி உதவி ஆணையாளராகப் பதவி ஏற்றுக் கொண்ட இவர் இலங்கை நிர்வாகசேவை அதிகாரி தரத்திலான அதிகாரி ஆவார். கடந்த காலங்களில் திட்டமிடல் சேவையில் இருந்தவர்களே மாவட்ட சமுர்த்தி ஆணையாளராகப் பணிபுரிந்தனர்.

சமுர்த்தி அதிகார சபையின் புதிய ஒழுங்குபடுத்தலின் பிரகாரம் நாடளாவிய ரீதியாக இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகளே சமுர்த்தி ஆணையாளராகத் தற்போது நியமிக்கப்பட்டு வருகின்றனர். (ம-236)

***

யாழ்ப்பாணம், ஓக. 16

வேலணை பிரதேச செயலர் பிரிவில் தையல் பயிற்சி போதனாசிரியராக திருமதி வ.இன்பராணி இந்த மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தையல் போதனாசிரியராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# விஞ்ஞான வினாடி வினா போட்டி வெற்றியாளர்

யாழ்ப்பாணம், ஓக. 16

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக் கிடையிலான ஆங்கில மொழி மூலமான விஞ்ஞான வினாடிவினாப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

தரம் -06- என்.ரமணன்- ஹாட்லிக் கல்லூரி, எஸ்.விதுசன்- ஹாட்லிக் கல்லூரி, ரி.கார்த்தீபன் - உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி.

தரம் -07- பி.தயாபரன் - ஹாட்லிக் கல்லூரி, ஜே.மிதுர்சன்-ஹாட்லிக் கல்லூரி, கே.நிதுசா - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

தரம் -08 - கே.துஸ்யந்தி -மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, எம்.சங்கீர்த்தனா -வட மத்திய பெண்கள் கல்லூரி, ரி.தயாரூபன் - ஹாட்லிக் கல்லூரி.

தரம் -09-ஆர்.திருபரன் -ஹாட்லிக் கல்லூரி, என்.துளசிகன் -நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், எஸ்.கஜானன் -ஹாட்லிக் கல்லூரி.

தரம் -10 -எஸ்.பவுனா -மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஜே.கபிலானந் - ஹாட்லிக் கல்லூரி, ரி.துவாரகா- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

தரம் -11- கே.மாதங்கி -நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஆர்.அபிமன் -விக்னேஸ்வராக் கல்லூரி, ரி.கோகுலன் - ஹாட்லிக் கல்லூரி. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டி வைக்கப்பட்டிருந்த ஆசாமியை தப்பவிட்ட பொலிஸ் மீண்டும் மடக்கிப்பிடித்து ஒப்படைத்தனர் பொதுமக்கள்

## அக்கரைப்பத்தனையில் சம்பவம்

நுவரெலியா, ஒக.16

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நியூபோட் மோர் ஹல்டோரி தோட்டப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சந்தேகத் துக்கு இடமான முறையில் நட மாடிய நபரொருவரைத் தோட்ட மக்கள் பிடித்து பொலிஸாரி டம் ஒப்படைத்துள்ளனர்.

அக்கரப்பத்தனைப் பிரதேசத் துக்குப் புதியவராகக் கருதப் பட்ட இந்த மர்ம நபர் ஹல் டோரி தோட்ட குடியிருப்புப் பகுதிக்குள் நேற்றுமுன்தினம் புகுந்துள்ளார்.

இவரின் நடமாட்டத்தினை அவதானித்த தோட்டத்தின் விழிப்புக் குழுவினர் அந்த மர்ம நபரைப் பிடித்து மரமொன் றில் கட்டியதன் பின்பு பொலி ஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அதன் பின்பு அந்த இடத் துக்கு வருகை தந்த பொலிஸார் மரத்தில் கட்டிய நிலையிலிருந்த சந்தேகநபரை அவிழ்த்துவிட்ட தன் பின்பு அவர் தப்பிச்சென் றுள்ளார்.

உடனடியாக இதனை அவ தானித்த பொதுமக்கள் அந்த நபரை மீண்டும் பிடித்துப் பொலி ஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபரிடம் பொலி ஸார் விசாரணைகளில் ஈடுபட் டனர். சுமார் 55 வயது மதிக்கத் தக்க இந்த நபர் கண்டி, ஹதர ஹெலிய பிரதேசத்தைச் சேர்ந்த வரென்றும் அவரின் பெயர் குண ரத்ன என்றும் ஆரம்ப விசாரணை களிலிருந்து தெரியவருகின்றது.

அழுக்குப்படிந்த நிலை யிலிருந்த குறிப்பிட்ட சந்தேக நபர் அக்கரப்பத்தனைப் பிர தேசத்துக்கு வந்தமைக்கான காரணத்தை இதுவரை கூற வில்லை. அக்கரப்பத்தனைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த நபரை உடனடியாக நுவரெலிய நீதி மன்றில் ஆஜர்படுத்துவதற் கான நடவடிக்கைகளில் பொலி ஸார் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அக்கரப்பத்தனைப் பிரதேசத் தில் பொலிஸ் மற்றும் இராணு வத்தின் பாதுகாப்பு வழங் கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச)

# சந்தைப்படுத்தும் சபைமூலம் நெல் கொள்வனவு

தீகவாபி, ஒக.15

அட்டாளைச்சேனை கம நலசேவைகள் மத்திய நிலை யப் பிரிவில் நெல் சந்தைப் படுத்தும் சபையின்மூலம் நெல் கொள்வனவு செய்யப் பட்டு வருகின்றது என நிந்த வூர், அட்டாளைச்சேனை கம நல அபிவிருத்தி உத்தியோகத் தர் ஐ.எல்.ஏ. ஹார்லிக் தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாறை மாவட்டத்தில் தற்போது சிறுபோக நெல் அறு வடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் விவசாயிகள் அமோக விளைச்சலை ஈட்டி வருகிறார் கள். அறுவடைசெய்யப்படும் நெல்லைத் தனியார் கடை உரிமையாளர்கள் ஆயிரத்து நானூறு ரூபா முதல் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவரை ஒரு மூடை யைக் குறைந்த விலையில் கொள்வனவு செய்து கூடிய லாபம் ஈட்டுகின்றனர். இத னால் ஏழை விவசாயிகள் பெரி தும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

இந்த விடயத்தில் சம்பந் தப்பட்ட அமைச்சு விவசாயி களைப் பாதுகாப்பதற்காக நெல் சந்தைப்படுத்தும் சபை யின் மூலம் நெல் கொள்வனவை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

நெல் சந்தைப்படுத்தும் சபை ஒரு கிலோ சிவப்பு வெள்ளை நீட்டு நெல்லை 28ரூபாவுக்கு கொள்வனவு செய்கின்றது.

ஒரு விவசாயி குறைந்தது 2 ஆயிரத்து 500கிலோகிராம் நெல்லை அரசின் உத்தரவாத விலைக்கு விற்பனை செய்ய லாம்- என்றார். (ச)

# மர்ம மனிதன் பீதியில் ஓடி தொழிலாளர்கள் படுகாயம்

கொழும்பு, ஓக. 16

மர்ம மனிதனின் நடமாட் டம் காரணமாக அச்சமடைந்த பெண் தொழிலாளர்கள் ஐந்து பேர் மயக்கமடைந்த நிலையி லும் படுகாயமடைந்த நிலை யிலும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அக்கரப்பத்தனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டொரிங்டன் அளுப்புவத்தை, நியூபோர்ட் மோர் கிளைன்லைன் ஆகிய தோட்டங்களிலேயே இந்தச் சம்பவங்கள் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றுள்ளன.

டொரிங்டன் அளுப்பவத் தைத் தோட்டத்தில் கொழுந்து பறிக்கச்சென்ற பெண் தொழி லாளியொருவர் நீர் பிடிப்ப தற்காக மட்டக்கம்பை தேயி லைச்செடியின் மீது வைத்துள் ளார். அந்தக்கம்பு திடீரென இழுக்கப்பட்டு தேயிலைச் செடிக்கு அடியிலிருந்து மர்ம மனிதனொருவன் தோன்றி யுள்ளான். அவனைக் கண்டு அச்சமடைந்த அப்பெண் அல றியபடி மயங்கி கீழே வீழ்ந் துள்ளார்.

இந்தக் அலறல் சத்தத்தைக் கேட்ட ஏனைய பெண் தொழி லாளர்களும் அலறியடித்துக் கொண்டு தட்டுத்தடுமாறி மலையிலிருந்து வெளியேற முற்பட்டபோது அவர்கள் கீழே வீழ்ந்ததால் படுகாயமடைந் துள்ளனர்.

இதேபோன்றதொரு மற்று மொரு சம்பவம் நியூபோர்ட் மோர் தோட்டப்பகுதியிலும் இடம்பெற்றுள்ள நிலையில் பெண் தொழிலாளர்கள் காய மடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவங்களில் காய மடைந்தவர்கள் மன்றாசி வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அக்கரப்பத்தனை பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ச)



கண்டி எசல பெரஹர வெற்றிகரமாக நிறைவடைந்ததை அறி விக்கும் ஆவணத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதிப் நிலங்க தெல நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கையளித்துள்ளார்.

# மர்ம மனிதர் என்ற சந்தேகத்தில் வானில் சென்றோர் மீது தாக்குதல்

மட்டக்களப்பு,ஒக.16

மட்டக்களப்பு, பளுகாமம் கிராமத்தில் வெள்ளை வானொன் றில் சென்ற ஒரு குழுவினரை மர்ம மனிதர்களெனச் சந் தேகித்து நடத்தப்பட்ட தாக்கு தலில் வானில் சென்ற ஒருவர் காயமடைந்த நிலையில் கல் வாஞ்சிக்குடி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த வானில் மேளதாள வாத்தியக் குழுவொன்றுடன் உயர்கல்வி மாணவனொருவ னும் வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவரும் பயணித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலால் வானின் கண் ணாடிகள் உடைந்து முற்றாகச் சேதமடைந்து விட்டன. (ச)

# ஊவா தோட்டங்களில் விழிப்புக் குழுக்கள் பொலிஸாருடன் இணைந்து கண்காணிப்பில்

கொழும்பு, ஓக 16

ஊவா மாகாணசபை அமைச் சர் செந்தில் தொண்டமானின் ஆலோசனையின்பேரில், கிறீஸ் ஆசாமிகளைக் கட்டுப்படுத் தும் பொருட்டுப் பெருந்தோட் டங்களில் பொலிஸாருடன், இளைஞர் விழிப்புக்குழுக்களும் கண்காணிப்பு நடவடிக்கை யில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், இந்தவிடயம் தொடர் பாகக் கிடைக்கும் முறைப்பாடு கள் குறித்துச் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று நடவடிக்கை எடுக்கு மாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் பிரிவு உறுப்பினர்களுக்கு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய இ.தொ.கா. ஆலோசகர் டி.வி. சென்னன் தலைமையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு நிலைமைகளை ஆராய்ந்து அமைச்சர் ஆறுமுகம் தொண்ட மானுக்கு அறிக்கை சமர்ப் பிக்கும்.

இதுவரை பசறையில் 2 பேரும், பதுளையில் 5 பேரும், வெலிமடையில் 6 பேரும், ஹப்புத்தளையில் 4 பேரும், மடுல்சீமையில் ஒருவரும் சந் தேகத்தின்பேரில் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலா னோர் இராணுவத்திலிருந்து தப்பி வந்தவர்கள் என்பது விசாரணை மூலம் தெரியவந் துள்ளது.

அவர்களின் மீது நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ஆறு முகம் தொண்டமான் பொலிஸ் மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

# வவுணதீவு பிரதேசத்தில் புதிய வகை தோல் நோய்

மட்டக்களப்பு,ஒக.16

மட்டக்களப்பு மாவட்டத் தின் வவுணதீவு ஆழுர்ப் பிரி விலுள்ள நாவல் தோட்டம் கிராமத்தில் புதிய வகை தோல் நோய் ஏற்பட்டுள்ளதாக மட் டக்களப்புப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரி வித்துள்ளார்.

இந்தப் பிரதேச பொது சுகா தார உத்தியோகத்தர்கள் மேற் கொண்ட ஆய்வின் பிரகாரம் நாவல் தோட்ட கிராமத்தில் இந்த நோய்க்கு 3 குடும்பங் களைச் சேர்ந்த சிறுவர்கள் உள்ளாகி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவ நேசதுரை சந்திரகாந்தன் நாவல் தோட்டம் பகுதிக்குச் சென்று நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பார்வையிட் டார். (ச)

# வதிவிட முகவரி தெரியாமல் பொலிஸில் தஞ்சமடைந்த பத்து வயதுச் சிறுவன்

கொழும்பு, ஒக. 16

வதிவிட முகவரியை சரி யாகக் கூற முடியாத பத்து வய துச் சிறுவன் ஒருவன் பண்டார கம பொலிஸில் தஞ்சமடைந் துள்ளான்.

தனது பெயர் உதார. பாதா கொட மகா வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டில் கல்வி பயில் கிறேன்.

தனக்கு ஒரு அக்காவும், அண்ணாவும் இருக்கின்றனர் என்று இந்தச் சிறுவன் தெரிவித் துள்ளான்.

சில சமயங்களில் தனது இருப்பிடம் பேருவளை என வும், மற்றொரு தடவை அளுத் கம அல்லது கந்தேகெதர என வும் கூறுகிறான் எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

பாட்டி வீட்டுக்குச் செல்வ தாகத் தந்தையிடம் கூறிவிட்டு வந்த இந்தச் சிறுவன் பண் டாரகமைக்கு வந்து எவ்வாறு எனப் புரியாத பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர். (ச-5)

# மர்ம ஆசாமிகளா? அழைக்கவும் 119, 118

கொழும்பு, ஒக.16

மர்ம ஆசாமிகளின் நடமாட் டம் குறித்து தகவல் வழங்கு மாறு பொலிஸ் மா அதிபர் பொது மக்களைக் கோரியுள்ளார்.

பொதுமக்கள் தமது பிர தேசங்களில் சந்தேகத்துக்கு இடமான முறையில் யாராவது நடமாடுவதை அவதானித்தால் 119, 118 என்ற இலக்கங்களூடா கத் தொடர்புகொண்டு அறிவிக் குமாறு அவர் கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
வாகன யோகத்துக்கு வாய்ப்பு உண்டு. சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்வதால் உல்லாசமாக இருப்பதோடு, மற்றவர்களிடமும் கலகலப்பாகப் பேசுவீர்கள். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

**இடபம்:**
கொடுத்த வாக்கை எப்படியாவது காப்பாற்றுவீர்கள். தொட்ட காரியங்கள் தடையின்றி துரிதமாக நடக்கும். நேற்று செய்யாமல் விட்ட சில வேலைகளால் இன்று அலைக்கழிப்புகளுக்கு ஆள்படலாம். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றி வைக்க முற்படுவீர்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழலாம். கடன் வசூலாகும்.

**மிதுனம்:**
பழைய சம்பவம் ஒன்றால் புதிய பிரச்சினைகள் உருவாகலாம். அரசியல்வாதிகள் குதர்க்கமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். புதிய பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் கைகூடி வரும். வியாபாரிகள் வாடிக்கை யாளர்களிடம் கடும் வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்பீர்கள்.

**கடகம்:**
அசட்டுத்தனமாக சில காரியங்களைச் செய்து விட்டு பின்னர் வருத்தம் அடைவீர்கள். கடன் வாங்கிய சிலர் அதைக் கொடுக்காமல் உங்களிடம் சாக்குப் போக்குச் சொல்லி சமாளிக்கலாம். சில விடயங்களில் தீர்க்கமான முடிவுகள் எடுக்க முடியாமல் தடுமாற்றங்களை எதிர்கொள்ளலாம். தண்டச் செலவுகளுக்கு ஆள்படலாம். மறதியால் அவதியுண்டு.

**சிங்கம்:**
சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் சாதுர்யமாக நடந்து கொள்வீர்கள். பிரியமான சிலரின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்கள் அனுகூலமாக அமையும். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிந்து மற்றவர்கள் மத்தியில் பளிச்செனத் தோன்றுவீர்கள். விடா முயற்சியால் வெற்றி பெறுவீர்கள். உறவினர்களை உபசரிக்க கணிசமான பணத்தைச் செலவிடலாம்.

**கன்னி:**
குடும்ப நலனில் அக்கறை காட்டுவீர்கள். கணவன்- மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வீண் பழிகள் குறைந்து நல்ல பெயர் எடுப்பீர்கள்.
தந்தை தொடர்பான வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்களின் குறைகளை சிலர் சுட்டிக் காட்டலாம். உதிரி வரவுகளைப் பெறலாம்.

**துலாம்:**
பேச்சில், செயற்பாடுகளில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நண்பர்கள் சிலரை நேரடியாகப் பாராட்டாமல் மற்றவர்கள் மூலம் பாராட்டுவீர்கள். உங்களின் முன்னேற்றத்தைக் கண்டு உறவினர்கள் பொறாமைப்படலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவே சில காரியங்களைச் செய்வீர்கள். புதியவர்கள் சந்திப்பு நிகழும்.

**விருச்சிகம்:**
குடும்ப உறுப்பினர்கள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். சில பிரச்சினைகளால் ஏதோ ஒரு விதமான பயம் ஆள்கொள்ளும். வீட்டுச் செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டும். உறவினர்கள் சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். சிலருக்குக் கடன் கொடுக்கலாம்.

**தனுசு:**
நேர்வழி சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். உங்களை நீங்களே எடை போட்டுப் பார்ப்பீர்கள். யாரிடமும் கோபத்தைக் காட்டாமல் அமைதியாகச் செயற்படுவீர்கள். உறவினர்களுக்கு வேண்டிய காரியம் ஒன்றை நீங்கள் செய்து கொடுப்பீர்கள். மற்றவர்கள் ஆதாயம் பெற, நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். பெரிய மனிதரால் ஆதாயம் பெறலாம்.

**மகரம்:**
சில விடயங்கள் நினைத்ததற்கு மாறாக, ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். உங்களை நீங்களே பெரிய ஆளாக நினைத்துக் கொண்டு நடப்பதால், சில பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். வீட்டு உபயோகப் பொருள் கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். மதிப்பு, மரியாதைக்கு பாதிப்பு வரும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். கூடுதல் நேரம் தூங்கலாம்.

**கும்பம்:**
கணவன் - மனைவி இடையே நிலவிய மனஸ்தாபம் விலகி, பாசம் அதிகரிக்கும். பிள்ளைகள் விடயத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். மற்றவர்களின் போட்டி, பொறாமைகளுக்கு ஆள்படலாம். கடன் மிகுதி ஒன்றை, திருப்பிக் கொடுப்பீர்கள். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை, இன்றே சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். சந்தோஷம் பெறும் நாள்.

**மீனம்:**
சிலர் உங்களிடம் பணம் கடன் கேட்கலாம். உங்களின் சொந்த விடயங்களை மற்றவர்களிடம் சொல்லி ஆலோசனை கேட்பீர்கள். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை தேவை.
வீடு மாற்றம் தொடர்பாக மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பழைய சம்பவங்களை நினைத்துப் பார்ப்பீர்கள்.

# ஈழத் தமிழருக் உரிமை கிடை ஓயாது தமிழக

## சட்டசபையில் ராஜப

## ஜெயலலிதா கொடுத்

"தமிழகத்தைக் கையாளாமல் இந்திய அரசைக் கையாள முடியாது'' என்று இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி 1983ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கூறினார்.

இந்தக் கூற்றை லலித் கூறுவதற்கு காரணமாக இருந்தவர் லண்டனில் இராணுவ விஞ்ஞானத்தை ஒரு பாடமாகப் பயின்றவரும், ஜே.வி.பியின் முன்னாள் உறுப்பினருமான ஒருவரே.

பொதுவாக தமிழகத் தலைவர்களை ஒரு பொருட்டாக சிங்களத் தலைவர்கள் வரலாற்றுக் காலம் முதற்கொண்டு மதிப்பதில்லை. இத்தகைய ஒட்டுமொத்த மனப்பாங்கின் வெளிப்பாடே, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கூற்று. தமிழகத் தலைவர்களைக் ''கோமாளிகள்'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி அவர் இழிவுபடுத்தினார்.

இது ஒரு விபத்தல்ல. இதனை சிங்கள ஊடகங்கள் கண்டிப்பதற்கோ, குறை கூறுவதற்கோ பதிலாக பெருமிதத்துடன் முக்கியத்துவப்படுத்தி இருந்தன. இது சிங்களவர்களுக்குத் தமிழகத்தின் மீதுள்ள வெறுப்பின் குறியீடு.

இத்தகைய மனப்பாங்கைப் பின்னணியாகக் கொண்டிருக்கையில் சிங்களத் தலைவர்கள் தமிழகத்திற்கும், தமிழகத் தலைவர்களுக்கும் எதிராகச் செயற்படுவது ஒன்றும் புதுமையில்லை.

இந்த நிலையில், ராஜபக்ஷ அரசு இழைத்த போர்க் குற்றத்திற்கு எதிராக தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது பற்றிக் கடந்த 5ஆம் திகதி இந்தியாவின் 'ஹெட்லைன்ஸ் ருடே' தொலைக்காட்சிக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பேட்டியளித்தார்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தனது ''சுய அரசியல் இலாபத்துக்காக'' நிறைவேற்றிய தீர்மானம் அது என்று அப்போது அவர் குறைகூறியிருந்தார்.

இதைக் கண்டு தமிழகச் சட்டமன்றம் கொதிப்புற்றது. கண்டனங்களும் ஆர்ப்பாட்டங்களும் கொடும்பாவி எரிப்புக்களும் ஆங்காங்கே நடத்தப்பட்டன. தலைவர்கள் அனைவரும் கண்டனங்களைத் தெரிவித்தனர்.

பாதுகாப்புச் செயலாளர் ஒருவர் இலங்கையைவிட நிலப்பரப்பிலும் ஆள் எண்ணிக்கையிலும் மிகப் பெரிய மாநிலத்தின் முதல்வரைப் பற்றி இராஜதந்திர மரபுகளை மீறிக் கருத்துத் தெரிவித்திருந்த போதும், செல்வி ஜெயலலிதா மிகப் பொறுப்புவாய்ந்த பதிலை சட்டமன்றத்தில் கோத்தபாயவுக்கு அளித்துள்ளார்.

### ஜெயலலிதா சாட்டையடி

தமிழகத் தலைவர்களை கிள்ளுக்கீரைகளாக சிங்களத் தலைவர்கள் நினைப்பதற்கு ஜெயலலிதாவின் பதில் ஒரு சாட்டை அடியாக அமைந்தது.

இராஜதந்திர நகர்வுகளில் சிங்களத் தலைவர்கள் கைதேர்ந்தவர்கள் என்கின்ற அபிப்பிராயம் பொதுவாக இராஜதந்திர வட்டாரங்களில் உண்டு. ஆனால் அதற்கு மாறாக, புலிகளைத் தாம் தோற்கடித்தவர்கள் என்கின்ற மமதையின் பெயராலும், இராஜதந்திரத்தில் வல்லவர்கள் என்கின்ற ஒருவகை மிடுக்காலும் கோத்தபாய போன்றவர்கள் கட்டுமீறி பேசும் இயல்பு கடந்த இரண்டு ஆண்டுகளில் அவதானிக்கப்படும் பொது இயல்பாக உள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டு அரசியலில் நிலைகள் இரண்டிலுமே கோத்தபாயவின் இந்த கட்டுப்பாடற்ற, எல்லாவற்றையும் தூக்கி எறிந்து பேசும் ராஜதந்திரம் காணப்படுகிறது. அந்த இயல்பின் ஒரு வெளிப்பாடாகவே 'ஹெட்லைன்ஸ் ருடே' தொலைக்காட்சிக்கான பேட்டியும் அமைந்துள்ளது.

தமிழகத்தை இந்தியாவிலிருந்து தனிமைப்படுத்தி ஒதுக்கிவிட்டு, புதுடில்லியுடன் மட்டும் தமது இராஜதந்திரத் தொடர்புகளைக் கொண்டு நகர்த்தலாம் என்று சிங்கள ராஜதந்திரிகள் நினைக்கிறார்கள். அது சுத்தத் தவறு.

தென்னகம்தான் இந்தியாவின் இருதய பூமி. தெற்கே 2,500 மைல் நீளமான மிக நீண்ட கடல் எல்லையை இந்தியா கொண்டுள்ளது. வடக்கே சீனாவும், வடமேற்கே பாகிஸ்தானும், வடகிழக்கே பங்களாதேஷ், பர்மாவும், இந்தியாவைப் பாக்கு வெட்டிக்குள் அகப்பட்ட பாக்காகக் கௌவி உள்ளன.

இந்த நாடுகள் அனைத்தும் இந்தியாவின் நட்பு நாடுகள் என்று சொல்வதற்குக் கிடையாது. இந்த நிலையில் தென்பகுதியில் தமிழகத்தின் அமைவிடம் இந்தியாவின் உயிர்வாழ்வுக்கான கேந்திர நிலையமாகும். எனவே இந்திய பாதுகாப்பு வியூகத்துக்குள், தமிழகத்துக்குக் கீழே 2,500 மைல் நீளமான கடல் எல்லைப் பரப்பின் மத்தியில் உள்ள இலங்கைத் தீவானது இந்திய பாதுகாப்பு வளையத்துக்குள் அமைந்திருக்கும் ஒரு புள்ளியாகவே பார்க்கப்படுகிறது.

தனது கடற்பரப்பை பாதுகாப்பதில், தமிழகம் - இலங்கை இடையிலான உறவு இந்தியாவுக்கு முக்கியமானது. இந்த உறவை சுமுகமாக வைத்திருப்பதில் புதுடில்லி அதிக அக்கறை செலுத்துகிறது.

இலங்கைத்தீவில் அரசு கையாளும் முரட்டுப் போக்கால் தமிழகம் கொள்ளக்கூடிய கவலை என்பது புதுடில்லியையும் ஒரேசமயத்தில் தாக்கக்கூடியது.

இந்தப் பின்னணியில் தமிழகத்தைப் பரந்த இந்தியாவில் இருந்து தனிமைப்படுத்தலாம் என்று சிங்கள அரசு நினைப்பது தவறான ராஜதந்திரத்தின் ஒரு பகுதியே.

தமிழக சட்டமன்றத்தில் கோத்தபாயவுக்கு ஜெயலலிதா வழங்கிய பதிலில் இந்த விடயம் தெளிவாக



வெளிப்படத் தொடங்கியுள்ளது.

முதல்வர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் ஆற்றிய உரை பின்வருமாறு:

''கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை உள்நாட்டுப் போரின் போது, மனிதாபிமானமற்ற முறையில் ஈவு இரக்கமின்றி அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் மீது ராணுவத் தாக்குதல் நடத்தி அதன் விளைவாக பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இறந்ததை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

### கோத்தபாயவின் கூற்று கண்டிக்கத்தக்கது

''எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன், இனப்படுகொலையை நடத்தியவர்களை போர்க் குற்றவாளிகள் என அறிவிக்க இந்திய அரசு, ஐக்கிய நாடுகள் சபையை வற்புறுத்த வேண்டும் என்றும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு மற்றும் முழு சம உரிமை கிடைக்கும் வரை அந்த நாட்டின் மீது, பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டு என்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 8.6.2011 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

''இந்தத் தீர்மானத்தை நான் அரசியல் ஆதாயத்துக்காக கொண்டு வந்து நிறைவேற்றியதாக கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருக்கிறார். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

''சிங்களவர், தமிழர் அல்லது இஸ்லாமியர் என்ற எந்தவித பாகுபாடுமின்றி அனைவரும் இலங்கையர் என்ற முறையில்தான் நடத்தப்படுகின்றனர் என்றும் மற்றவர்களைவிடத் தங்கள் நாட்டு குடிமக்கள் மீது தாங்கள் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்றும் பேட்டி அளித்திருக்கிறார் கோத்தபாய ராஜபக்ஷ. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் ஆகும்...

''அடுத்தபடியாக, இலங்கை கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதை தடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசுக்கு அறிவுரை கூறி இருக்கிறார் கோத்தபாய ராஜபக்ஷ. கச்சதீவுக்கு இதுவரை வந்து கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மற்றும் புனிதப் பயணிகள் இதே காரணத்துக்காக வந்து செல்லும்போது, பயண ஆவணங்களையோ அல்லது நுழைவிசைவையோ பெறவேண்டும் என இலங்கை கோராது என்று இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தும் பொருட்டு, இந்திய மீனவர்கள் கச்சதீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுதந்திரமாக மீன் பிடிக்கலாம் வலைகளை உலர்த்துவதற்கு அந்தத் தீவை பயன்படுத்திக் கொள்ளலாம் என அப்போதைய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்துக்கு முற்றிலும் முரணாக நடந்து கொண்டு விட்டு தமிழ்நாடு அரசிற்கு அறிவுரை கூறுவது, சாத்தான் வேதம் ஓதுவது போல் உள்ளது...

''மேலும், கோத்தபாய ராஜபக்ஷ, வட இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதுதான் தற்போதைய முக்கிய பணி என்றும் போர்க்குற்றவாளிகள் என்று தற்போது கூறுவது பயனற்றது என்றும் பேட்டி அளித்து இருக்கிறார். இலங்கையில் நிலவும் உண்மை நிலவரம் என்னவென்றால், போர் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருக்கு
# டைக்கும்வரை
# ழகம்

## ராஜபக்ஷாக்களுக்கு
## ாடுத்தார் சாட்டையடி



காணவோ; பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கோ எந்தவிதமான நடவடிக்கையும் இலங்கை அரசால் எடுக்கப்படவில்லை என்பதுதான்.

''இவருடைய இந்தப் பேட்டியிலிருந்தே இலங்கை ராணுவம் போர்க் குற்றம் புரிந்து இருக்கிறது; இலங்கை அரசு போர்க்குற்றம் புரிந்திருக்கிறது என்று மறைமுகமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. உண்மையிலேயே இலங்கை ராணுவம் போர்க்குற்றம் செய்யவில்லை என்றால், இது தொடர்பான சர்வதேச விசாரணைக்கு தயார் என இலங்கை அரசு அறிவித்து இருக்கவேண்டும். அதைச் செய்யாமல் தேவையற்ற பேட்டிகளை அளித்து வருவது செய்த தவறை மூடி மறைக்கும் பணியில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறதோ என்ற சந்தேகத்தை சர்வதேச நாடுகள் மத்தியில் தற்போது ஏற்படுத்தியுள்ளது.

''இந்தச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மீது மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காததுதான், இது போன்றதொரு பேட்டியை அளிப்பதற்கான துணிச்சலை கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அளித்திருக்கிறது என்ற ஐயம் நடுநிலையாளர்களுக்கு, தமிழ் உணர்வாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

''இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும்வரை; இலங்கைத் தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படும்வரை; சிங்களவர்களுக்கு இணையான அந்தஸ்து அவர்களுக்குக் கிடைக்கும்வரை எனது தலைமையிலான அரசு ஓயாது என்பதையும் தமிழர்களின் இந்த நியாயமான உரிமைகளை வென்றெடுக்க தேவையான ராஜதந்திர நடவடிக்கைகளை எனது அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் பேட்டி அளித்துள்ள இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர், கோத்தபாய ராஜபக்ஷவுக்கு இந்தியத் தூதர் மூலம் தனது கண்டனத்தை மத்திய அரசு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' - என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார் தமிழக முதல்வர்.

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை இனப்படுகொலையைக் கண்டு தலை கவிழ்ந்த சிங்கள அரசு அதற்கான பழியை ஜே.வி.பி. தலையில் சுமத்தி அதனைப் பலிக் கடாவாக்கப் பார்த்தது. பிரச்சினையை ஜே.வி.பி. பக்கம் திசைதிருப்புவதற்காக அதனைத் தடை செய்தது.

### ஜே.வி.பி. உறுப்பினரின் புத்திமதி

ஜே.வி.பி. தடைசெய்யப்பட்டபோது திருகோணமலையில் துறைமுக முகவர் தொழிலில் ஈடுபட்டிருந்த அக் கட்சியின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசாரணையின் போது அவர் லண்டனில் இராணுவ விஞ்ஞானக் கல்வி பயின்றது தெரிய வந்தது. அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலியிடம் இந்தத் தகவல் உடனடியாகத் தெரிவிக்கப் பட்டது. அவரைத் தன்னிடம் கொண்டு வருமாறு அத்துலத் முதலி கட்டளையிட்டார்.

லலித்தும், அந்த ஜே.வி.பி. முன்னாள் உறுப்பினரும் சிநேக முறையில் பேசத் தொடங்கினர். இவர் இராணுவக் கல்வி பயின்றிருந்தவர் என்ற வகையிலும், ஒரு கிளர்ச்சியாளர் அமைப்பைச் சேர்ந்தவர் என்ற வகையிலும், தமிழரின் ஆயுதப் போராட்டத்தை ஒடுக்க என்ன வழிவகைகள் உண்டென லலித் அவரிடம் ஆலோசனை கேட்டார்.

அதற்கு அவர் பின்வருமாறு பதிலளித்தார். ''பாலஸ்தீன விடுதலை இயக்கங்களை யூதர்களால் இலகுவில் அடக்க முடிகிறது. 22 அரபு நாடுகளின் பின்னணிதான் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதான பலம். ஆனால் அந்த 22 நாடுகளில் பாலஸ்தீன விடுதலைப் படை எங்கு மறைந்திருந்தாலும் அங்கு சென்று விமானத் தாக்குதல்களையோ அல்லது வேறு தாக்குதல்களையோ நடத்தக் கூடிய வல்லமை யூதர்களிடம் உண்டு.

அதனால்தான் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை யூதர்களால் இலகுவில் எதிர்கொள்ள முடிகிறது. அதேபோல தமிழகத்தின் மீது இலங்கை அரசால் விமானக் குண்டுகளை வீசமுடியாது. இந்தப் பின்னணியில் புலிகளையோ, ஏனைய இயக்கங்களையோ இராணுவ ரீதியில் தோற்கடிப்பது சாத்தியமில்லை. எனவே அரசியல் ரீதியாக தமிழகத்தை கையாள்வதால் மட்டுமே தமிழரின் போராட்டத்தை நசுக்க முடியும்'' என்று அவர் புத்தி கூறினார்.

இந்த ஜே.வி.பி. முன்னாள் உறுப்பினரின் பெயர் எனக்குத் தெரியாது. ஆனால் அந்த ஜே.வி.பி. உறுப்பினரின் இரத்த உறவினரும், தமிழீழப் போராட்டத்தை அங்கீகரித்தவருமான சிங்கள இனத்தைச் சேர்ந்த எச்.என்.பெர்னாண்டோ அந்த ஜே.வி.பி. உறுப்பினர் லலித் அத்துலத் முதலியிடம் இப்படிக் கூறினார் என்று கட்டுரையாளரிடம் கூறியிருந்தார்.

அந்த ஜே.வி.பி. முன்னாள் உறுப்பினரின் கூற்று மிகவும் சரியானது. ஈழப் போராட்டத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்றால் தமிழகத்தை இராஜதந்திர ரீதியில் சரிவரக் கையாள வேண்டியது சிங்கள அரசுகளுக்கு அவசியம்.

இந்த அடிப்படையை லலித் அத்துலத்முதலி சரிவரப் புரிந்து கொண்டிருந்தார். இதற்கான முன்முயற்சிகளிலும் அவர் அக்கறை காட்டி வந்தார். ஆனால் அவர் காலத்தில் அது சரிவரவில்லை. இத்தகைய சிந்தனைப் போக்கையே மூத்த சிங்கள இராஜதந்திரிகள் பலரும் பொதுவாகக் கொண்டுள்ளனர்.

### சவால் விடும் சக்தியாக சீனா

ஆயினும் உலக ஒழுங்கு மாறியுள்ள இன்றைய சூழலில் இந்து சமுத்திரத்தில் இந்தியாவுக்குச் சவால் விடக்கூடிய பெரும் சக்தியாகச் சீனா வளர்ந்துவரும் பின்னணியில், பெய்ஜிங்கை வைத்தே புதுடில்லியைச் சமாளித்து விடலாம் என்ற எண்ணம் ராஜபக்ஷ சகோதரர்களிடம் தற்போது அதிகரித்துள்ளது.

தமிழகத்தையும், இந்தியாவையும் பற்றி அதிகம் கவலை கொள்ளத் தேவையில்லை என்று இப்போது ராஜபக்ஷாக்கள் நினைக் கத் தொடங்கி விட்டார்கள். அதனால்தான் கோத்தபாயவும், ஏனைய சிங்களத் தலைவர்களும் இந்த வழியில் இப்படித் துணிந்து பேசுகின்றனர்.

தமிழகம் இந்தியாவிடம் இருந்து தனிமைப் படுத்தப்படக்கூடிய மாநிலமல்ல என்பது கொழும்புக்கு இப்போது புரிகின்றது. இலங்கை இனப்பிரச்சினையின் பெயராலும், கொன்றொழிக்கப்பட்ட தமிழர்களின் பெயராலும், இந்து சமுத்திர முக்கியத்துவத்தின் பெயராலும் தமிழகம் சர்வதேச முக்கியத்துவம் பெறும் நிலைக்கு மாறி விட்டது என்பது கடந்த சிலமாத தமிழக அரசியலை அவதானிக்கும் போது தெரிகிறது.

முள்ளிவாய்க்கால் வெற்றியுடன் தமிழரின் கதை முடிந்துவிட்டதாக ராஜபக்ஷாக்கள் நினைக்கிறார்கள். ஆனால் உண்மை மறுவளமானது. முள்ளிவாய்க்கால் பலபுதிய பரிமாணங்களையும், புதிய நியாயங்களையும், புதிய சர்வதேசக் கவனத்தையும் தமிழீழப் போராட்டத்துக்கு அளித்துள்ளது. பிராந்திய அரசியலில் தமிழகம் ஒரு தீர்க்கமான பாத்திரத்தை எடுப்பதற்கான தொடக்கத்தை முள்ளிவாய்க்கால் பேரழிவு ஏற்படுத்திவிட்டது.

அத்துடன் முள்ளிவாய்க்கால் பேரழிவு, தமிழகத்தின் தலையணைக்குள் வைக்கப்பட்ட வெடிகுண்டாக மாறி இலங்கை விவகாரத்தைப் பொறுத்தமட்டில் பிராந்திய, சர்வதேச அரசியலில் தமிழகத்தை ஒரு தீர்க்கமான பாத்திரம் வகிக்குமாறு உந்தும் நிலையையும் உருவாகிவிட்டுள்ளது என்பது தான் யதார்த்தம்.

**ச.வடிவேற்கரசன்**

## பழைய படங்களா? பழைய பிணங்களா?



பட்டினத்தார் ஒரு தெரு வழியாக ஆனந்தமாக நடந்து போய்க் கொண்டிருந் தார். அப்போது ஒரு வீட்டு வாசலில்கூட்டமாக உட்கார்ந்து அழுது கொண்டிருந்தார்கள். அந்த வீட்டில் யாரோ இறந்துவிட்டார். அங்குபோய் அழுகிறவர்களை உற்று உற்றுப் பார்த்த பட்டினத்தடிகள் 'ஓ' வென்று தானும் அழுதார். அவர்களை விட வேகமாக சத்தமாக அழுதார்.

அவரைப் பார்த்த ஊர்மக்கள் 'யாரோ இறந்தவரின் நெருங்கிய நண்பர் போ லும்' என்று கருதி அவரைச் சமாதானப்படுத்தினார்கள். அவரோ நிறுத்துவதாக இல்லை. பேச்சுக் கொடுத்தார்கள். ''இறந்தவர் உங்கள் உறவினரா? என்ற னர். ''இல்லை'' என்றார். ''நண்பரா?'' என்றனர். இல்லை, இவரை எனக்குத் தெரியவே தெரியாது'' என்றார். ''பின் ஏன் இவருக்காக இவ்வளவு அழுகிறீர்கள்?'' என்று கேட்டனர். ''போய்விட்ட அவ னுக்காக அழவில்லை.. அவனுக்காக அழுகிற உங்களுக்காக அழுகிறேன்'' என்றார். யாருக்கும் புரியவில்லை. பட்டினத்தார் தொடர்ந்தார்.

''இறந்தவனுக்காக அழுகிற நீங்கள் யாருமே சாகப்போவதில்லையா? அது போகும் பிணம். நீங்களோ சாகும் பிணம். இவ்வளவுதான் வித்தியாசம். இந்த உண்மை தெரியாது அழுகிற உங்கள் மூடத்தனத்தை நினைத்து நான் அழுகிறேன்'' என்றார். போம்பிணம் என்று செத்தாரையும் சாம் பிணம் என்று மற்றாரையும் காட்டிய பட்டி னத்தார் மொழி படிக்க வேண்டிய ஒன்று.

''நாளும் நாம் சாகின்றோமால்
நமக்கு நாம் அழாத தென்னே?''

என்று பழைய பாட்டு ஒன்று உண்டு. அருமையான பாட்டு.

தினம் தோறும் கொஞ்சம் கொஞ்சமாக நாம் சாகிறோம். தோல் சாகிறது. எலும்பு தேய்கிறது. கண் கெடுகிறது. காது மந்தமாகிறது. இப்படி எல்லாமே சிறிது சிறிதாகச் செத்துக் கொண்டே போகிற போது ஒருநாள் உடம்பு முற்றிலும் பயனற்றதாகிற போது அழுது ஆர்ப்பாட்டம் செய்வது அறிவுடைமையா?

பகவத் கீதையின் மரணம் பற்றிய விளக்கம் மிக மிக நுட்பமானது. தாய் வயிற்றில் கருவாக உருவாகிறோம். சிசுவாக ஜனிக்கிறோம். பால பருவத்தில் ஆடுகின்றோம். இளமையில் துள்ளுகிறோம். முதுமையில் துவளுகிறோம். மாறிக்கொண்டே போன நாம் மரணத்தைச் சிறிது சிறிதாக் நுகருகிறோம். இளமை வந்தது. அப்போது குழந்தை உடல் செத்தது. இளமை செத்த போது முதுமை வந்தது. அப்படியானால் ஒவ்வொரு மாறுதலிலும் பழைமை மரணம் அல்லவா அடைந்தது. இந்த மாறுதல் விளங்க முடியாதபடி அணு அணுவாக ஓயாமல் நிகழ்ந்து கொண்டே இருப்பதால் நாம் பதற்றம் அடைவதில்லை. ஒரேநாள் இரவில் நிகழாமல், ஒவ்வொரு விநாடியும் இந்தக் கொடிய மரணம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

நமது பழைய புகைப்படங்களை உற்றுப்பார்த்தால் நமது மரணத்தின் வீரியம் புலனாகும். நாம் எவ்வளவு செத்திருக்கிறோம் என்பது புரியவரும். கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் மிக அழகாக இதைப்படம் பிடிக்கிறார்கள்.

''நமது புகைப்பட ஆல் பத்தைப் புரட்டினால் இருப்பவை
பழைய படங்கள் அல்ல பழைய பிணங்கள்''

நமது ஒவ்வொரு பழைய படமும் நமது பழைய பிணம் என்பது புரிந்தால் ஒரு பிணத்திற்காக ஒப்பாரிவைப் போமா? தாயின் கருவில் வெறும் மாமிச கோளமாய், சதைப்பந்தாய் உருண்டுள்ள க்ண் மூக்கில்லாத பிண்டத்தின் புகைப்படம் இன்று Scan மூலம் எடுக்கலாம். அதைக் கொண்டு வந்து உன் பழைய போட்டோ என்று காட்டினால் நம்புவோமா?

பஞ்சபூதங்களின் கூட்டுக் கலவையாய் உடம்பு கூடிக்கூடி பருக்கிறது. வளருகிற மாதிரி தோற்றம் காட்டி மறைந்து கரைகிறது. உண்மையில் இத்தகைய மாற்றங்களுக்கு இடையிலும் ''நான் மாறுகிறேன்'' என்பதை உள்ளிருந்தபடியே உணருகிறதே.. அது என்ன? அதுதான் ஆத்மா. அழிவில்லாத விழிப்பு அறிவுபூர்வமான இருப்பு சாட்சி அது நாம் என்கிற தெளிவே ஆத்ம ஞானம். இந்த உடலை நாம் என்பதே அறிவீனம். ஒரு கதை சொல்லட்டுமா?

மழையில் ஒரு பண்ணையார் நடந்து போனார். கால் செருப்பு அறுந்துவிட்டது. நடக்க வெகு கஷ்டமாக இருந்தது. செருப்பைக் கையில் தூக்கி நடக்க அவர் கௌரவம் இடம் தரவில்லை. பக்கத்தில் இருந்த ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். அறுத்த செருப்பை அவர் வீட்டில் விட்டுவிட்டுப் போவதாகவும் நாளை வந்து எடுத்துக் கொள்வதாகவும் சொன்னார். அறுந்து போன பழைய செருப்பைத் தமது வீட்டில் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள நண்பர் சம்மதித்தார்.

தெருவில் இறங்கி சிறிது தூரம் சென்ற பண்ணையார் அறுந்து கிடந்த மின் கம்பியை வெறுங்காலால் மிதிக்க செத்தேபோனார். மறுநாள் அவர் உடம்பை அலங்கரித்து நாலு பேர் சுமக்க ஊரே பின்னால் வந்தது. எதிர்பாராத கடும் மழை மறுபடியும் கொட்டியது. சுடுகாடு வரை சுமப்பது கஷ்டம் என்றே எல்லோருக்கும் தோன்றியது.

சரியாக நேற்று செருப்பு வைத்த வீட்டு வாசல் வந்துதும் ஒருவர் உள்ளே ஓடினார். ''ஐயா இந்தப் பிணம் இன்று ஒருநாள் உங்கள் வீட்டில் இருக்கட்டும். நாளை வந்து எடுத்துப் போய் சுடுகாட்டில் வைக்கிறோம்'' என்று கேட்டார். வீட்டுக்காரர் ''யார் பிணத்தையோ கொண்டு வந்து எம் வீட்டில் ஏன் வைக்கிறீர்கள்? என்று சீறினார்.

இறந்து போன நாய்த் தோலால் செய்யப்பட்ட பழைய செருப்புக்குக் கிடைத்த மரியாதை, பாதுகாப்பு அதன் எஜமானுக்கு இல்லையே? ஏன்? யோசித்தீர்களா?

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெளியீடான
கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு

பி.பத்மநேசன்
ஏழாலை சன்மார்க்க வித்தியாலயம்

பரீட்சை இலக்கம்: 14

# தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:........................ | **வினாத்தாள்-II** | நேரம்: 45 நிமிடங்கள்

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**பின்வரும் பாடலடிகளை வாசித்து நன்கு விளங்கிக்கொண்டு அதன் கீழ்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

எங்கள் வீட்டுத்தோட்டம் என்றும் எழிலைத் தருமே
பல்வகையில் பயிர்கள் பாங்காய் பலனைத் தருமே
உள்ள நல்ல காய்கறி ஊட்டமுள்ள காய்கறி
உடம்பைக் காக்கும் காய்கறி உணவுக் கேற்ற காய்கறி.

கொடியில் விளையும் கிழங்கும் செடியில் விளையும் கிழங்கும்
உருண்டு திரண்டு பருத்து மாப்பொருளாய் வருமே
இனிப்பான கிழங்கும் இனிக்காத கிழங்கும்
எல்லோரும் விரும்பும் உணவாக விளங்கும்.

(01) இப்பாடல்களுக்கு வழங்கக்கூடிய பொருத்தமான பெயர் என்ன?
..................................................................................

(02) இப்பாடலில் உணவுக்குப் பெறப்படும் எவ்வெவ் உணவுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன?
..................................................................................

(03) "எல்லோரும்" எனும் சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லினை எழுதுக.
..................................................................................

(04) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லினைத் தருக?
..................................................................................

(05) பாடலில் இடம்பெற்ற இணைமொழிச் சொல் ஒன்றினை எழுதுக?
..................................................................................

(06) "நல்ல" என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல் யாது?
..................................................................................

(07) பாடலில் இடம்பெற்ற அஃறிணைப் பலவின்பால் சொல் ஒன்று எழுதுக.
..................................................................................

(08) பாடலில் இடம்பெற்ற உயர்திணை தன்மைச் சொல் ஒன்று எழுதுக.
..................................................................................

(09) "ஊட்டமுள்ள" என்ற சொல்லினைப் பிரித்தெழுதுக.
..................................................................................

(10) பந்தியில் இடம்பெற்ற உணவுப் பொருளில் உள்ள ஊட்டச்சத்து ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை எழுதுக.
..................................................................................

*** கீழ்வரும் தமிழ் சொற்களின் கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

(11) விலங்கு ---------------- (12) நகரம் ----------------------

(13) வானொலி ---------------------------

*** கீழ் உள்ள சிங்களச் சொற்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

(14) பொ(த்)த------------- (15) மாலு ----------------------

(16) மிதி------------------

*** பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக மாற்றுக.**

(17) கடமையாகும் / தேசிய / நாம் / சொத்துக்களை / அனைவரினதும் / பாதுகாப்பது
..................................................................................

(18) அபிவிருத்தி /நாடு தத்தமது/ஒவ்வொருவரும்/விரைவாக/கடமைகளை/ செய்தால்/சரியாக/ அடையும்
..................................................................................
..................................................................................

*** பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

(19) மேகக்கூட்டம் கலைந்து சென்றதும் வானம் தெளிவாகக் காணப்பட்டது. இவ் வாக்கியத்தில் உள்ள எழுவாய்ச்சொல் யாது?
..................................................................................

(20) பளபளக்கும் மேனியை உடைய கண்ணன் அக்கம்பக்கம் பார்த்தவாறு மெல்ல மெல்ல நடந்து வந்தான். இதில் வந்துள்ள அடுக்குமொழிச் சொல்லினை எழுதுக.
..................................................................................

*** பின்வரும் கூற்றுக்களுக்குரிய சரியான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கீறிடுக.**

(21) அரிச்சந்திரன் வாய்மை தவறாது ஆட்சி புரிந்த மன்னனாவான். இதில் உள்ள வாய்மை என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல் யாது?
1. பொய் 2. சத்தியம் 3. உரையாடல்

(22) ஆத்திகன் எப்பொழுதும் கடவுள் உண்டு என வாதிடுபவன். இக்கூற்றில் வரும் ஆத்திகன் என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல் யாது?
1. ஆதித்தன் 2. நாத்திகன் 3. பார்த்தீபன்

(23) செம்மஞ்சள் என்ற சொல் சரியாகப் பிரிக்கப்பட்டுள்ள முறை எது?
1. செம்+மஞ்சள் 2. செஞ்+மஞ்சள் 3. செம்மை+மஞ்சள்

(24) பின்வருவனவற்றில் அஃறிணைப் பலவின்பால் நிகழ்காலச் சொல் எது?
1. பறக்கின்றன 2. பறந்தன 3. பறக்கின்றது.

*** கீழே "அ" பகுதிக்குப் பொருத்தமானதை "ஆ" பகுதியில் இருந்து தெரிந்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள கூண்டினுள் எழுதுக.**

| "அ" | | "ஆ" |
|---|---|---|
| (25) கிவி | ---------- | 1. தேனீ |
| (26) மகரந்த சேர்க்கை | ---------- | 2. எளியபொறி |
| (27) தாளம் | ---------- | 3. தோற்கருவி |
| (28) கப்பி | ---------- | 4. இறக்கையற்றபறவை |
| | | 5. பறக்கக்கூடியது |
| | | 6. புத்தளிப்புக்கருவி |

*** கீழே 29, 30ஆம் வினாக்களிற்குரிய மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(29) அருகில் உள்ள பிராணியின் பெயர் யாது?



1. வாத்து
2. பென்குயின்
3. கிவி

(30) இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள நாடு எது?
1. இலங்கை 2. இந்தியா 3. பாகிஸ்தான்

(31) கீழே உள்ள உபகரணங்களில் மீனவர் பயன்படுத்துவது எது?
1. நாம்புவ 2. மரக்காஸ் 3. அத்தாங்கு

(32) அருகில் உள்ள வீதிக்குறியீட்டின் கருத்து யாது?



1. பேருந்து நிறுத்தத் தடை
2. பாதசாரிகள் கடவை
3. பேருந்துத் தரிப்பிடம்

(33) கீழ்வருவனவற்றில் விற்றமின் C அதிகமாக உள்ள உணவுப் பொருள் எது?
1. கருவாடு 2. பூசணிக்காய் 3. தோடம்பழம்

(34) அரச இலச்சினையில் சௌபாக்கியத்தைக் குறிப்பது எது?
1. தர்மச்சக்கரம் 2. பூவிதழ் 3. நிறைகலசம்

(35) உதைபந்தாட்ட விளையாட்டில் ஓர் அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை எத்தனை?
1. 6 2. 15 3. 11

(36) அருகில் உள்ள இசைக்கருவி எவ்வகையினைச் சார்ந்தது?





1. தோற்கருவி
2. நரம்புக்கருவி
3. காற்றுக்கருவி

(37) இலங்கையில் அதிகமான மழைவீழ்ச்சி கிடைக்கும் இடம் எது?
1. மன்னார் 2. வட்டவளை 3. நுவரெலியா

(38) கீழ் உள்ள கோள்களில் மிகப் பெரிய கோள் எது?
1. புதன் 2. சனி 3. வியாழன்

(39) பித்தளைப் பாத்திரத்தினைத் தூய்மையாக்குவதற்கு பொருத்தமான பொருள் எது?
1. விம் 2. பழப்புளி 3. சாம்பல்

(40) கீழ் உள்ள தையல் முறைகளில் சிறுநூலோடித் தையல் முறை எது?

1.  2.  3. 

(41) அருகில் தரப்பட்டுள்ள தேசிய வீரரின் பெயர் யாது?



1. T.P. ஜாயா
2. C.W.W. கன்னங்கரா
3. S.W.R.D. பண்டாரநாயக்கா

(42) கீழ் உள்ள தாவரங்களில் பூச்சி உண்ணும் தாவரம் எது?
1. பன்னம் 2. கிளிச்சாடிச்செடி 3. சீதேவியார் செங்கழுநீர்

(43) இலங்கையில் உள்ள நீர்வீழ்ச்சிகளில் மிகவும் உயரமான நீர்வீழ்ச்சி எது?
1. பம்பரக்கந்தை 2. துன்கிந்தை 3. மகாவலி

(44) அருகில் உள்ள குறியீட்டின் கருத்து யாது?



1. கீழே செல்லவும்.
2. மின்சாரம் தாக்கும் அபாயம்.
3. மின்னல் தாக்கும் அபாயம்.

(45) கீழ் உள்ள பிராணிகளில் எட்டுக்கால் உள்ள பிராணி எது?
1. மரஅட்டை 2. சிலந்தி 3. நண்டு

(46) "SLS" என்ற குறியீட்டின் கருத்து யாது?
1. சர்வதேசதரச் சான்றிதழ் 2. இலங்கைத் தரச் சான்றிதழ் 3. புத்தகத்தரச் சான்றிதழ்

(47) கீழ் உள்ள பூக்களில் நள்ளிரவில் பூக்கும் பூ எது?
1. குண்டுமல்லி 2. ஆடதோடை 3. கடுபுல்

(48) கீழ் உள்ள திரவங்களில் மிக விரைவில் ஆவியாகும் திரவம் எது?
1. இரசம் 2. தண்ணீர் 3. ஓடிக்கொலோன்

(17 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநபர் விருப்புக்காக சண்டிலிப்பாய் கால்நடை வைத்தியசாலை இடமாற்றமா?


சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கால்நடை வைத்தியசாலை புனரமைப்புக்கு என நவாலி, கட்டுடையில் அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் இப்போது திடீரென கட்டட புனரமைப்பு பணி இடை நிறுத்தப்பட்டுள்ளது. தனிநபர் விருப்புக்காகவே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

நீண்ட காலமாகச் சண்டிலிப்பாய் பிரிவுக்கான கால்நடை வைத்தியசாலை வாடகைக் கட்டடத்திலேயே சண்டிலிப்பாயில் இயங்கிவந்தது. எனவே அதற்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அதாவது மையப்பகுதியில் இதற்கென கால்நடை காணி கோரப்பட்டது.

மானிப்பாயை சேர்ந்த முன்னாள் நீதிபதி. இரா. வசந்தசேனன் நவாலி, கட்டுடையில் கால்நடை வைத்தியசாலை அமைப்பதற்கான காணியை இலவசமாக வழங்கினார்.

இதனையடுத்து திட்டமிடல் செயல்முறையின் அடிப்படையில் கீழிருந்து மேல்நோக்கிய தீர்மானத்துக்கு இணங்க அதாவது- பொதுமக்களின் தீர்மானத்துக்கு இணங்க வைத்தி யசாலைக்கான நிரந்தரக் கட்டடத்துக்கு என திட்டம் தயாரிக்கப்பட்டது. பல மில்லியன் ரூபா வெளிநாட்டு உதவி பெறப்பட்டு அடிக்கல்லும் நடப்பட்டது. கட்டடங்கள் திணைக்களத்தினால் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரின் பணிப்புக்கு அமைய இந்தப் பணிகள் நிறுத்தப்பட்டன. ஜூலை மாத நடுப்பகுதியில் அரச அதிபர் இந்த உத்தரவை விடுத்தார்.



கட்டடப்பணிகளை உடன் நிறுத்துமாறு அறிவுறுத்தி 19-07-2011 அன்று அரச அதிபரால் வடமாகாண கட்டடங்கள் திணைக்களப் பணிப் பாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில்:

"சண்டிலிப்பாய் பிரதேசத்தில் கால்நடை வைத்திய நிலையம் அமைப்பதற்கு இரு இடங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் தங்களால் தெரிவு செய்யப்பட்ட நவாலியில் இந்த நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல பெறுகை நடைமுறைகளும் நடைபெற்று முடிந்த பின்னர் கட்டடங்களைக் கட்டி ஒப்படைப்பது மட்டுமே கட்டடங்கள் திணைக்களத்தின்பணி என்பது அரச அதிபருக்குத் தெரியாததல்ல. அப்படி இருந்த போதும், வைத்தியசாலை அமைக்க இருஇடங்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கையில் நவாலியை கட்டடங்கள் திணைக்களமே தேர்தெடுத்தது போன்று அரச அதிபரின் கடிதம் இருக்கிறது.

பொது மக்களும் - பிரதேச செயலரும் இணைந்து வெளிப்படையாக எடுத் ததே நவாலியில் கால்நடை வைத்திய நிலையத்தை அமைப் பது என்ற முடிவு.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கால்நடை வைத்தியசாலைக்கு எனத் தெரிவுசெய்யப்பட்ட இரு இடங்களையும் ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய மேற்பார்வை செய்து, நேரில் சென்று பார்வையிட்டு கலந்தா லோசிக்கப்பட்ட பின்னரே அதனை எங்கு அமைப்பது என்ற இறுதி முடிவு எடுக்கப்படும் என அரச அதிபர் எழுத்து மூலம் முன்னர் தெரிவித்திருந்தார். ஆனால் அதற்கு நேர்மாறாகக் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நவாலியில் இருந்து வைத்தியசாலைக் கட்டடத்தை பண்டத்தரிப்புக்கு மாற்றுமாறு 25.07.2011 திகதியிட்டு, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

வட மாகாண விவசாய, கால்நடை, காணி அமைச்சு செயலாளரின் தீர்மானத்துக்கு இணங்கவே இந்தப் பெரும் உட்கட்டுமானத் திட்டத்தை வேறொரு இடத்துக்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஒரு இடத்தில் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதனை வேறு இடத்துக்கு மாற்றுவதில் எவ்வளவு கால விரயம்? பண விரயம்? இவற்றுக் கெல்லாம் சம்பந்தப்பட்ட, அதிகாரிகள் பொறுப்புக் கூறுவார்களா?

ஒவ்வொரு திட்டமும் தனி நபர் விருப்பு, வெறுப்புகளுக்கு அமைய நடப்பின், பின்னர் ஏன் அதில் மக்கள் பங்களிப்பை கோர வேண்டும்? மக்களை முட்டாள்கள் என்று இந்த அதிகாரிகள் நினைத்துக்கொண்டிருக்கிறார்களா?

சண்டிலிப்பாய் பிரதேசத்துக்கான கால்நடை வைத்தியசாலைக்கு நவாலி, கட்டுடையில் நிர்மாணப்பணிகளை ஆரம்பித்து விட்டு, ஏன் பண் டத்தரிப்புக்கு அது தீடீரென மாற்றப்படுகின்றது? அதற்கான காரணங்கள் ஏன் மக்கள் முன்வைக்கப்படவில்லை.

அரச அதிபர் மக்களுடன் சந்திப்ப தாக கூறிவிட்டு,அதனை நடத்தாதது ஏன்? விவசாய கால்நடை, காணி அமைச்சின் வடமாகாண செயலாளருக்கு, மக்கள் கூடி எடுத்த தீர்மானத்தை மாற்றியமைக்க என்ன அதிகாரம் உள்ளது? விடை இல்லாத இந்தக் கேள்விகளுக்கு விடை யளிக்கப் போவது யார்?

**மு.கணபதி**

28 கிராம அலுவலர் பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வலி. தென் மேற்குப் பிரதேசத்தின் மையப் பகுதியில் கால்நடை வைத்தியசாலை அமைவதே பொருத்தமானது என்று மக்கள் தீர்மானித்தனர். அதன் அடிப்படையிலேயே நீதிபதியிடம் இருந்து காணி இலவசமாகப் பெறப்பட்டது. இப்போது அவருக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள்?

உண்மையான அபிவிருத்தி இடம் பெற மக்கள் தீர்மானம் எடுக்கட்டும். அதுவே சிறந்த - ஜனநாயக வழி யாகும். இதுவே அறிவார்ந்த விடயமும் ஆகும். அதிகாரிகள் அதற்கு இடமளிப்பார்களா?

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

* **பின்வரும் கணிதச் செய்கைகளுக்குரிய தரவுகளைக் கொண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான தரவுகளை நிரப்புக.**

| | பொருட்கள் | (1kg) விலை | வாங்கவேண்டிய அளவு | கொடுத்த பணம் | மீதியாய்க் கிடைத்தபணம் |
|---|---|---|---|---|---|
| (49) | வாழைப்பழம் | ரூபா 80.00 | 2 kg | ரூபா 200.00 | ------------ |
| (50) | பப்பாசிப்பழம் | ரூபா 40.00 | 2 kg | ரூபா 100.00 | ------------ |
| (51) | கிரேப்ஸ் | ரூபா 450.00 | 2 kg | ------------ | ரூபா 100.00 |
| (52) | பேரீச்சம்பழம் | ரூபா 200.00 | 3 kg 500 g | ரூபா 1,000.00 | ------------ |
| (53) | ஒரேஞ்சு | ------------ | 2 kg | ரூபா 1,000.00 | ரூபா 500.00 |
| (54) | பிளம்ஸ் | ரூபா 750.00 | ------------ | ரூபா 2,000.00 | ரூபா 500.00 |

* **பின்வரும் கணித வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

(55) அகலத்தைப் போன்று 2 மடங்கு நீளங்கொண்ட A காணியொன்றின் சுற்றளவு 150mஎனின், அக் காணியின் நீளம் யாது?

..........................................................................................

(56) A என்ற நாற்றுமேடையில் 1,010 மிளகாய்க் கன்றுகளும், B என்ற நாற்று மேடையில் 990 மிளகாய்க் கன்றுகளும் பிடுங்கி எடுக்கப்பட்டன எனின், இரண்டு நாற்றுமேடைகளிலும் பிடுங்கி எடுக்கப்பட்ட மிளகாய்க் கன்றுகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................................................

(57) விழா ஒன்றுக்காக 1,040 சிறிய மின்குமிழ்கள் பொருத்தவேண்டிய நிலையில்
இதுவரை 697 மின் குமிழ்களே பொருத்தப்பட்டன எனின், இன்னமும் பொருத்தப்பட வேண்டிய மின்குமிழ்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

(58) கோழிப்பண்ணை ஒன்றில் ஒரு கூண்டுக்குள் 199 கோழிகள் காணப்பட்டன. அத்தகைய சம எண்ணிக்கை கொண்ட 7 கூண்டுகளில் உள்ள கோழிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................................................

(59) ஒரு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளுக்கு 10 மரக்கன்றுகள் வீதம் வழங்கப்படுவதற்கென 620 மரக்கன்றுகள் கொண்டுவரப்பட்டன எனின், அக்கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................................................

(60) பிரயாணி ஒருவர் 4 மணித்தியாலம் 30 நிமிடங்கள் பிரயாணம் செய்து பிற்பகல் 3.00 மணிக்குப் பிராயாணத்தினை முடித்துக்கொண்டார் எனின், அவர் பிரயாணத்தை ஆரம்பித்த நேரம் யாது?

..........................................................................................

* **பின்வரும் நிகழ்வினைத் தொடர்ந்து ஒவ்வொன்றும் ஐந்து சொற்களுக்குக் குறையாத ஆறு வாக்கியங்களை எழுத்துப் பிழைகள் இன்றி உறுப்பமைய எழுதுக.**

கௌரவ ஜனாதிபதி அவர்களது இரண்டாவது பதவியேற்பு வைபவத்தினை ஒரு செயற்பாடாக நாடு முழுவதும் மரக்கன்றுகள் நடுவதற்கான செயல் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. எமது பாடசாலையிலும் 15.11.2010 அன்று முற்பகல் 10.05 மணிக்கு........

(61) ..........................................................................................

..........................................................................................

(62) ..........................................................................................

..........................................................................................

(63) ..........................................................................................

..........................................................................................

(64) ..........................................................................................

..........................................................................................

(65) ..........................................................................................

..........................................................................................

(66) ..........................................................................................

..........................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28 ஆவது ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
11 . 04 . 1936

மறைவு
26 . 08 . 1983



## திருமதி தியாகராசா மாணிக்கம்

(சின்னாலடி, காரைநகர்)

திதி: திருதியை [16.08.2011]

இருபத்தெட்டு ஆண்டுகள் இன்றோடு
கடந்து போனதம்மா - ஆனால்
இன்றும் உங்கள் நினைவுகளோடு....
மனிதரில் மாணிக்கமாய்
மிளிர்ந்து எம் வாழ்வுக்கு
ஒளியூட்டிய உத்தமியே!
நீங்கள் அணைந்து போனதால்- இன்று
ஒளியின்றித் தவியாய்த் தவிக்கின்றோம்
வாழ்வின் பாதைக்கு வழிகாட்டிய
எங்கள் அன்னையே! இன்று
கனத்த நெஞ்சத்தோடு உங்களைத் தேடுகின்றோம்
மீண்டும் வருவீர்கள் என்ற நம்பிக்கையில்
மறு ஜென்மத்திலாவது உங்களைச் சீராட்டும்
தாயாக நாம் பிறக்க வேண்டும்.

குறிப்பு: அன்னாரின்
ஞாபகார்த்தமாக இன்று
(16.08.2011) செவ்வாய்க்கிழமை
நல்லூர் வடக்கு வீதியில்
அமைந்துள்ள துர்க்கா
மணி மண்டபத்தில் நடைபெறும்
மதிய போசனத்தில்
கலந்துகொள்ளுமாறு உற்றார்,
உறவினர், நண்பர்கள்
மற்றும் அன்பர்கள், முருகன்
அடியார்கள் அனைவரையும்
பணிவன்புடன்
அழைக்கின்றோம்.

ஈஸ்வரன்
ரேடர்ஸ்
59, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0212222813

திரு.திருமதி
தியாகராசா
துவாரகேஸ்வரன்
குடும்பத்தினர்.
229, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Eswaran Traders,
Eswaran Transport Service,
Eswaran Express
Passengers Service,
Eswaran Courier Service.
201 B, டாம் வீதி,
கொழும்பு- 11.
0112433889

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 63 நாயன்மார்கள் செய்த பணிகளை உலகுக்கு எடுத்தியம்பும் பணியில் ஈடுபடும் சந்நிதியான் ஆச்சிரமம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அன்பு மார்க்கத்தில் இறைவழிபாடு செய்து, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து எல்லோரும் வழிகாட்டியாக அற்புதங்களைப் புரிந்து சைவ சமயத்தின் தத்துவங்களை இலகுவாக சாதாரணமக்கள் உணரும்படி உலகுக்கு உணர்த்தியவர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்கள். சைவ சமய மக்கள் வைணவ, பௌத்த மதங்களுக்கு மாற்றப்பட்டு வந்த காலத்தில் அவர்களை பிறசமயம் மாறாது சைவசமயத்தின்பால் ஈர்க்கச் செய்தவர்கள் நாயன்மார்கள். இந்து சமயத்தில் உள்ள சரிகை, கிரிகை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்களையும் பின்பற்றி இறைவனை அடைய உதாரணமாகத் திகழ்ந்தவர்களும் இந்த 63 நாயன்மார்களே.

63 நாயன்மார்களின் இறைபணி ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமானது. அத்தகைய பணிகளை சேக்கிழார் பெருமான் பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணத்தில் விரிவாக, விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்.

அறுபத்து மூன்று நாயன்மார்கள் செய்த பணிகள், அற்புதங்கள் மூலமாக எழுந்த இறை பணி இவற்றையெல்லாம் புதிய தலைமுறைகள், சந்ததிகளுக்கு எடுத்துக் கூறுமுகமாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசைத்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

மறைந்த தவத்திரு வே. முருகேசு சுவாமிகள் முன்னின்று சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் மோகன் சுவாமியுடன் இணைந்து கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசையை ஆரம்பித்துவைத்தார்.

பிரதிவெள்ளிக்கிழமை தோறும் வாராந்த நிகழ்வு முடிவுற்றதும் அறுபத்து மூவர் குருபூசை நடைபெற்றுவருகிறது. பல அடியவர்கள் தத்தமது உறவுகளின் நினைவுநாள், பிறந்தநாள், திருமண நாள் போன்றவற்றை நினைவுகூரும் நேர்த்திக்காக மேற்படி பூசைக்கு அனுசரணை வழங்கி, பங்குகொள்ளப் போட்டி போட்டுக் கொண்டு முன்வருகின்றனர். இந்த நேர்த்திகள் தவிர்ந்த ஏனைய வெள்ளிக்கிழமைகளில் ஆச்சிரமம் சார்பாகவே அறுபத்துமூவர் குருபூசைகள் நடைபெறுகின்றன.

ஆச்சிரமத்தில் இடம்பெறும் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசையில் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் 63 நாயன்மார்களாக 63 பேரும் முருகப்பெருமானாக ஒருவரும் மொத்தம் 64 பேர் மண்டபத்தில் உட்கார வைக்கப்படுகின்றனர்.

இந்த 63 பேரில் ஆண்கள், பெண்கள் அடங்குவதோடு அவர்கள் ஆசார சீலராகவும் இருக்கவேண்டும். இவர்களுக்கு 64 தலை வாழை இலைகளில் அன்னத்துடன் வெற்றிலை, பழம், பாக்கு, தெட்சணை யாக 11 ரூபா ஆகியவையும் அன்னத்துடன் கூடிய வாழை இலையில் ஒரு பக்கத்தில் வைக்கப்படுகின்றன.

இவ்வாறு அன்னம் பரிமாறப்பட்டு தெட்சணை வைக்கப்படுவதற்கு முன்னரே மண்டபத்தில் சிவ புராணம் ஓதப்படுகிறது. அடியார்கள் 64 பேரும் சேர்ந்து சிவபுராணத்தை ஓதிப் பிரார்த்தனையில் ஈடுபடுகின்றார்கள். சிவ புராணம் ஓதிக்கொண்டிருக்கும் 64 அடியார்களுக்கும் பஞ்சதீபம் காட்டப்படுவது வழக்கம். தொடர்ந்து 64 வாழை இலைகளிலுள்ள சோறு, கறி உள்ளிட்ட அனைத்து உணவுகளையும் 64 அடியார்களுக்குத் தொட்டுப்பிசைந்து ஒரு பிடிசாதத்தை வழங்க ஒரு தட்டத்தில் சேகரிக்கப்பட்ட பிடிசாதம் தொடர்ந்து நடைபெறுகின்ற அன்னதானத்தில் சந்நிதி முருகன் மருந்தாக வழங்கப்படுகிறது.

இத்துடன் 63 நாயன்மார் குருபூசை நிறைவடையும். ஆனால் இந்தக் குருபூசையானது பார்ப்போர் அனைவரையும் பரவசப்படுத்தும்படியாக பக்திபூர்வமான ஒரு நிகழ்வாக அமைகின்றது.

தேனாய் இனிக்கின்ற திருப்புகழை பாரில் உள்ளோர் பாடிப் பரவத் தந்த அருணகிரிநாதர் குருபூசை தினமும் வருடந்தோறும் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்தக் குருபூசைத் தினத்தில் ஆச்சிரமமண்டபத்தில் விசேட பூசைகள் நடைபெறும். அறிஞர் பெருமக்கள் பலரது சொற்பொழிவுகளும் திருப்புகழ் பாடல்களும் இன்னிசையோடு இடம்பெற்று வருகின்றன.

இதேபோல் பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணத்தைத் தந்த சேக்கிழார் சுவாமிகளின் குருபூசையும் ஆச்சிரமத்தில் வருடந்தோறும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் மகாதவம் செய்து முத்திப் பேறு பெற்ற ரமணமகரிஷியின் குருபூசையும் வருடந்தோறும் டிசெம்பர் மாதத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

சைவசமயத்தின் நான்காவது குரவரான மணிவாசகர் அருளிச் செய்த திருவாசகத்தை சைவமக்கள் மனதில் அழியாத இடத்தைப் பெற வைப்பதற்காகவும் உள்ளத்தை உருக்கும் திருவாசகத்தின் பெருமையை காலத்துக்குக் காலம் மக்களிடையே எடுத்துச் சொல்வதற்காகவும் ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவாசக விழா நடத்தப்படுகின்றது.

இந்தத் திருவாசக விழாவின் போது திருவாசக ஏடுகள் நான்கு குரவர்களின் உருவச் சிலைகள் என்பன செல்வச் சந்நிதி ஆலய மூல மண்டபத்தில் வைக்கப்பட்டு விசேட அபிஷேகம், பூசைகள் இடம்பெற்ற பின்னர் அவை செல்வச் சந்நிதி கோயிலில் இருந்து மேள தாளங்கள் சகிதம் பக்தர்கள் புடைசூழ சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு ஆச்சிரமத்தில் மேடையில் வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து திருவாசகவிழா ஆரம்பமாகும்.

திருவாசகவிழாவின் போது தமிழ்நாட்டிலிருந்து வருகைதரும் அறிஞர் பெருமக்களின்

**மாலவன்**

சிறப்புரைகள் இடம்பெறுவதுடன் மாணவர்களின் பண்ணிசையும் நடைபெறுவது வழக்கமாகும். அத்துடன் திருவாசகத்தை ஒட்டிய போட்டிகளும் நடைபெற்றுவருகின்றன.

சைவசமயக் குரவர்கள், நாயன்மார்கள் போன்றோரின் குருபூசைகளுடன் நின்றுவிடாது இவர்களுக்குப் பின் தோன்றிய குருவானவர்களின் குருபூசைகளும் காலத்துக்குக் காலம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் சந்நிதியான் ஆச்சிரமத்தின் தோற்றத்துக்கு உருவகத்தைக் கொடுத்த அமரர் மயில்வாகனம் சுவாமிகள், சந்நிதியான் ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கு உற்றதுணையாக இருந்து 1990 ஆம் ஆண்டு முதல், ஆச்சிரம சுவாமிகளுடன் இணைந்து பணியாற்றிய தவத்திரு வே.முருகேசு சுவாமிகளின் குருபூசை என்பனவும் வருடந்தோறும் நடைபெற்று வருகின்றன.

இதுவரையும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் தோற்றம், அதன் வளர்ச்சி, அதனுடைய தமிழ்மொழிக்கும், சைவத்துக்குமான அரும் பணிகள், சமயக் கல்விமான்களின், கௌரவிப்பு இவற்றுக்கு மேலாக ஆச்சிரமத்தால் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகை, குருபூசைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தோம்.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் பன்முகப் பணிகளில் சமுதாயப் பணி, முன்பள்ளி சேவை, இலவச வைத்தியப் பணி, குடாநாடு தாண்டிய கல்விப் பணி மற்றும் ஏனைய நிகழ்வுகள் தொடர்பான பணிகள் குறித்து அடுத்துவரும் வாரங்களில் விரிவாக ஆராய்வோம்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கிறிஸ் பூதம்' நாடக அரங்கேற்றம் படையினர்தான் அதன் கதாநாயகர்கள்

## விக்கிரமபாகு கருணாரட்ன குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக.16

அரசு அனுசரணையுடனேயே 'கிறீஸ் பூதங்கள்' என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டு வருகின்றது. இதில் படையினரே கதாநாயகர்களாக இருக்கின்றனர். அரசு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் இதனை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளது.

- இவ்வாறு நவசமசமாஜ கட்சியின் செயலாளரும், புதிய இடதுசாரி முன்னணியின் தலைவருமான விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கிறீஸ் மனிதன் விவகாரம் மற்றும் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் என்பன தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் அமைதியை நிலைநாட்டுவதற்கு ஆயுதம் ஏந்திய படையினருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். இது நாட்டு மக்களை மீண்டும் இருண்ட யுகத்துக்கு இட்டுச் செல்லும்.

இந்த வர்த்தமானி அறிவித்தலை நியாயப்படுத்தி நாட்டை இராணுவமயப்படுத்தும் நோக்குடனேயே அரசு 'கிறீஸ் பூதங்கள்' நாடகத்தைத் திட்டமிட்டு அரங்கேற்றி வருகின்றது. அரசின் செயற்பாடுகளால் இது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவர்களுள் அதிகமானோர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றோர் எனத் தெரியவந்துள்ளது. இதன் மூலம் கிறீஸ் பூதங்கள் பின்னணியில் இராணுவத்தினரும் செயற்படுகின்றனர் என்பது தெட்டத்தெளிவாகப் புரிகின்றது.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு அரசு தீர்மானம் எடுத்துள்ளது. அதனைப் படிப்படியாக நடைமுறைப்படுத்துவோம் எனக் கூறுகின்றது. அப்படி நடந்தால், இராணுவத்தினருக்கு நாட்டில் வேலை இல்லாமல் போய்விடும். இதன் காரணமாக அரசு, மாவட்ட மட்டத்தில் இராணுவ நிர்வாகத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது. சிறந்த பாதுகாப்புக் கட்டமைப்பு உள்ளது என மார் தட்டும் அரசு, கிறீஸ் மனிதன் விடயத்தில் ஏன் மௌனம் காக்கின்றது என நான் கேட்கின்றேன் - என்றார். (ச)

# வங்கிக் கொள்ளையுடன் தொடர்புடைய 6 சந்தேகநபர்கள் கைது

மட்டக்களப்பு,ஒக.16

மட்டக்களப்பு , திமிலைதீவு மக்கள் வங்கிக் கொள்ளையுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் 6 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன், அவர்களிடமிருந்து 15 ரி - 56 ரக துப்பாக்கிகளை மீட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

மர்ம மனிதர்களின் நடமாட்டம் காரணமாக ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை தணிப்பதற்கான உயர்மட்டக் கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ச)

# பூந்தோட்டம் நலன்புரி முகாமுக்கு குடிதண்ணீர் விநியோகம் துண்டிப்பு

கொழும்பு, ஒக.16

வவுனியாவில் அமைந்துள்ள பூந்தோட்டம் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாமுக்கான குடிதண்ணீர் மற்றும் மின்சார விநியோகம் தடைசெய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முகாமில் வாழும் மக்கள் தமது சொந்த இடமான வன்னியில் மீள்குடியேறுவதற்கு மறுத்ததை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என நலன்புரி முகாமில் வசித்து வரும் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பூந்தோட்டம் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாமில் கடந்த 19 வருடங்களாக 183 குடும்பங்களைச் சேர்ந்த 1,163 பேர் தங்கியுள்ளனர். இவர்களை மீள்குடியேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.எனினும், வன்னியில் எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படாத இடத்தில் தம்மை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே தாம் அங்கு செல்லப்போவதில்லை என்றும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர். போரில் கணவர்மாரை இழந்த தம்மால் தனியே சென்று வன்னியில் வீடுகளை அமைக்க முடியுமா என்று பெண்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.



இலங்கைக்கான பலஸ்தீன் தூதர் கலாநிதி அன்வர் அல் அஹாவுக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கு இடையிலான அரசியல், வர்த்தகம், சுற்றுலா, கலாசாரம் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. (ச)




முடிவில்லாத துயரலையில்
3 ஆம் ஆண்டு

வீரசிங்கம் செந்துஷன்
(மாசார், பளை)

தாய் மடியில் 11 ★ 12 ★ 1987
தாய் மண்ணில் 16 ★ 08 ★ 2008

இளமைப் பருவத்தே இங்கிதமாய் நிதமும்
துள்ளித் துஷாக்குட்டி நீ நடந்த பாதை
பள்ளிப் பருவத்தே பகிர்ந்த பல கதைகள்
அமுதமாய் அள்ளி அணைத்த கைகள்
சுட்டித் தனமாய் கெட்டித்தனங்கள் பலதும்
மூவேழு வயதினிலே கடைக்குட்டியே வித்தைகளைக்
காட்டியதால் காலங்கள் கொடுமையடா
கடவுள் கூட இரங்கவில்லையடா.... என் செல்வமே!
உனை இழந்து தவிக்கின்றோமடா என் துஷாக்குட்டியே
மீண்டும் எம்மிடம் ஓடிவந்திடய்யா
நீ எமை விட்டுப் பிரிந்தாலும்
உன் நினைவு எம்மை விட்டுப் பிரியாது.

அப்பா, அம்மா,
அண்ணன்மார், அண்ணி,
பெறாமகன் (துஷன்)

மாசார்,
பளை. (1991) (45-27)



வாடகைக்கு

கிளிநொச்சி A9 வீதியில் கொமர்ஷல் வங்கி அருகில் 3600 சதுர அடி வெற்று நிலப்பரப்பு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0758057591 (C7857)


# விடுதியில் தங்கி ஆபாசப் படம் பார்த்த பாடசாலை மாணவன், மாணவி கைது

கொழும்பு, ஒக.16

மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெவலே பகுதி விடுதியொன்றில் தங்கியிருந்து ஆபாசப் படம் பார்த்துக்கொண்டிருந்த மாணவ ஜோடி ஒன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் விடுதியின் உரிமையாளரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் கங்கொடவில நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நுகேகொட பாடசாலை ஒன்றைச் சேர்ந்த 17 வயது மாணவியும், உயர்தரப் பரீட்சை எழுதும் கொழும்பின் பிரபல பாடசாலை ஒன்றின் மாணவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் நுகேகொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)


கண்ணீர் அஞ்சலி



கட்டமைப்புப் பகுதியில் முன்பு எம்மோடு கடமையாற்றிய
நவரட்ணம் புண்ணியமூர்த்தி
(மின் பாதையாளர் - தரம்-I)

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


கட்டமைப்புப் பகுதி,
இலங்கை மின்சார சபை,
யாழ்ப்பாணம். (6934)

மின் பொறியியலாளர்,
உதவி மின் பொறியியலாளர்,
மின் அத்தியட்சகர், சக ஊழியர்கள்.



ஓராண்டு நினைவு

தோற்றம்: 30.11.1936
மறைவு: 16.08.2010



அமரர் இராசையா கனகலிங்கம்
(வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை)

ஆண்டொன்று கடந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
எம் எல்லோருடைய இதயங்களிலும்
உங்கள் நினைவுகள் எம் உயிர் உள்ளவரை நீங்காது
எம் அன்பான அப்பாவின்
ஆத்மா சாந்திபெற வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை. (6924) (39)



ஈரவிழிகளுடன்...
இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
மாணிக்கம் இல்ட்சியன்

அன்னை மடியில் : 01.01.1959
ஆண்டவர் மடியில் : 09.08.2009

திதி : பூர்வபக்க திருதியை 16.08.2011

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறாது எங்கள் சோகம்.
அன்பின் ஊற்றாக பாசத்தின் இலக்கணமாக
வாழ்ந்தனீங்கள் எம்மை பரிதவிக்க
விட்டு பறந்து சென்றீர்கள்.
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்.
எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

“சிவபதி”
இளவாலை வடக்கு,
இளவாலை.

அன்பு மகன்,
பாசமிகு மனைவி,
சகோதரன்கள்.


# தங்கச் சங்கிலியைப் பறிக்க முயன்ற மனிதனால் பதற்றம்

மட்டக்களப்பு, பெரியகல்லாறு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு பெண்ணொருவரின் தங்க நகையைப் பறித்துச் செல்ல முயன்ற மனிதனால் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. இந்த நபர் பெண்ணொருவரின் தங்க சங்கிலியைப் பறிக்க முயன்றபோது இந்தப் பெண் கூச்சலிட்டுள்ளார். இவரது சத்தத்தைக் கேட்டு பிரதேச மக்கள் திரண்டுவிட சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு தப்பிச் சென்றவர் மர்ம மனிதானாக இருக்கலாமென்று பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் குழப்பத்தை விளைவிக்க சிலர் முயற்சி

## சுதந்திரக் கொடியை ஏற்றிவைத்து பிரதமர் உரை

டில்லி, ஒக. 16

இந்தியாவில் குழப்பத்தை ஏற்படுத்தவும், அமைதியைக் குலைக்கவும் சிலர் முயற்சி செய்கின்றனர் என்று பிரதமர் மன்மோகன் சிங் குற்றம் சாட்டினார்.

இந்தியாவின் 65 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு டில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியேற்றி வைத்து மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தமது 7 ஆண்டு கால ஆட்சியில் அதிகமான வளர்ச்சிப் பணிகள் நடந்திருக்கின்றன. இன்னும் அதிகம் செய்ய வேண்டியிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்:

இந்தியாவில் வறுமையை ஒழிக்க அரும்பாடுபட்டு வருகிறோம். ஊழல், நாட்டின் வளர்சிப்பாதைக்குத் தடையாக உள்ளது. ஊழ லுக்கு எதிரானவர்கள் மீது இந்த அரசு சட்டபூர்வ நடவடிக்கையைத் துரிதமாக எடுத்து வருகிறது.

பலமான லோக்பால் மசோதாவை உருவாக்க அரசு முனைந்து செயற்பட்டு வருகிறது. ஊழலை ஒழிக்க இந்த மசோதா பயன் தரும். உண்ணா விரதமோ, போராட்டமோ வலுவான லோக்பால் மசோதாவை உருவாக்க முடியாது. நாடாளுமன்றில்தான் இறுதி முடிவு எடுக்க வேண்டும். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முக்கியத் துவம் அளித்து வருகிறோம். நிலம் கையகப்படுத்துதல் விவசாயிகளைப் பாதிக்காதவாறு பார்த்துக்கொள்ளப்படும். இதற்கென விரைவில் புதிய சட்டம் நடப்பு நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் இயற்றப்படும். வறுமையை ஒழிக்க அனைவரும் ஒன்று சேரப் போராட வேண்டும். கல்வி வளர்ச்சிக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

- இவ்வாறு பிரதமர் பேசினார். (வ)

# எங்கள் பாரதத்தைக் காப்போம் சுதந்திரதின வாழ்த்தில் முதல்வர்

சென்னை, ஒக. 16

விடுதலைக்காகப் போராடி வரலாற்றில் இடம்பிடித்த வீரர், வீராங்கனைகளின் வழிநின்று பாரதத்தைக் காப்போம் என முதல்வர் ஜெயலலிதா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

சுதந்திரதினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாருக்குள்ளே நல்ல நாடாம் நம் பாரத நாடு, பழம் பெருமை, இயற்கை வளங்கள், புண்ணிய தலங்கள், சிறந்த பண்பாடு, உயர்ந்த கலாசாரம் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டிருப்பதோடு, உலக நாடுகள் வியக்கக் கூடிய வகையில் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு ஒருமைப்பாட்டுணர்வை வளர்த்து வருகிறது.

இந்த இனிய பூமியில் வியாபாரம் செய்வதற்காக வந்த ஆங்கிலேயர்கள் எம்மை அடிமையாக்கி ஆட்டிப்படைத்தனர். அடிமைத்தளையிலிருந்து விடு தலை பெற்று, சுதந்திரக் காற்றை நாம் சுவாசிப்பதற்காகக் குரல் கொடுத்து, உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்த வீர மறவர்களை நினைத்துப் போற்றி வணங்குதற்குரிய நன்னாள் இந்தநாள் ஆகும். இந்நாளில் எனதருமை தமிழக மக்கள் அனைவருக்கும் சுதந்திர தினத் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)


# கோத்தாவின் கொடும்பாவி எரித்து கம்யூ. ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை விமர்சித்துப் பேசிய இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உருவப்பொம்மையை எரித்து மன்னார்குடியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தக்கட்சியின் இளைஞர் பிரிவின் சார்பில் மன்னார்குடியின் பஸ் நிலையம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அப்போது, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை விமர்சித்துப் பேசிய கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பின்னர் கோத்தபாயவின் உருவபொம்மையை எரித்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை விமர்சித்த இலங்கை அரசை மத்திய அரசு கண்டிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (வ)



இந்தியாவின் 65 ஆவது சுதந்திர தினமான நேற்று டில்லி செங்கோட்டையில் பிரதமர் மன்மோகன் சிங் தேசியக் கொடியேற்றி உரையாற்றுகிறார். சென்னைக் கோட்டையில் முதல்வர் ஜெயலலிதா தேசியக் கொடியேற்றி வைத்து உரையாற்றுகிறார்.

# பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் மரண தண்டனையை விலக்கக் கோரி போராட்டம்

## அழைப்பு விடுகிறார் வைகோ

சென்னை, ஒக.16

ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகள் மூவரையும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை விலக்கக்கோரி மரண எதிர்ப்பு - தொடர் முழக்கப் போராட்டம் வைகோ தலைமையில் எதிர்வரும் 18 ஆம் திகதி பாரி முனையில் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து ம.தி.மு.க. செயலர் வைகோ வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மூன்று இளம் தமிழர்களின் உயிரைக்காக்க, குற்றமற்ற நிரபராதிகளை, தூக்குக் கயிற்றில் இருந்து விடுவிக்க இந்த மரண எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

அந்தவகையில் பதறித் துடிக்கும் ஆயிரமாயிரம் இளந்தலை முறையினரும், மனித உரிமைக்குப் போராடும் தன்னலம் அற்ற சகோதரர்களும், சகோதரிகளும், எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 6 மணிக்கு, தலைநகர் சென்னையில் இருந்து இருசக்கர வாகனங்களில் புறப்பட்டு, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் வழியாக, வேலுடர் வரையிலும் பயணத்தை நடத்துகின்றனர்.

மரண தண்டனைக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் சார்பில் மேற்படி ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோர், இருபது ஆண்டுகள் சிறையில் வாடி வதங்கி வாழ்வின் அற்புதமான வாலிபப் பருவத்தை, கண்ணீரோடே கடந்து விட்டனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு பேர்களுள் நளினி, தண்டனையில் இருந்து விடுவிக்கப்பட்டு விட்டார்.

அதே மனிதாபிமான அளவுகோல்தானே இந்த மூவருக்கும் பொருந்தும்?

தமிழ்நாட்டின் கடந்த 17ஆண்டுகளாக,எந்தச் சிறையிலும்,எவரும் தூக்கில் இடப்படவில்லை. எனவே, இம் மூன்று நிரபராதி தமிழர்களின் உயிரை அழிக்காதீர்கள்; அவர்களைத் தூக்கில் போடாதீர்கள்.

மத்திய அரசு நினைத்தால், எந்தநேரத்திலும் இந்த மரண தண்டனையை ரத்துச் செய்ய முடியும். எனவே, மூவர் உயிரைக் காக்கவும், நெஞ்சைப் பிளக்கும் வேதனையைத் துடைக்கவும், தக்க நடவடிக்கை எடுத்திட, தமிழக அரசை வேண்டுகிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் வைகோ கேட்டுக் கொண்டுள்ளார்.

# ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி ஒக. 19 விடுதலைச் சிறுத்தைகள் கண்டன ஆர்ப்பாட்டம்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை விலக்கிக் கொள்ளவும், 20 ஆண்டுகாலச் சிறை வாழ்வை தண்டனைக் காலமாகக் கருதி அவர்களை விடுவிக்க வேண்டும் எனவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எதிர்வரும் 19 ஆம் திகதி சென்னையில் முற்பகல் 10 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது.

ஆர்ப்பாட்டம் தொடர்பாக அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மரண தண்டனை விதிக்கப்படும் என்கிற முடிவானது ஒரு குற்றத்துக்கு இரண்டு தண்டனை என்கிற நிலையாக உள்ளது. இதுவே சட்டவிரோதமாகும். உலகளவில் மரண தண்டனையே விதிக்கக்கூடாது என்கிற கருத்து வலுப்பெற்று வருகிறது.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் மரண தண்டனை முறை லும் ஒழிக்கப்பட்டு விட்டது. ஆனால் உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடாக அறியப்படும் இந்தியாவில் மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவதில் தீவிரம் காட்டுவது வியப்பாக உள்ளது.

மேலும் கருணை மனு விண்ணப்பிக்காமல் மரண தண்டனை விதிக்கப்பட்டு சுமார் 286 பேர் காத்திருப்பதாகவும் தெரிகிறது. ஒட்டுமொத்தத்தில் இந்தியா முழுவதும் சுமார் 330 பேர் மரண தண்டனைக்கு ஆளாகும் நிலை உள்ளது. ஒரு ஜனநாயக நாடு இவ்வளவு பேரையும் தூக்கிலிட்டுக் கொல்லப் போகிறதா என்கிற கேள்வி எழுகிறது.

கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்கிற காட்டுமிராண்டித்தனமான தண்டனைக் கொள்கையிலிருந்து விலகிகுற்றவாளிகளைத் திருத்துவது என்கிற தண்டனைக் கொள்கையை ஏற்றுச் செயற்படுவதற்கு உலகில் எண்ணற்ற நாடுகள் முன்வந்துள்ளன.

இன்னும் இந்தியா தன்னுடைய போக்கை மாற்றிக் கொள்ளாதது பழமை வாதங்களின் பிடியிலிருந்து இந்தியா இன்னும் மீளவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. இந்திய அரசு தமது தண்டனைக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

மேற்கண்டகோரிக்கையை வலியுறுத்தி எதிர்வரும் 19 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடத்திட்டத்துக்கு அமைவாகவே வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டன

## பரீட்சை ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 16

இந்த முறை புதிய பாடத்திட்டத்துக் கமைய கணக்கீட்டு வினாத்தாள்களில் பல்வேறு குறைப்பாடுகள் நிலவியதாக வும், விடையளிக்க சிரமமாக இருந்ததா கவும் மாணவர்கள் குற்றஞ்சாட்டியுள்ள னர்.

தாம் பயிற்சிகளில் ஈடுபட்ட மாதிரி வினாத்தாள்களில் அடங்கும் முறை களுக்கு மாறாகக் குறித்த வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டிருந்ததாக நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாணவர்களின் இந்தக் குற்றச் சாட்டுகள் உண்மையானவை எனப் பல்கலைக்கழக கணக்கீட்டு விரிவுரை யாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களின் இந்தக் குற்றச் சாட்டுகள் தொடர்பில் பரீட்சை ஆணை யாளரிடம் வினவியபோது, பாடத்திட் டத்துக்கு அமைவாகவே வினாத்தாள் கள் தயாரிக்கப்பட்டதாக தெரிவித்துள் ளார்.

பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களின் தவறான வழிநடத்தல்களே மாணவர் களின் அசௌகரியத்துக்கு காரணமென சுட்டிக்காட்டிய அவர் இந்தநிலையில் தவறுகள் ஏதேனும் காணப்படும் போது அது தொடர்பில் கவனம் செலுத்தப் படுமெனவும் தெரிவித்துள்ளார். (ற)

# அம்புலன்ஸ் சாரதிகள் இரவு நேர வேலைகளில் இருந்து விலக முடிவு

## சுகாதார சாரதிகள் சங்கத் தலைவர் தகவல்

கொழும்பு, ஓக 16

இரவு நேர வேலைகளில் இருந்து விலகுவதற்கு நொச்சியாகம வைத்திய சாலையின் அம்புலன்ஸ் சாரதிகள் தீர் மானித்துள்ளனர்.

இனந்தெரியாத சிலரினால் சாரதிகள் விடுதியின் மீது தாக்குதல் நடத்தப் பட்டமையே இந்தத் தீர்மானத்துக்கான காரணம் என வட மத்திய மாகாண சுகாதாரச் சாரதிகள் சங்கத்தின் தலைவர் வசந்தகுமார தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளி, சனிக்கிழமை களில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட தாக அவர் கூறினார்.

இந்த நிலைமையில் வைத்திய சாலை நடவடிக்கைகளை முன்னெடுத் துச் செல்வதற்குப் பொலிஸ் பாதுகாப்பு கோரப்பட்டுள்ளதாகவும் நொச்சியாகம வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரி டாக்டர் சுநீவ பண்டார வீரகோன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நொச்சியாகம பொலி ஸாரிடம் வினவிய போது தற்போது குறித்த வைத்தியசாலைக்குப் பூரண பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

## சமய சந்நிதிகளில்

வலி.வடக்கு, ஒக 16

ஏழாலை துர்க்கையம்மன் ஆலயத் தில் செவ்வாய்க்கிழமை நண்பகல் ஆடிச்செவ்வாயையொட்டிய விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும். (ற-86)

★ ★ ★

வலி.வடக்கு, ஒக்.16

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை கடைசி ஆடிச் செவ்வாயையொட்டி விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து துர்க்கை யம்மன் வீதியுலா வருவார்.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக.16

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திரு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் பன்னிரெண்டு தினங்கள் நடைபெற வுள்ளது.

அடுத்தமாதம் 8 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திரு விழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் (ற-7-86)

★ ★ ★

தெல்லிப்பழை பன்னாலை வரத லிங்கக் கற்பகவிநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற வுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா வும் இடம்பெறும்.

(ற-313)



கொழும்பில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு 3 கட்டுரை வரைதல் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ள அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி தே.யாழினியுடன் பொறுப்பாசிரியர் சகுந்தலாதேவி, அதிபர் கேதீஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். (ற-23)






## சோமாலியர்களால் கடத்தப்பட்ட கப்பல் கொழும்பு வருகை!

சோமாலியா கடற்கொள்ளைக் காரர்களால் கடத் தப்பட்ட எம். வி. சினின் கப்பல் அடுத்த வாரம் கொழும்பை வந் தடைய உள்ளது.

கடந்த பெப்ர வரி மாதம் கடத் தப்பட்ட எம். வி. சினின் கப்பல் பல மாதங்களாக முன் னெடுக்கப்பட்ட பேச்சுக்களை அடுத்து சோமாலி யர்களால் கடந்த சனிக்கிழமை விடுவிக்கப்பட் டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் மனி தாபிமான உதவிப் பொருள்களை ஏற் றிச் சென்றபோது மால்ரா கொடி தாங் கிய இந்தக் கப்பல் கடத்தப்பட்டமை குறிப் பிடத்தக்கது. இந்தக் கப்பலில் சிப்பந்திகளாகக் கடமையாற்றிய 9 இந்தியர்கள் உட் பட 21 ஊழியர் களைக் கடற்கொள் ளைக்காரர்கள் பணயக் கைதி களாகப் பிடித்து வைத்திருந்து விடுவிக்கப்பட் டமை குறிப்பிடத் தக்கது. (ற)


**UNIVERSITY OF JAFFNA**
**BID NOTICE**

**Item No.3 be read as follows in the above Advertisement appeared in page 12of Uthayan Dated 14.08.2011.**

| No. | Works Details | Minimum ICTAD Grade |
| --- | --- | --- |
| 3 | Urgent improvements to Board Room, University of Jaffna | C 9 (Buildings) |


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் : 24.10.1955

மறைவு : 28.07.2010

### அமரர் நடராசா குமாரதேவன்

(பொது முகாமையாளர், தென்மராட்சி மேற்கு, ப.நோ.கூ சங்கம், கைதடி.)

திதி : ஆடிமாத அபர பட்ச திருதியை (16.08.2011)

ஆனதுவோ ஓராண்டு...
ஆறவில்லை எம் துயரம் அகிலமதில் உங்கள் பிரிவால் ..
உங்கள் ஆத்மா அமைதியும் சாந்தியும் பெற
ஆராதித்து நிற்கின்றோம்
உங்கள் பொற்பாதங்களைப் பணிகின்றோம்.
துதிக்கின்றோம். ஆராதிக்கின்றோம்.
உங்களை நினைந்துருகி இதய தீபமேற்றும் ..

A.P.C வீதி,
கைதடி தெற்கு, கைதடி.

மனைவி, மகள்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண ஆளுநரை இலக்கு வைத்து ஆப்கனில் தலிபான்கள் தாக்குதல்

## 22 பேர் பலி, 40 பேர் படுகாயம்

காபூல், ஒக.16

ஆப்கானிஸ்தான் பர்வான் மாகாண ஆளுநர் வீட்டின் மீது தலிபான் தற்கொலை படைத் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 22 பேர் பலியாகினர். 40 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க, இங்கிலாந்து கூட்டுப் படைகள் தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றன. அவர்களுக்கு ஆப்கன் வீரர்களும் உதவியாக உள்ளனர்.

இவர்கள் மீது தலிபான் தீவிரவாதிகள் சமீப காலமாகத் தாக்குதலைத் தீவிரப்படுத்தி உள்ளனர். இத்தகையதொரு தாக்குதலிலேயே ஆப்கன் அதிபர் கர்சாயின் சகோதரர் சுட்டுக்கொல்லப்பட்டார். இதனை விட கடந்த 10 நாள் களுக்கு முன்னர் அமெரிக்க ஹெலி கொப்டரை தலிபான் கள் சுட்டு வீழ்த்தியதில் 38 பேர் பலியாகினர்.

இந்த நிலையில் ஆப்கன் பர்வான் மாகாண ஆளுநர் அப்துல் ப்ஷீர் சலாங்கி வீட்டின் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடந்தப்பட்டது.

ஆளுநர் சலாங்கியின் வீடு காபூலில் இருந்து 50 கி.மீ தொலைவில் உள்ள சரிகார் பகுதியில் உள்ளது. இங்கு அலுவலகம், ஏனைய துறை நிர்வாகிகளின் வீடுகளும் அமைந்துள்ளன. பாதுகாப்பு நிறைந்த இந்த வளாகத்துக்குள் காரில் வெடிகுண்டுகளை நிரப்பி வந்த தலிபான் தற்கொலைப் படையைச் சேர்ந்த தீவிரவாதிகள் 6 பேர் திடீரெனப் புகுந்து வெடிக்கச் செய்தனர். இதில் பாதுகாவலர்கள் உட் பட 22 பேர் பரிதாபமாகப் பலியாகினர். 40 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதுகுறித்து சலாங்கி நிருபர்களிடம் கூறுகையில்:

''தாக்குதல் நடந்தபோது நான் வீட்டுக்குள்தான் இருந்தேன். வீட்டில் இருந்து 15 மீற்றர் தூரத்தில் தாக்குதல் நடந்தது'' என்றார். உடனடியாக உயரதிகாரிகளை கூட்டிப் பாதுகாப்பு குறித்து சலாங்கி தீவிர ஆலோசனை நடத்தினார்.

# மக்களைப் பிரித்த பெர்லின் சுவரின் 50ஆவது ஆண்டு நினைவு நிகழ்ச்சி

பெர்லின், ஒக.16

கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனியின் மக்களைப் பிரித்த பெர்லின் சுவர் கட்டப்பட்ட 50ஆம் ஆண்டு நாள் நினைவு நிகழ்ச்சி தலைநகர் பெர்லினில் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பிரிவினை ஏற்பட்ட போது மரணம் அடைந்தவர்களுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கிழக்கு ஜேர்மனியில் வளர்ந்த அதிபர் ஏங்கலா மார்கெல் மற்றும் ஜனாதிபதி கிறிஸ் டியன் வுல்ப் மற்றும் பெர்லின் மேயர் கிளாஸ் வோவெரய்ட் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

இதன் போது தேவாலயத்தில் இறந்தவர்களுக்காக பிரார்த்தனை நடந்தது. இந்த நினைவு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அதிபர் ஏங்கலா மார்கெல் கூறுகையில், ''எனக்கு 7 வயது இருக்கும்போது எனது குடும்பத்தினரையும் பெர்லின் சுவர் பிரித்த கொடூரம் நிகழ்ந்தது'' என வேதனையுடன் நினைவு கூர்ந்தார்.

கடந்த 1961 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 13ஆம் திகதி கிழக்கு ஜேர்மனி நிர்வாகம் எல்லைகளை மூடத் தொடங்கியது. வீதிகள்துண்டிக்கப்பட்டன. மேற்கு ஜேர்மனியை இணைக்கும் ரயில் போக்குவரத்தும் துண்டிக்கப் பட்டது. 160 கிலோ மீற்றர் தூரத்துக்கு அந்த தடுப்பு சுவர் பெர்லினில் எழுப்பப்பட்டது.

அந்த சுவர் ரத்தம் இல்லாத புரட்சியின் மூலம் 1989 ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி இடிக்கப்பட்டு மக்கள் இரு ஜேர்மனிக்கும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

# ஆபத்தான கட்டங்களை எதிர்நோக்கும் அபாய நிலையில் உலக பொருளாதாரம்

## உலக வங்கித் தலைவர் எச்சரிக்கை


உலக பொருளாதாரத்தில் காணப்படும் ஸ்திரத்தன்மையற்ற போக்கால் பல ஆபத்தான கட்டங்களை எதிர்நோக்கும் அபாயம் உள்ளது என்று உலக வங்கித் தலைவர் ரொபர்ட் ஸோயலிக் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதார நிலைமை குறித்து ஸ்டான்டர்ட் அன்ட் புவர் நிறுவனம் குறைத்து அறிவித்தது. இதன் எதிரொலியால் சர்வதேச பங்கு சந்தைகளில் நிலையற்ற தன்மை ஏற்பட்டது.

அதுமட்டுமன்றி ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பொருளாதார நிலையிலும் சரிவு ஏற்படும் அபாயம் இருக்கிறது. இதனையடுத்து பொருளாதார சரிவை உலக நாடுகள் எதிர்நோக்கியுள்ளன. இந்த நிலையில் உலக வங்கியின் தலைவர் ரொபர்ட் ஸோயலிக் அவுஸ்திரேலியாவின் பிரபல பத்திரிகை ஒன்றுக்கு சிறப்புப் பேட்டி அளித்தார்.

அதன்போது அவர் கூறியதாவது: தற்போது நாம் புதிய பொருளாதார சரிவின் ஆரம்ப கட்டத்தில் இருக்கிறோம். ஆனால் இது கடந்த 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார சரிவு போன்று இருக்காது.

கடந்த சில வாரங்களாக ஆஸ்திரேலியா உள்ளிட்ட வளரும் நாடுகளின் பொருளாதாரம் ஓரளவுக்கு வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பியுள்ளது. ஆனால் வளர்ந்த நாடுகளின் பொருளாதாரம் தொடர்ந்து ஆபத்தான கட்டத்தை எதிர்நோக்கியுள்ளது. வளர்ந்த நாடுகள் பொருளாதாரக் கொள்கைகளைச் சீர்படுத்தினால் மீண்டும் வளர்ச்சிப் பாதைக்குத் திரும்ப முடியும் என்றார்.



பாகிஸ்தானின் 64ஆவது சுதந்திர தினம் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடந்த விழாவில் அந்நாட்டுப் பிரதமர் யூசுப்ரஸா கிலானி பார்வையாளர்களுக்கு கையசைத்து மகிழ்கிறார்.

# அமெரிக்காவில் சூறாவளி: மேடை சரிந்து 4 பேர் பலி

சிகாகோ, ஒக.16

அமெரிக்காவின் இண்டியானா பொலிஸ் நகரில், கடும் சூறாவளி காரணமாக, கண்காட்சி அரங்கில் போடப்பட்டிருந்த மேடை சரிந்ததில், நான்கு பேர் பலியாகினர். இண்டியானா பொலிஸ் நகரில், கண்காட்சி நடைபெறுகிறது. அங்கு பிரமாண்ட மேடை அமைக்கப் பட்டு, சுகர்லேண்ட் என்ற இசைக் குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பிரபல பாடகர் சாரா பெர்லிஸ், இசை நிகழ்ச்சியில் பங்கேற்றதால், ஆயிரக்கணக்கான மக்கள் கண்காட்சிக்கு வந்திருந்தனர்.

இசை நிகழ்ச்சி முடிந்த சில நிமிடங்களில், 60 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளிக் காற்று வீசியது. இதனால் பிரமாண்ட மேடை முற்றிலும் சரிந்து விழுந்தது. இசை நிகழ்ச்சி பார்க்க வந்த கூட்டத்தினர் கலைந்து செல்லும் முன்னரே, இந்த விபத்து நடந்ததால், நான்கு பேர் பலியாகினர். 40 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில், பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

# பாக். சுதந்திர தினத்தில் குண்டுவெடிப்பு; 19 பேர் பலி

இஸ்லாமாபாத், ஒக.16

பாகிஸ்தானின் சுதந்திர தினமான நேற்றுமுன்தினம் பலுசிஸ்தான் பகுதியில் உள்ள ஹோட்டலில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் 19 பேர் உடல் சிதறிப் பலி யாகினர்.

ஹோட்டல் மட்டுமல்லாது, அருகே இருந்த கட்டடங்களும் தரைமட்டமாகின. கட்டட இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி நடைபெறுகிறது.

# அரசியல் நெருக்கடி வலுக்கிறது; நேபாளப் பிரதமர் ராஜினாமா

காத்மாண்டு, ஒக. 16

நேபாள பிரதமர் ஜலால் நாத்கனால் அரசியல் நெருக்கடிகள் காரணமாகத் தனது பதவியை ஞாயிற்றுக்கிழமை ராஜினாமா செய்தார். இதனால் அந்தநாட்டில் அரசியல் நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் முக்கிய கூட்டணியான நேபாள மாவோயிஸ்ட் கட்சி, முக்கிய எதிர்க் கட்சியான நேபாள காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் நெருக்கடி காரணமாகவே கனால் ராஜினாமா செய்துள்ளதாக மேலும் தெரிவித்தார்.

அதிபர் ராம் பரன்யாதவிடம் அவர் ராஜினாமா கடிதத்தை அளித்துள்ளார். எனினும் அடுத்த பிரதமரை தேர்வு செய்யும் வரை பொறுப்பில் தொடருமாறு அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். அடுத்த பிரதமரைத் தேர்வு செய்வதற்கான ஏற்பாடுகள் திங்கட்கிழமை தொடங்கி உள்ளன.

நேபாள கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டத்தில் பிரதமர் கனால் பங்கேற்றிருந்த போது தனது தனிப்பட்ட விடயம் காரணமாகப் பதவியில் தொடர முடியவில்லை என்று தெரிவித்திருந்தார். 6 மாதங்களுக்கு முன்பு தான் அவர் பிரதமராகப் பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



இந்தமாத இறுதியில் நேபாள நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவுக்கு வருகிறது. இந்த நிலையில் பிரதமர் பதவி விலகியிருப்பது அந்நாட்டில் அரசியல் நெருக்கடியை அதிகரித்துள்ளதுடன்அரசியல் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

# குடியரசுக் கட்சி வேட்பாளருக்கான வாக்கெடுப்பு: மிஷேல் பாக்மன் முன்னிலை

வாஷிங்டன், ஒக.16

2012 ஆம் ஆண்டு நடைபெற உள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட வேட்பாளராகும் வாய்ப்புக்கான வாக்கெடுப்பில் மிஷேல் பாக்மன் முன்னிலை வகிக்கிறார்.

அமெரிக்க அதிபருக்கான தேர்தல் அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற உள்ளது. இப்போதைய அதிபர் பராக் ஒபாமா ஜனநாயகக் கட்சியை சேர்ந்தவர். அவரது 4 ஆண்டு பதவிக் காலம் அடுத்த ஆண்டுடன் நிறைவடைகிறது.

நிதி நெருக்கடி, கடன் சுமை, உள்நாட்டுப் பிரச்சினைகள் காரணமாக அவருக்கு பின்னடைவு ஏற்பட்டாலும், ஒபாமா மீண்டும் அதிபாவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அந்நாட்டு சட்டப்படி, ஒருவர் 2 முறை மட்டுமே அதிபராக இருக்க முடியும்.

இந்நிலையில், அதிபர் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி தொடங்கியுள்ளது. குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரைத் தேர்வு செய்வதற்கான வாக்குப் பதிவு அயோவா மாகாணத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் 17,000 பேர் கலந்து கொண்டு வாக்களித்தனர்.

ஆரம்ப கட்ட வாக்குப் பதிவில், குடியரசுக் கட்சியினர் அளித்த வாக்குகளின்படி, மின்னசோட்டாவின் நாடாளுமன்ற பெண் உறுப்பினர் மிஷேல் பாக்மன் முன்னிலையில் உள்ளார். அவருக்கு 4,823 வாக்குகள் கிடைத்தன. டெக்சாஸ் மாகாணத்தைச் சேர்ந்த ரான் பால் 4,671 வாக்குகளுடன் 2 ஆவது இடத்திலும், டிம்பாலென்டி 3 ஆம் இடத்திலும் உள்ளனர்.

குடியரசுக் கட்சி சார்பில் அதிபர் வேட்பாளராகப் போட்டியிட 10 பேர் விருப்பம் தெரிவித்துள்ளனர். மாகாண வாரியாகக் கிடைக்கும் வாக்குகளின் அடிப்படையில், அதிக வாக்குகளைப் பெற்றவர் அதிபர் தேர்தலில் போட்டியிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமாரசாமி வெற்றிக்கிண்ணக் கிரிக்கெட்

### பற்றீசியன்ஸ் வி.க. 9 விக்கெட்டுக்களால் வெற்றி

வலி.வடக்கு, ஒக.16

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பி.எஸ். குமாரசுவாமி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் பற்றீசியன் விளையாட்டுக் கழகம் 9 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் பற்றீசியன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை விளையாட்டுக் கழகம் 15 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்கள் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. வதுசனன் 39, நீதன் 14 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 5 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சஜீவன் 2 ஓவர்களில் 7 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் எரிக்பிரதாப் 2.4 ஓவர்களில் 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் பத்மமுரளி 3 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நோபேட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

85 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் 9 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 88 ஓட்டங்களைப்பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. ரியுடர் 52, சில்ரன் 20 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 14 ஓட்டங்களும் பெறப்பட்டன. அரியாலை விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த வதுசனன் 2 ஓவர்களில் 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற் றினார். (ம-86)

## வடமராட்சி ஈகில் வெற்றி

வலி.வடக்கு, ஒக.16

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் பி.எஸ். குமாரசுவாமி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட அணிகளிடையே ருவென்ரி 20 கிரிக்கெட் ஆட்டம் ஒன்றை நடத்தியது.

இதில் வடமராட்சி ஈகிள் விளையாட்டுக் கழகம் 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டம் ஒன்றில் சுன்னாகம் ஸ்கந்த ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், வடமராட்சி ஈகிள் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஈகிள் விளையாட்டுக்கழகம் 15 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது.

நிசாந் 29, செந்தூரன் 14 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரஜீவன் 3 ஓவர்களில் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் விஷ்ணு 3 ஓவர்களில் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சஞ்சயன், தஜீபன் முறையே 18,10 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்கள்.

98 ஓட்டங்களுக்கு வெற்றி இலக்கைக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 15 ஓவர்களில் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்கள் மட்டும் பெற்றது.

வடமராட்சி ஈகிள் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த அசோக் 3 ஓவர்களில் 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் நிரூசன், ஜீவகன் தலா மூன்று ஓவர்களில் முறையே 5,21ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டைக்கைப்பற்றினர். (ம-86)



மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ். மாவட்ட கரப்பந் தாட்ட அணிகளுக்கிடையே நடத்திய 'செற்றப்' கரப்பந் தாட்டச் சுற்றுப்போட்டி இறுதியாட்டத்தில் சிறந்த வீரனாகத் தெரிவு செய்யப்பட்ட ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த றொசானுக்கு சரசாலை வடக்கு கிராம அலுவலர் க.முல் லைமாறன் விருது வழங்குகிறார். (ம-23)

## விளையாட்டு உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக.16

வடமாகாண கல்வித் திணைக் களத்தால் பாடசாலை மட்டத்தில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு தடை தாண்டல் உபகரணம் வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக விளையாட்டு உபகரணங்களை பாடசாலைகளின் தேவை கருதி வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மூலம் வழங்கி வருகின்றார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கடந்த யுத்த அனர்த்தங்களால் விளையாட்டு உபகரணங்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

அதிக மாணவர்கள் கல்வி கற்கும் இந்த நிலையில் 60 தடைதாண்டல் சட்டங்கள் வழங்கப்பட்டுள்ளமை பாடசாலையின் விளையாட்டு அபிவிருத்திக்குப் பெரும் உதவியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக.16

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அங்கத்தவர்களுக்கு இடையே எதிர்வரும் 20,21 ஆம் திகதிகளில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

20 வயதுக்கு கீழ், 20 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டோர், 50 வயதுக்கு மேற்பட்டோர் என்ற அடிப்படையில் போட்டிகள் நடத்தப் படவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)


## சீனியர் இன்ரலீக் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக.16

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் 2011 ஆம் ஆண்டுக்கான சீனியர் இன்ரலீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தவுள்ளது.

இதில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறஇருக்கும் ஆட்டத்தில் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் தெரிவு அணியை எதிர்த்து யாழ். உதைபந்தாட்ட லீக் தெரிவு அணி மோதவுள்ளது.

இதேவேளை, வவுனியா உதை பந்தாட்ட லிக் அணிக்கும் பொலநறுவை உதைபந்தாட்ட லீக் அணிக்கும் இடையிலான போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பொலநறுவையில் இடம்பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)



சோட்டோகான் கூ கென் ரியு கராத்தே தோ சங்கத்தால் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கராத்தே சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த யூடின் சிந்துஜன் கறுப்புப்பட்டி திறந்த காட்டாப் போட்டியில் வெள்ளிப் பதக்கமும் அன்டன் கபில்தேவ் கறுப்புப்பட்டி திறந்த குமித்தே போட்டியில் வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளனர். இந்த வீரர்களுக்கான பயிற்சியை கராத்தே ஆசிரியர் சென்செய் அன்றோ டினேஸ் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

## பாடசாலைகளிடையே கரம் போட்டிகள்

வலி.வடக்கு, ஒக.16

இலங்கை கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கைப் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கு கரம் போட்டிகள் அடுத்த மாதம் 8 ஆம், 9 ஆம், 10 ஆம் திகதிகளில் பதுளை விசாகா பாலிகா வித்தியாலய உள்ளக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் வடமாகாணத்தின் சார்பில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு;

**ஆண்கள் 15 வயதுப் பிரிவு**

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.

**பெண்கள் 15 வயதுப் பிரிவு**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வடமராட்சி மத்தி மகளிர் கல்லூரி, வவுனியா வடக்கு சுதந்திரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

**19 வயதுப் பிரிவு**

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி மத்தி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. (ம-86)



யாழ்.மாவட்ட முன்பள்ளி சிறார்களின் " விளையாட்டு அல்ல விளையாட்டு" மழலைகள் விழா நிகழ்வில் கதிரைச்சுவாரியில் முதலாமிடம் பெற்ற கும்பழாவளை முன்பள்ளி சிறுவர்கள் ஆசிரியர்களுடன். (ம)

## கொக்குவில் சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு போட்டிகள்

வலி.வடக்கு, ஒக.16

கொக்குவில் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விலகல் முறையில் நடைபெறவுள்ள இந்தக் கிரிக்கெட் போட்டிக்கு யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தை கொக்குவில் சனசமூக நிலைய விளையாட்டுகழகத்தில் பெற்று எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிரல் ஒழுங்கு 2 ஆம் திகதி மாலை 4 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### "முதலிடம் என்பது முக்கியம் அல்ல"

# தோல்வி குறித்து...





தரவரிசையில் முதலிடம் இருப்பது என்பது முக்கியமானது அல்ல என்று அணித் தலைவர் டோனி கூறியுள்ளார். பர்மிங்ஹாம் டெஸ்ட் ஆட்டத்துக்குப் பின்னர் டோனி தெரிவித்ததாவது,

டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ள இங்கிலாந்து அணிக்கு எனது வாழ்த்துகள். இந்தத் தொடர் தோல்விகள் எனது எண்ணத்தில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்திய அணி எப்போதும் பெருமைக்கு உரிய அணிதான். எங்கள் வீரர்கள் சிறப்பானவர்கள்தான்.

அனைத்து ஆட்டங்களிலும் வெற்றி பெறுவது சாத்தியமில்லாத விடயம். முதலிடத்தில் இருப்பது, அதனைப் பெறுவது போன்றவை முக்கியமல்ல. தொடர்ந்து சிறப்பாக விளையாட வேண்டும் என்பதுதான் முக்கியம். இந்த ஆட்டத்துக்காகவே சிறப்பாகவே பயிற்சி மேற்கொண்டோம். இந்தத் தொடர் எங்களுக்கு சரியாக அமையவில்லை என்று வேண்டுமானால் கூறலாம் என்றார் டோனி. (15)

நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஒருநாள் ஆட்டத்தில் இலங்கை அணித்தலைவர் டில்ஷானின் விக்கெட்டைக் கைப்பற்றிய பிரட் லீ



# வெண்கலம் வென்ற இந்திய ஜோடிகள்

உலக பட்மின்ரன் சம்பியன் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் ஜுவாலா கட்டா, அஷ்வினி பொன்னப்பா ஜோடி வெண்கலப் பதக்கம் வென்றது.

லண்டனில், உலக பட்மின்ரன் சம்பியன் தொடர் நடக்கின்றது. இதன் பெண்கள் இரட்டையர் அரையிறுதியில், இந்தியாவின் ஜுவாலா கட்டா, அஷ்வினி பொன்னப்பா ஜோடி, சீனாவின் குயிங் டியான், யுன்லி ஜாவோ ஜோடியை எதிர்கொண்டது.

இதில் ஜுவாலா-அஷ்வினி ஜோடி 14-21, 16-21 என்ற நேர் செட்டில் தோல்வி அடைந்து இறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது. இருப்பினும், வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது. இதன்மூலம் சுமார் 28 ஆண்டுகளுக்குப் பின்னர், உலக பட்மின்ரன் சாம்பியன் தொடரில் பதக்கம் வென்ற இந்தியர்கள் என்ற பெருமை பெற்றனர். முன்னதாக கடந்த 1983 இல், டென்மார்க்கில் நடந்த இந்தத் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரி வில், பிரகாஷ் படுகோனே வெண்கலம் வென்றிருந்தார். (15)

### அடடே..!

மதி



சும்மா டென்ஷன் பண்ணாதீங்க, சார்! டெண்டுல்கர் 100-வது செஞ்சுரி அடிக்கறது இருக்கட்டும்! வரவர நம்ம டீம் 'டோட்டல்' 100 ரன்னை தாண்டுமான்றதே பெரிய விஷயமா இருக்குது..!

# என்ன செய்யப் போகிறோம்?

*டெஸ்ட் அரங்கில் இந்திய அணியின் வீழ்ச்சி பற்றிக் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றது. இங்கிலாந்துக்கு எதிராகத் தொடர்ந்து 3 டெஸ்டில் தோல்வி அடைந்து, முதலிடத்தை இழந்ததற்கு மோசமான துடுப்பாட்டமே காரணம் என்று தேர்வுக் குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் அடித்துச் சொல்கின்றார். தேசத்தை மறந்து பணம் கொழிக்கும் ஐ.பி.எல் ஆட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுத்ததே தோல்விக்கு வித்திட்டதாகக் கூறப்படுகின்றது. தவறான வீரர்கள் தேர்வு மற்றும் அளவுக்கு அதிகமான கிரிக்கெட் ஆட்டங்களே வீழ்ச்சிக்கு காரணம் என்று, இந்திய கிரிக்கெட் சபை(பி.சி.சி.ஐ) மீதும் பழி சுமத்துகின்றனர். இது பற்றி விரிவாக ஆய்வு செய்ய பி.சி.சி.ஐ முடிவு செய்துள்ளது.*

*உலகக் கிண்ணம் வென்ற டோனி தலைமையிலான இந்திய அணி, தற்போது சரிவை சந்திக்க தொடங்கியுள்ளது. இங்கிலாந்துடனான நான்கு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரை 0-3 என்று இழந்தது. இதையடுத்து டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தை பறிகொடுத்தது. முதலிடத்துக்கு இங்கிலாந்து முன்னேறியது.*

***ஓய்வில்லாத போட்டி:*** *இந்த வீழ்ச்சிக்கு ஓய்வில்லாத போட்டியே காரணம் என்று குற்றம் சாட்டப்படுகின்றது. கடந்த ஒரு ஆண்டில், ஆஸ்திரேலியாவோடு ஒப்பிடுகையில் இந்திய அணி இரண்டு மடங்கு ஆட்டங்களில் பங்கேற்றுள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் கணக்கிட்டால், இந்திய அணி 14 டெஸ்டில் விளையாடியுள்ளது. ஆஸ்திரேலியாவோ 7 டெஸ்டில் தான் பங்கேற்றுள்ளது. இதே போல இந்தியா 29 ஒரு நாள் ஆட்டங்களிலும், ஆஸ்திரேலியா 23 ஒரு நாள் ஆட்டங்களிலும் விளையாடியுள்ளன. இப்படி தொடர்ந்து ஆட்டங்களில் பங்கேற்றதால் பெரும்பாலான இந்திய வீரர்கள் சோர்வடைந்தனர். இதனால் தான் இங்கிலாந்து மண்ணில் சோபிக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது. இதை மறுத்த தேர்வுக்குழு தலைவர் ஸ்ரீகாந்த் கூறியதாவது:*

*இந்திய அணியின் தோல்விக்கு மோசமான துடுப்பாட்டம்தான் முக்கிய காரணம். இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உட்பட அனைத்து அணிகளும் ஆண்டு முழுவதும் கிரிக்கெட் விளையாடிக் கொண்டுதான் இருக்கின்றன. டெஸ்ட், ஒரு நாள் போட்டி, 'ரி-20' என்று ஏதாவது ஒரு வகையிலான ஆட்டங்களில் பங்கேற்கின்றன. எனவே, இந்தியா மட்டும் அதிக ஆட்டங்களில் விளையாடவில்லை.*

*இங்கிலாந்து அணி சிறப்பாக விளையாடியதால், டெஸ்ட் தொடரை கைப்பற்றியது. இதனை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். இந்தியாவை பொறுத்தவரை துடுப்பாட்டம் 'கிளிக்' ஆகவில்லை. முன்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றம் அளித்தனர். பந்து வீச்சு, களத்தடுப்பு நம்மவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு செயற்படத் தவறினர். தங்களுக்கு சாதகமான ஆடுகளங்களில் இங்கிலாந்தின் 'வேகங்கள்' அசத்தினர்.*

*சகிர்கான் காயம் பற்றி அதிகம் விவாதிக்க தேவையில்லை. தோல்விக்கு வீரர்கள் அல்லது பி.சி.சி.ஐ அல்லது நிர்வாகிகள் மீது பழி சுமத்தும் பணியில் ஈடுபட வேண்டாம். தற்போது இந்திய அணி மோசமான காலக்கட்டத்தை நோக்கி செல்கின்றது. நமது வீழ்ச்சிக்கான காரணங்களை கண்டறிந்து விரைவில் முதலிடத்தை மீண்டும் பிடிப்போம். தற்போது இந்திய வீரர்கள் தன்னம்பிக்கை இழந்து காணப்படுகின்றனர். ரசிகர்கள் தான் அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். இவ்வாறு ஸ்ரீகாந்த் கூறினார்.*

***ஐ.பி.எல் பாதிப்பு:*** *அடுத்து, பணம் கொழிக்கும் ஐ.பி.எல் 'ரி-20' ஆட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்தால், இந்திய வீரர்கள் டெஸ்ட் ஆட்டத்துக்கான அணுகுமுறையை மறந்து விட்டனர். டிராவிட்டை தவிர மற்றவர்கள் 'ரி-20' போன்று அதிரடியாக 'ஷொட்' அடித்து ஆட்டமிழந்தனர். தவிர அதிமான ஐ.பி.எல் ஆட்டங்களில் பங்கேற்றதால் சோர்ந்து விட்டனர். சகிர், கம்பீர், சேவக் போன்றவர்களுக்கு காயமும் ஏற்பட்டது.*

***பி.சி.சி.ஐ நடவடிக்கை:*** *டெஸ்ட் ஆட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, வீரர்களை பி.சி.சி.ஐ தேர்வு செய்யாததே தோல்விக்கு காரணம் என்று கூறப்படுகின்றது. இது குறித்து பி.சி.சி.ஐ செயலவர் சீனிவாசன் கூறுகையில், சகிர், சேவக், கம்பீர் ஆகியோருக்கு காயம் ஏற்பட, ஒரு ஆட்டத்தில் கூட இந்தியா முழு பலத்துடன் பங்கேற்க இயலவில்லை. சுமார் 2 ஆண்டுகள் முதலிடத்தில் இருந்த போது யாரும் விமர்சிக்கவில்லை. ஒரு தொடரில் தோற்றவுடன் அனைத்து தரப்பிலும் இருந்து முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது. தேசத்துக்காக விளையாடுவதை தான் வீரர்கள் விரும்புகின்றனர். இந்தியாவுக்காக சிறப்பாக விளையாடாத வீரர்களுக்கு ஐ.பி.எல் தொடரில் 'மவுசு' இருக்காது. இங்கிலாந்து தொடர் முடிந்தவுடன் நமது வீரர்களின் செயற்பாடு குறித்து ஆய்வு செய்யப்படும். பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.*

### முன்னாள் வீரர்கள் பாய்ச்சல்

*டோனி தலைமையிலான அணியின் மோசமான ஆட்டத்தை, இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் கடுமையாக சாடியுள்ளனர். அணிக்கு இளம் ரத்தம் பாய்ச்சப்பட வேண்டுமென்று வலியுறுத்தினர். மூத்த வீரர்களுக்கு விடை கொடுத்து விட்டு விராத் ஹோக்லி, ரோகித் சர்மா போன்ற இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.*

***கங்குலி:*** *டெஸ்ட் போட்டியில் தோல்வி அடைவது சகஜம். ஆனால், வரிசையாக மூன்று ஆட்டங்களில் தோல்வி, மிகப் பெரும் 'ஸ்கோரை' எட்ட முடியாதது வருத்தம் அளிக்கின்றது. இது, இந்தத் தொடருடன் முடிந்து விடுமா அல்லது வீழ்ச்சியின் தொடக்கமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.*

***கும்ளே:*** *அனுபவ வீரர்களான சச்சின், டிராவிட், லக்ஸ்மன் ஆகியோரது ஓய்வுக்கு பின்னர் டெஸ்ட் அரங்கில் இந்தியாவின் நிலைமை இன்னும் மோசமடையும். எதிர்காலத்தை கணக்கில் கொண்டு, தற்போதே நான்கு அல்லது ஐந்து இளம் வீரர்களை கண்டறிய வேண்டும். விராத் ஹோக்லி, ரோகித் சர்மா போன்றவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.*

***அருண் லால்:*** *இங்கிலாந்து மண்ணில் சந்தித்த தோல்வி, இந்திய அணிக்கு எச்சரிக்கை மணியாக அமைந்துள்ளது. 35 அல்லது 38 வயதான வீரர்களுடன் இனியும் விளையாடுவதில் அர்த்தமில்லை. இவர்களுக்கு கண் பார்வை குறைவு, உடல் சோர்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இவர்களுக்கு பதில் இளம் வீரர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும்.*

***வினோத் காம்ப்ளி:*** *இங்கிலாந்தின் ஸ்ரோரசுடன் ஒப்பிடுகையில் அணித்தலைவரான டோனியின் வியூகம் எடுபடவில்லை. தவறான திட்டங்களை வகுத்தார். சச்சினின் கிரிக்கெட் வாழ்க்கையில், இந்தத் தொடர் தான் மிக மோசமானதாக அமைந்தது.*

***வெங்கசர்க்கார்:*** *முன்னணி பந்து வீச்சாளர்களுக்கு காயம், எளிய பிடியெடுக்கும் வாய்ப்புகளை கோட்டை விட்டது போன்றவை சிக்கலை ஏற்படுத்தியது. லோர்ட்ஸ் டெஸ்டில் அணித்தலைவர் டோனியே பந்து வீச்சு செய்ய வேண்டிய பரிதாப நிலைமையை காண முடிந்தது. வீரர்கள் மத்தியில் வெற்றித் தாகம், போராடும் குணம் இல்லாததே தோல்விக்கு காரணம்.* *(15)*

# நீண்டநாள் ஆசை நிறைவேறியது

டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடிக்க வேண்டுமென்ற எங்கள் நீண்டநாள் ஆசை நிறைவேறிவிட்டது என்று இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோரஸ் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

டெஸ்ட் ஆட்டதில் எங்கள் அணிதான் சிறந்தது என்பது மகிழ்ச்சியளிக்கின்றது. மிகவும் கவனத்துடனும், திட்டமிட்டும் இந்த டெஸ்ட் தொடரில் வெற்றி பெற்றுள்ளோம். டெஸ்ட் ஆட்டத்தில் எப்படி விளையாட வேண்டும் என்பதற்கு எங்களுக்கு இந்த ஆட்டம் உதாரணமாக அமைந்தது. தரவரிசையில் முதலிடம் பெற்றது பெருமை அளிக்கிறது. அணி வீரர்களின் கடுமையான பயிற்சிக்கும், கூட்டு முயற்சிக்கும் கிடைத்த வெற்றி இது -என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
16 ஒகஸ்ட் 2011 செவ்வாய்க்கிழமை

## அந்தணப் பெரியோர்களுக்கு

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அந்தணர்களின் பெயர் விவரம் அடங்கிய தொலைபேசி விவரக்கொத்து வெளியிட இருப்பதால் வலிகாமம், தீவகம், வடமராட்சி, தென்மராட்சியிலுள்ள அந்தணர்கள் தங்களது பெயர் விலாசம், நிரந்தர தொலைபேசி இலக்கம், கைத்தொலைபேசி இலக்கம், ஈமெயில் போன்ற விவரங்களைக் கீழ்வரும் முகவரிக்கோ அல்லது SMS மூலமோ E.MAILமூலமோ ஆங்கிலத்தில் (01.09.2011) இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

சா.சோமசபேசக்குருங்கள் "ஸ்ரீவித்யா", இணுவில் கிழக்கு, சுன்னாகம்.
E.MAIL somasabesakurukkal@ yahoo.com.
T.P: 0777111439

## பொது அறிவித்தல்

இல: 103, புங்கங்குளம் றோட், யாழ்ப்பாணம் தற்பொழுது பிரான்சில் வசிக்கும் அமரசிங்கம் ஜீவனிலதா ஆகியவர் இல: 80 புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த Dr. மைலூ குணரத்தினம் பெண் சந்திராணி அவர்களுக்கு 22.12.2005 இல் சொலிசிஸ்ரர் திருமதி எம்.உமாசுதன் பிரான்ஸ் முன்னிலையில் ஒப்பங்கள் வைக்கப்பட்ட அற்றோனி தத்துவப் பத்திரிகை 01.01.2011 இல் இருந்து ரத்து செய்துள்ளேன். இந்த அறிவித்தல் பொதுமக்களின் நலனுக்காக பகிரங்கப்படுத்துகிறேன்.

அமரசிங்கம், ஜீவனில்தா.

## கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேச செயலகத்தில்
சமுர்த்தி அலுவலராகப் பணிபுரியும்
வ.கிரிதரன் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி வர்ணகுலசிங்கம் தேவகி

காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்,
நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம், வேலணை.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் இராசையா பஞ்சலிங்கம் (B.A) (இரா.பஞ்சு)

"மாண்டவரெல்லாம் மானிடரல்ல
வான் உறையும் தெய்வங்களே"



தாய் மடியில்
08.09.1949

தரணி அடியில்
18.07.2011

கடந்த 18.07.2011 அன்று கண்துஞ்சிய எம் குலவிளக்கு அமரர் இராசையா பஞ்சலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (17.08.2011) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் திருநாவலூர் தெனியம்மன் கோயில் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெற்று உருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பின்னர் முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் சபீண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தயவுசெய்து தனிப்பட்ட அழைப்புக்கள் கிடைக்கப்பெறாதோரும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகம் தரவும்.

பூதவராயர் கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

## வணிக பீடத்தின் பீடாதிபதி வேல்நம்பி

யாழ்ப்பாணம், ஒக.16

யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடப் பீடாதிபதியாக பேராசிரியர் தி.வேல்நம்பி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் க.தேவராஜா ஓய்வு பெற்றுச் செல்லும் நிலையில் புதிதாக யாழ். பல்கலைக்கழக கணக்கியல்துறை விரிவுரையாளராக இருந்த இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

(10)

## கிளுவங்கட்டையால் தாக்கப்பட்ட இளைஞர் யாழ். ஆஸ்பத்திரியில்

அளவெட்டி, ஒக.16

கிளுவங்கட்டையால் தாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் கை முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தெல்லிப்பழை சித்தியப் புலியடியைச் சேர்ந்த விஜயகுலசிங்கம் தனுஷ்(வயது -16) என்ற இளைஞனின் இடது கையே முறிந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

குறித்த இளைஞர் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு முன்பாக உள்ள தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தனது தந்தையைப் பார்க்க மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். அவ்வேளை கல்லூரிக்கு முன்பாக இடைமறித்த இனந்தெரியாத நபரினால் பிரஸ்தாப இளைஞன் தாக்கப்பட்டுள்ளார்.

இதனால் இடது கை முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-எ-36)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி புங்கங்குளம் வீதியில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0212263420, 0750699109

## வேலைக்கு ஆள் தேவை

கணினியில் அனுபவமுள்ள,
பழக விரும்பும் பெண்
பிள்ளைகள் உடன் தேவை.
நேரில் வரவும்

இன்று செவ்வாய் மாலை 3-5
மறுநாள் புதன் காலை 8-10

சி.ஹரிஹரன்- இயக்குநர்.
அபிஷேக்
மல்ரி ஸ்பொட் & நெற்கபே
இராமநாதன் கல்லூரி முன்பாக,
மருதனார் மடம். 0217200882

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### வெள்ளையன் இரத்தினசிங்கம்

தோற்றம்
22.11.1968

மறைவு
26.08.2010

திதி: 16.08.2011

என்றும் எங்கள் நெஞ்சில்
நிறைந்திருக்கும்
எங்கள் குடும்ப விளக்கின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி- கௌசலா
பிள்ளைகள்- நிலாணி
நிரோஜன், அனோஜன்
மேனஜன்.

நெல்லியோடை வீதி,
அச்சுவேலி தெற்கு.
(6938)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில்:
30.09.1946

விண்ணில்:
17.07.2011

### அமரர் நாகலிங்கம் செல்வராசா

*கடந்த 17.07.2011 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று [16.08.2011] செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் எங்கள் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*74, பொன்னம்பலம் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி விவேகானந்தன்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி விவேகானந்தன் நேற்று (15.08.2011) திங்கட்கிழமை காலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சின்னத்தங்கச்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் மங்கையர்க்கரசி, மகேஸ்வரி (மலேசியா), நாகேஸ்வரி, பரமேஸ்வரி, சிவானந்தன், காலஞ்சென்ற பரமானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவலிங்கம் (Banker), இராமசாமி (மலேசியா), தர்மலிங்கம் (சோதிடர்), சிவராஜரட்ணம், விநோதினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(6444) சிவராஜரட்ணம் (சிவம்)

## காணவில்லை

கல்வியங்காட்டில் வீடு ஒன்றில் கட்டி வைக்கப்பட்ட மாவெள்ளை நிறமுடைய 08 மாத சினையுடன் கூடிய பசுமாட்டை கடந்த 10.08.2011 தொடக்கம் காணவில்லை. இது பற்றித் தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:-077 912 2942, 077 698 9066.

## தவறிவிட்டது

இணுவில் கிழக்கு. அங்களப்பாயைச் சேர்ந்த சோமசபேச சர்மா வடிவாம் பிகையினுடைய அடையாள அட்டை (இல- 628471169V) நல்லூர் மஞ்சத்திருவிழாவின்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்துக்கு அல்லது 0777710834 இலக்க தொலை பேசிக்கோ அறியத் தரவும். தகுந்த சன்மானம் வழங் கப்படும்.

## அலுவலகப் பாவனைக்கு வீடுகள் தேவை

வீதி வேலைத்திட்டத்துக்கான அலுவலகம் அமைப்பதற்கு மல்லாகம்-குப்பிளான்- புன்னாலைக்கட்டுவன் வீதி அல்லது மல்லாகம்- சூறாவத்தை-புன்னாலைக்கட்டுவன் வீதியில் வீடுகள் வாடகைக்குத் தேவை. குறைந்தது மூன்று அறைகளுடன் இணைந்த மலசலகூடம், மின்சாரம், குழாய் நீர் மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகள் இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு-
திட்ட இணைப்பாளர்,
இல.45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, [illegible]
தொ.பே.இல: 0772209567

## இடமாற்ற அறிவித்தல்

இதுவரை காலமும் இல.356, கஸ்தூரியார் வீதி, (லக்ஷன் பிளாசா கட்டடம்) யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கி வந்த

# P.C. POWER UNIT

என்னும் கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்கள் விற்பனை நிறுவனம் எதிர்வரும் (20.08.2011) சனிக்கிழமை தொடக்கம் இராமநாதன் வீதி, (மிலேனியம் கெஸ்ட் கவுஸ்க்கு அருகில்) யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் என்பதனை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

P.C. பவர் யூனிட்,
[illegible] வீதி, யாழ்ப்பாணம்.

நிர்வாகத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தேகநபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு - களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தாக்குதலின் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

யாழ். கல்வியங்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 'சின்னவன்' என்று அழைக்கப்படும் ரட்ணசிங்கம் ரட்ணகுமார் (வயது-29) என்பவரே, குகா மீதான தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் நேற்று மாலை அளுத்கடை நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

அத்துடன், குகநாதன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுடன் தொடர் புடைய மற்றொரு நபரையும் வார இறுதிக்குள் கைதுசெய்து நீதிமன் றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

கடந்த 5ஆம் திகதி கோப்பாய் பிரதேசத்தில் இடம்பெற்ற மோதலில் படுகாயமடைந்த சந்தேகநபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு 12ஆம் திகதிவரை சிகிச்சை பெற்று வந்தார் என்றும் -

பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்று கொழும்பு - களுபோவில வைத்தியசாலையில் சேர்ந்தார் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

தகவல் அறிந்து யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற விசேட பொலிஸ் குழு ஒன்றே சந்தேகநபரைக் கைது செய்தது என்றும் பொலிஸ் பேச் சாளர் தெரிவித்தார். கைதுசெய்யப்பட்டவர் யாழ். குடாநாட்டில் இடம் பெற்றுள்ள பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனவும் பொலிஸார் கூறுகின்றனர். மேலதிக விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

'உதயன்' செய்தி ஆசிரியர் குகநாதன் கடந்த ஜூலை 29ஆம் திகதி தாக்கப்பட்டார். குகநாதன் மீதான தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்ய விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. சம்பவம் இடம்பெற்று சுமார் 17 நாள்கள் கடந்த நிலையில், இது வரை ஒரு துப்பும் கிடைக்கவில்லை என்று கூறிவந்த பொலிஸார் திடீ ரென நேற்று தாக்குதலின் பிரதான சந்தேகநபரைக் கைதுசெய்ததாக அறிவித்துள்ளனர். (உ)

## நேர்மையான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாசித்துவிட்டு தனது உரையைத் தொடங்கினார் காந்தா. அவர் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசு ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. இந்த நிலை ஏற்படுவதற்குக் காரணமான தலைமைத் துவமும், தூரநோக்கும் நேர்மையான அரசியல் தீர்வொன்றை அடைந்து கொள்ள வழிவகுக்கும் என்று நாம் நம்புகிறோம். அந்தத் தீர்வை அரசு வழங்கவேண்டும்.

இலங்கை அரசு வடக்குத் தமிழர்களின் அபிலாஷைகளை நிறை வேற்றவேண்டும். மக்களின் சமத்துவம் மற்றும் கௌரவம் என்ப ற்றை உறுதிசெய்யும் சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கும், கடந்த கால காயங்களை ஆற்றுவதற்கும் இலங்கை அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஆதரவு வழங்கும்.

இலங்கையின் இறைமை, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கும் நல்லிணக்கத்தின் ஊடாக நிரந்தர சமாதானம் உருவாக்குவதற்கும் இலங்கைக்கு இந்தியா உதவும்.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் புவியியல், கலா சாரம் மற்றும் நீண்டகால வரலாற்றுரீதியான உறவுகளால் பிணைக் கப்பட்டுள்ளன. இலங்கையின் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா உதவி வருகின்றது - என்றார்.

**இலங்கை மின்சார சபை-**
**யாழ். பிரதேச அலுவலகம்**
**மின் தடை பற்றிய அறிவித்தல்**

*கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் வீதி அகலிப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை மின் சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனை யாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்ன தாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்துக்கு முன்பும் மின் சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.*

| திகதி | இடங்கள் |
|---|---|
| (17.08.2011) புதன்கிழமை<br>(19.08.2011) வெள்ளிக்கிழமை | சுன்னாகம், குப்பிளான், மயிலங் காடு, ஏழாலை, காங்கேசன் துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதி. |
| (20.08.2011) சனிக்கிழமை | உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிர தேசம், திருநெல்வேலிப்பிரதேசம், பட்டனப்ப குதி, நீங்கலாக யாழ். மாநகர சபை பகுதி. ஸ்ரான்லி வீதி. |
| (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை | சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு. இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழி புரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக் குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம பயன்மணல் பிரதேசம், யாழ். பட்டனப் பகுதி, புன்னா லைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சு வேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம். |

**இதனால் மின் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.**

**மின் பொறியியலாளர்,**
**யாழ். பிரதேச அலுவலகம்,**
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கை கொடுக்கும் இலங்கை மின்சார சபை."

## கடற்படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டங்களிலும் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப் பட்ட 25 பேர் பின்னர் பொலிஸ் பிணை யில் விடுவிக்கப்பட்டனர்.

### கிண்ணியா சம்பவம்

பைசல் நகர்ப்பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10மணியளவில் பெண்ணொருவரைத் தாக்கிவிட்டுத் தப்பிச் செல்ல முயன்ற மர்ம நபர்களை இளைஞர் கள் சிலர் விரட்டினர்.

மர்ம மனிதர்கள் கார் ஒன்றில் ஏறிச் செல் வதை அவதானித்த இளைஞர்கள் அந்த வாகனத்தைப் பின்தொடர்ந்து சென்றனர்.

கிண்ணியா பழைய வைத்தியசாலைக்கு முன்னாலுள்ள சிறுவர் பூங்காவின் அருகில் வாகனம் வழி மறிக்கப்பட்டதும் மர்ம மனிதர் கள் வாகனத்தைக் கைவிட்டு விட்டு அருகி லுள்ள கடற்படை முகாமுக்குள் ஓடி மறைந்த னர். "அந்தக் குற்றவாளிகளை எம்மிடம் ஒப்ப டைக்கும்படி நாம் கடற்படையினரிடம்கோரிய போது, அவர்கள் மறுத்து விட்டனர். அந்த மூவரும் தமது படையினர் என்று அவர்கள் தெரிவித்தனர். அதனால் நாங்கள் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டோம். கடற்படையினர் சுட் டார்கள்" என்றார் தனது பெயரை வெளியிடக் கூடாது என்ற நிபந்தனையுடன் பேசிய ஒருவர்.

ஓடிமறைந்த மர்ம மனிதர்களைத் தம்மி டம் ஒப்படைக்குமாறு கோரி சுமார் 800இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை அடக்க பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டனர்.

"நள்ளிரவில் கடற்படை வாகனம் ஒன்று முகாமுக்குள் நுழைந்துள்ளது. அதனைத் தொடர்ந்து வந்த கும்பல் ஒன்று வாகனத் தையும் அதிலிருந்தவர்களையும் தம்மிடம் ஒப்படைக்கும்படி கேட்டு ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டது" என்று தெரிவித்தார் கடற் படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய. ஆர்ப்பாட்டக்காரர்க ளைக் கட்டுப்படுத்த வந்த பொலிஸார் மீதும் மக்கள் கற்களை வீசித் தாக்கினர். பதிலுக்கு பொலிஸாரும் மக்களை விரட்டி விரட்டித் தாக்கினர். இதில் உதவிப் பொலிஸ் அத்தியட் சகர் உட்பட மூன்று பொலிஸார் படுகாயம் அடைந்தனர்.

கலவரத்தைக் கட்டுப்படுத்த மேலதிகப் படையினரும், கலகம் அடக்கும் பொலிஸா ரும் வரவழைக்கப்பட்டனர். இதையடுத்து பொதுமக்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இரவு 12 மணி தொடக்கம் 2 மணிவரை நீடித்த இந்தக் கலவரத்தினால் பொதுமக் கள் பலர் காயமடைந்தனர். காலையிலும் மக்களின் போராட்டம் தொடர்ந்தது.

### மறியல் போராட்டம்

பிரதேசத்தில் அமைதியை நிலை நாட் டுவதற்காக உயர்மட்ட அதிகாரிகளும் அரசியல் பிரமுகர்களும் கிண்ணியா பிரதேச செயலகத்தில் கூட்டம் நடத்திய வேளையில், அங்கு திரண்ட பொதுமக் கள் அவர்களை வெளியில் வர அனுமதிக்காது மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு திருகோணமலை அரச அதிபர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ரஞ்சித் டி சில்வாவும் இருந்தார். கைதான பொதுமக் கள் 25 பேரையும் விடுவிக்க வேண்டும் என்று மறியலில் ஈடுபட்ட மக்கள் கோஷ மிட்டனர். போராட்டத்தைத் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டிருந்த 25 பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, கொழும்பிலிருந்து அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ரிசாத் பத்யூதீன் மற்றும் பௌசி உள்ளிட்ட உயர் மட்ட பிரமுகர்கள் பலரும் கிண்ணியா பகுதிக்கு நேரில் வந்து நிலைமைகளை ஆராய்ந் தனர். மக்களை அமைதியாக இருக்குமாறு அவர்கள் கேட்டுக் கொண்டனர். (உ)

## கச்சதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று கோரியே தாம் இந்தப் போராட்டத்தில் ஈடுபட இருப்பதாகவும் அந்தக் கட்சி அறிவித்திருந்தது.

இதனை அடுத்து தமிழகக் கரையோரப் பகுதிகளில் பொலிஸார் கண்காணிப்பைப் பலப்படுத்தி இருந்தனர்.

இராமநாதபுரத்தில் மீன்பிடித்துறையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இந்து மக்கள் கட்சியின் தமிழ் நாடு தலைவர் அண்ணாத்துரை உட்பட 43 பேரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ)

**ENGLISH** *Personal Class*
யாழ். நகரிலும் அண்மித்த
பிரதேசங்களிலும் மட்டும்
By- Mr.Ainkaran,
B.A(Hons) HN Dip. in English.
[illegible]

## சட்டத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கர்தினால் மல்கம் ரஞ்சித்.

இந்த நாடு சட்டத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட போதும் மனித இத யங்களில் பிரிந்து - பிளந்து - போய்க் கிடக்கிறது என்று தெரிவித் துள்ள அவர், வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்க ளுக்கு உரிமைகளை வழங்குவது பற்றி சிங்களவர்கள் சிந்திக்க வேண் டிய நேரம் வந்து விட்டது என்றும் தெரிவித்திருக்கிறார்.

மடுத் தேவாலயத் திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்ட கர்தினால் மல்கம் ரஞ்சித், தனது திருப் பலி உரையில் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை மீது அனைத்துலக சமூகம் கொடுத்து வரும் அழுத் தங்களுக்குப் புத்திசாலித்தனமான பிரதிபலிப்பை வழங்கவேண் டும் என்று கர்தினால் வலியுறுத்தினார்.

"எல்லாவற்றையும் நாங்கள் நிராகரித்துக் கொண்டே இருந்தால், மிகச்சிறிய தீவான இந்த நாடு இலகுவில் தனிமைப்படுத்தப்பட்டுவிடும்" என்றார் அவர்.

"ஆயுதங்களால் நடத்தப்பட்டுவந்த போர் முடிந்துவிட்டது. ஆனால், தேசிய சுயநலத்துக்கு எதிரான போர் இனித் தொடங்கப்பட வேண்டும்.

"முடிவடைந்த போரைவிட இனி வரப்போகும் போர் மிகக் கடின மானது; சிக்கலானது. சிங்களவர்களாகிய நாங்கள், வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

"சிறுபான்மையினர் எப்போதும் பெரும்பான்மையினருக்கு அச்சுறுத் தலாகவே இருப்பார்கள் என்ற அச்சத்தில் இருந்து சிங்களவர்கள் வெளியே வரவேண்டும்.

"வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களின் மனங்களை சிங்களவர் கள் வெல்வது மிக முக்கியம். இல்லையேல் மற்றொரு இரத்தக்களரி இந்த நாட்டில் ஏற்படுவதைத் தடுக்க முடியாது போய்விடும்" - என்றார் கர்தினால் மல்கம் ரஞ்சித். (உ)

## கூட்டமைப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான 10ஆம் கட்டப் பேச்சுகள் கடந்த 4ஆம் திகதி நடைபெற்றன. இதன் போது, மூன்று அம்ச கோரிக்கைகளை முன் வைத்து, இரண்டு வாரங்களுக்குள் பதில் அளிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்குக் காலக்கெடு விதித்தது.

எதிர்வரும் 18ஆம் திகதியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு வழங்கியுள்ள கால அவகாசம் முடிவடைகின்றது.

இந்த நிலையில் அரசிடமிருந்து ஏதாவது பதில் கிடைத்ததா என் றும், பதில் கிடைக்காத பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்றும் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்தி ரனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசிடம் முன்வைத்த மூன்று அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக இன்னும் பதில் எதுவும் கிடைக்க வில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய கால அவகாசம் முடிவடைவதற்கு இன்னும் மூன்று நாள்கள் உள்ளன. அதுவரை பொறுத்திருந்து பார்ப்போம்.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அரசு தனது உத்தியோகபூர்வ பதிலை தெரியப்படுத்தாவிடின், எங்களுடன் பேச்சு நடத்துவதற்கு அவர் களுக்கு விருப்பம் இல்லை என்பதையே அது எடுத்துக்காட்டும்.

அதேவேளை, கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்குப் பதில் அளிப் பதற்கு அரசுக்கு இன்னும் கால அவகாசம் தேவைப்படின் எம்முடன் பேசி அதனைப் பெற்றுக்கொள்ளலாம். அதிலும், ஏற்றுக் கொள்ளக் கூடிய பதில் கிடைக்காத பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க நேரிடும் - என்றார்.

### சம்பிக்கவின் கூற்றுக்குப் பதிலடி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனைகளுக்குப் பயந்து தீர்வை முன் வைக்க முடியாது என அரசின் பங்காளி கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்திருந்தார்.

இவரின் கூற்றுத் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட சுரேஷ் எம்.பி., "நாம் இலங்கை அரசுடனேயே பேச்சு நடத்துகின்றோம் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுடன் அல்ல" என்றார்.

கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம் அவருக்கு உண்டு. எனவே, அவரின் கூற்றுத் தொடர்பாக நாம் அலட்டிக்கொள்ளப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

**பரந்தன் மத்திய விளையாட்டுக் கழகம்**

*பரந்தன் மத்திய விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் 11 பேர் கொண்ட உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கிளிநொச்சி மாவட்ட உ.லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்கள் 19.08.2011 ஆம் நாளுக்கு முன் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.*

1) **Jaffna Electrical** கொமர்ஷல் வங்கி முன்பாக, கிளிநொச்சி.
2) காமீஸ் தையலகம், முல்லை வீதி, பரந்தன்.

**போட்டிக்கான அனுசரணை-**
த.சாரிகா லேணர்ஸ், (ஓட்டுநர் பயிற்சிக் கல்லூரி)
கச்சேரி முன்பாக கிளிநொச்சி.

**கட்டாக்காலி மாடுகள் ஏல விற்பனை**

அரியாலை கிழக்கில் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகள் எதிர்வரும் 18.08.2011 வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு அரியாலை கிழக்கு பகுதியில் ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்கள் உடனடியாகவே ஏலத் தொகையைச் செலுத்துவதுடன் ஏலம் விடப்படும் இடத்திலிருந்து மாடுகளை தாமதிக்காமல் எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

செயலர், நல்லூர் பிரதேசசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**PHYSICS A/L 2012**

| PAPER CLASS | புலங்கள் |
|---|---|
| ஆர 17.08.2011 புதன் 7.00 pm | ஆர 17.08.2011 12.00 - 1.00 pm |
| மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். | BEACON Jaffna Twon |

திரு.ம.ஸ்ரேஸ்மன் B.Sc
personal class ஆக
எடுக்க விரும்பின் T.P- 0776116724

## நாளை மின் தடை

யாழ்ப்பாணம், ஒக.16

யாழ். மாவட்டத்தில் சில இடங்களில் மின்சார பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

நாளை 17 ஆம் திகதி புதன்கிழமையும், எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக் கிழமையும் சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயம் போன்ற இடங்களில் மின்சாரம் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

(எ)

## வெல்டர் தேவை

எமது நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள வெல்டர்ஸ் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

1. கேற், கிறில் வேலைகளிலும்
2. காஸ் வெல்டிங் வேலைகளிலும் 03 வருட அனுபவம் உள்ளவர்களும்.
3. சாதாரண வெல்டிங் வேலைகளிலும் முன் அனுபவம் (03 வருடம்) உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
4. வெல்டிங் வேலை பழகுபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**பயிற்சிக்கான காலத்தில் சம்பளம் வழங்கப்படும்.**

**நேர்முகநேரம்:- காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையும். (வெள்ளி, சனி மாத்திரம்)**

லக்சுமி - என்ஜினியரிங்,
ராஜவீதி,
திருநெல்வேலி.

தொலைபேசி இலக்கம்:-
0215670256

## vacancy

வடமராட்சியில் இயங்கும் கொங்கிறீட் உற்பத்தி நிறுவனத்துக்கு ஆண் முகாமையாளர் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவராகவும் குறைந்தது 5 வருட முன் அனுபவமும், கணினி, ஆங்கில அறிவும் உடையவராகவும் இருத்தல் வேண்டும். வடமராட்சிப் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விவரங்களுக்கு: 0772938799

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன கணக்காய்வாளரான உரும்பிராயைச் சேர்ந்த வீஜயரட்ணம் அவர்களது அன்புத் துணைவி

**விஜயரத்தினம் சத்தியதேவி**

அவர்கள் நேற்று (15.08.2011) திங்கட்கிழமை இயற்கை மரணம் எய்தினார் என்பதனை கேள்வியுற்று மிகவும் வேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஸ்தாபனத்தின் உரிமையளாரும் ஊழியர்களும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*ச.வி.முருகேசு*
*இல: 154,ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

உரிமையாளரும்,
ஊழியர்களும்.

## பொருளியல்

By - S. வரதராஜன்
ஆரம்பம்:- 17.08.2011 புதன்
A/L 2012 4.00 மணிக்கு
A/L 2013 5.00 மணிக்கு

ஸ்ரார் கல்வி நிலையம், சுன்னாகம்.

Deutsch
## ஜேர்மன் மொழி கற்க இலகு வசதி

இதோ ஆரம்பமாகிறது 18.08.2011 உங்கள்
விக்னா கல்வி நிறுவனத்தில்
நேரம் - 9.00 - 11. மணிவரை.
இது ஓர் நல்ல சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்.

52, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
T.P- 0771193227,0776629137

## பணியாளர்கள் தேவை

*யாழ்.நகரில்* **Transport Company, Hotel** *ஆகியவற்றுக்கு கீழ்க் காணும் பணிநிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

1. காசாளர்
2. லொறிச்சாரதி
3. லொறி உதவியாளர் (கிளினர்)
4. தோட்டப் பராமரிப்பாளர்
5. றூம் போய்ஸ் (Room Boys)
6. காவலாளி

*விண்ணப்பங்களை 25.08.2011 இற்கு முன்னராக கீழ்க் காணும் முகவரிக்கு தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.*

முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விளம்பர இல: 4148, மே/பா உதயன்.

## மரண அறிவித்தல்

### அருளையா ஜெயேந்திரன்
### (பண்டா ஐயா)



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், V.M.றோட்டைச் சேர்ந்தவரும், தற்போது தும்பளை வீதி, பருத்தித்துறையில் வசித்த வருமான அருளையா ஜெயேந்திரன் நேற்று (15.08.2011) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளையா - தில்லைநாயகி தம்பதியரின் அன்பு மகனும், இந்திராதேவியின் (வண்ணக்கிளி) அன்புக் கணவரும் காலஞ் சென்ற சொக்கலிங்கம்- செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், புலேந்திரன் அவர்களின் அன்புச் சகோதரனும், ஜெயசுதா (சமுர்த்திவங்கி, பருத்தித்துறை), ஜெயகரன் (லண்டன்), ஜெயமதி, ஜெயலதா, ஜெயச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், முகுந்தன் (J,M.ரெஸ் ரோறண்ட், தும்பளை), சிவநந்தினி (லண்ட ன்), புவனேஸ்வரன் (S.P.M -பிறிண்டேர்ஸ்), சுரேஸ்வரன் (சுவிஸ்) ஆகி யோரின் அன்பு மாமனும், சுமித்தா, சன்ஜூ, மதுஷா, ஜெசிந்தன், சாருஜன், மதுமிதா, ஹரிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2011) செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் தும்பளை வீதி, பருத்தித்துறையில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணிக்கு சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தும்பளை வீதி,**
**பருத்தித்துறை.**

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயரத்தினம் சத்தியதேவி



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயரத்தினம் சத்திய தேவி நேற்று (15.08.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் விஜயரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான தம்பிப்பிள்ளை - மகிழ்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசதுரை - அன்னரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயந்தன் (சுவிஸ்), அகிலன் (ஜேர்மனி), தீபா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சுகிர்தா, ஞானேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், சர்வானந்தம், சாரதா தேவி, சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வ ராசா (பேபி), காலஞ்சென்ற அரியரத்தினம் (ஹற்றன்), யோகேஸ்வரன் (சுவின்), ஸ்ரீகாந்தன் (ஹற்றன்), ஸ்ரீசண்முகராசா (கனடா), ஜெயமலர், இந்திராதேவி ஆகியோரின் மைத்துனியும், அரிசன், அக்சியா, பதிமிதன், கன்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு எருளன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org